# முருகன் தலம் முப்பது

ஏ. பி. நாகராஜன்.

தொகுப்பாசிரியர்
"செந்தில் துறவி"

சாஸ்தா பதிப்பகம்
Sastha Publications

50, கிழக்கு ரதவீதி, திருச்செந்தூர். | 4/1, போயஸ் சாலை, சென்னை-18.

மூன்றும் பதிப்பு : ஆகஸ்ட், 1970

உரிமை :
சாஸ்தா பதிப்பகம்
(Sastha Publications)
MADRAS-53

விலை ரூ. 1-50

அச்சிட்டது :
முல்லை அச்சகம், சென்னை-14.

## பல்லவி

மனம் ஒரு நினைவாக நினைவொரு உணர்வாக
உணர்வொரு உயிராக உருவானவா !—முருகா
உயர்தனி முதல்வோனின் குருவானவா !—முருகா
(மனம் ஒரு...)

## அனுபல்லவி

பனிமலர் மணமாக பருகிடும் அமுதாக
இனிமையின் எழிலாக எனை ஆண்டவா !—முருகா
(மனம் ஒரு...)

## சரணங்கள்

1. கண்ணிமை நீ வரும் வாசல்—பொன்னின
காலணிகள் தரும் ஓசை—உன்றன்
புன்னகையில் எதிரொலிக்க—அங்குப்
பொன்மயிலின் சதிரொலிக்கும்
(மனம் ஒரு...)

2. வந்தமர்ந்து கோயில் கொள்ள—நான்
வைத்திருக்கும் இடம் அறிந்தே—உன்றன்
சுந்தரப் பூஞ்சுடர் முகத்தில்—மெல்லத்
துள்ளி வரும் சிரிப்பென்ன ?
(மனம் ஒரு...)

3. கோயில் கொள்ளும் இடம் கோடி—அதில்
குன்றிருக்கும் இடம் தேடி—நின்ற
மாயன்மருகா முருகா—குற
வள்ளிமணாளா குஹா !
(மனம் ஒரு...)

4. தெய்வமென வேண்டியுன்னை—இங்குத்
தீந்தமிழி லேதொழுவார்—என்றன்
பையலெனப் பார்த்தவுனை—இன்னும்
பார்க்கக் கண்கள் தேடுதடா !
(மனம் ஒரு...)

(வேறு)

5. வடிவேலின் ஒளிக்கையில்—நான்
வரமாக வருவேனோ—உன்னை

மடிமீது விளையாடும் செல்ல
மகனுக்கி மகிழ்வேனோ...

(மனம் ஒரு...)

6. திருநீற்று முகம் சிந்தும்—உன்றன்
தெளிவான அருள் கண்டு—இங்குப்
பெரும்பேறு அதில் வேறு—இன்னும்
பெரிதான தெது கூறு !...

(மனம் ஒரு...)

7. தேவர் குறை தீர்க்க வந்த—திருச்
செந்தில் உறை திருக்குமரா—எங்கள்
காவலெனும் கந்தவேளே !—தமிழ்க்
காவியத்தின் பெருந் தலைவா !...

(மனம் ஒரு...)

8. கொண்டல் தவழ் கூத்தலிடை—நின்று
கொஞ்சு மயில் இறகாட—உன்றன்
வண்டுவிழி தனில் என்னை—இன்று
கண்டுகொண்டே சிலிர்த்தேன் !...

(மனம் ஒரு...)

9. அன்புப்பழ மாகி நின்றும்—அங்கே
ஆண்டியெனும் கோலம்கொண்டே—இந்த
மன்பதையின் மாயை இருள்—நீங்க
வாழ்த்தி நின்றவா சண்முகா...

(மனம் ஒரு...)

10. ஐயனருட் பெருஞ்சுடரில்—இங்கு
ஆறுமுக மாய்ப் பிறந்த—இன்பம்
மெய்யறிவின் ஒளிப் புனலே—உன்னில்
மேலொருவர் வேறெவரே !...

(மனம் ஒரு...)

11, முதலுக்கு முதலாக—இங்கு
முழுமைக்கோர் அளவாக வேண்டும்
உதவிக்குத் துணையாக—வரும்
ஓம் சரவண பவனே !...

(மனம் ஒரு...)

"மதி ஒளி"




ஹோப் & கம்பெனி

......மதறாஸ்-3.......

- வருடத்திற்கொரு முறை
**வசந்தம்**
கனிவகை தந்திடும் . . .

- வருட முழுவதும்
**புரூட்னிக்**
கனிரசம் தந்திடும் . . .




# புரூட்னிக்

கியாஸ் கலவாத
[redacted]

**fruitnik** PRODUCTS

# அழையார் உடையார்

அப்பாச்சி மேட்டில் ஏறிக்கொண்டிருந்தார்கள் ஐயப்பன்மார்கள். கன்னி ஐயப்பனுன நானும் தட்டுத் தடுமாறிக் கொண்டு அவர்களைப் பின்பற்றி நடந்தேன். திடீரென்று கருமேகங்கள் கப்பிக் கொண்டன. ஒரு குளிர்ந்த காற்று வீசி உடல் புழுக்கத்திற்கு இதம் அளித்தது. ஐயன் சந்நிதியை அடையும்வரை இப்படியே இருந்தால் தேவலே என்ற எண்ணம் எல்லோர் மனத்திலும் ஏற்பட்டிருக்கவேண்டும். இரண்டொரு சிறு தூறல் அங்கும் இங்குமாக விழுந்தது. மழை வந்துவிடுமோ என்ற பீதி நடைவேகத்தை அதிகப்படுத்தியது. ஆபத்துக்கு உதவக்கூடியவன் ஆண்டவன்தானே ! 'ஐயப்பா சரணம், சாமி சரணம்!' -குரல் வேகமாகவும் உரக்கவும் எழும்பியது. ஆனுல் ஆபத்தில் சிக்க வைத்து அதிலிருந்து அடியார்களை மீட்பது அவன் திருவிளையாடல் ! அண்டத்தையே பிண்டமாக்கிவிடத் தீர்மானித்தது போன்ற பயங்கர இடியும், கண்ணைப் பறிக்கும் மின்னலும் சபரிமலை பிராந்தியத்தை ஆக்கிரமித்துக் கொண்டன. தொடர்ந்து பேய் மழையும் பிடித்துக் கொண்டது. மூச்சுவிடுவதைக்கூட நிறுத்திவிட்டு, சரணம் விளித்துக்கொண்டு நடந்தோம் ! ஏகோபித்து சரண ஒலி எழும்பியதாலோ என்னவோ, அங்கே காட்டுத் தீ, நில நடுக்கம், பூகம்பம் முதலிய இயற்கையின் கோரதாண்டவங்கள் நிகழவில்லை ! இடி, மின்னல், பேய்மழை பெருங்காற்ருேடு சோதனையை முடித்துக் கொண்டான் ஐயன் !

சொட்டச் சொட்ட நனைந்துகொண்டே இரண்டு மணி நேரம் நடந்து அடையவேண்டிய பொன்னம்பல மேட்டை ஆறுமணி நேரம் நடந்து அடைந்தேன். சேறும் சகதியுமாகியிருந்த தாவளத்தில் "டார்ச்லைட்" வெளிச்சம் ஒன்றே ஆயிரம்கோடி சூரியனுக இருந்தது. களைதீர உட்கார்ந்த சமயம் எதிரில் "டிரான்ஸிஸ்டர்" பெட்டி போன்ற ஒரு பூஜைப் பெட்டிக்குள்ளிருந்து கற்பூர ஜோதி கொழுந்து

விட்டெரிந்ததைக் கண்டேன். அந்த ஜோதியில் சண்முக நாதன் காட்சியளித்தான். பரபரப்போடு எழுந்து சென்று அக்காட்சியைக் கண்ணாரக் கண்டேன். ஜோதியைக் காட்டி தன் இஷ்ட தெய்வமான சண்முகத்தை வழிபட்டுக்கொண் டிருந்தார் ஒரு முருக பக்தர். அவர் பின்னால் நின்று மன மாரக் கரங்குவித்து வணங்கினேன்.

"அஞ்சுமுகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலென வேல் தோன்றும்—நெஞ்சில்
ஒருகால் நினைக்கில் இருகாலும் தோன்றும்
முருகா என்று ஓதுவார் முன்"

என்று வாய்விட்டுப் பாடிக்கொண்டே விழுந்து நமஸ்கரித் தேன். ஆச்சரியத்தோடு என்னைப் பார்த்த முருகபக்தர் சற்று நகர்ந்துகொண்டு, நானும் அங்கே அமர வசதி செய்து கொடுத்தார். தொடர்ந்து கற்பூர ஜோதியில் என்னை ஒரு கணம் எடைபோட்ட அவர், "துறவியாயிருந்தாலும் இங்கு என்னைப்போல் தாங்களும் கன்னிதான் போலிருக்கிறது" என்று தன் நிலையையும் நான் கேளாமலேயே விளக்கிவிட்டு என்னைப் பார்த்தார்.

"ஆமாம், நீங்கள் வழிபடும் சண்முகதெய்வத்தைப் பார்த்தால் என்னுடைய செந்தில் சண்முகம் போலவே இருக்கிறதே !" என்றேன்.

அவர் சிரித்துக்கொண்டே, "அவன் உங்களுடைய செந் தில் சண்முகனாகிவிட்டானா?...உம். முருகனை வழிபடுவோர் அனைவரும் அவனைத் தமது உடைமையாக்கிக் கொண்டு விடு கிறார்கள்...அவனும் அடியார் மனத்தில் அவரவர் விருப்பப் படியே அமர்ந்து விடுகிறான்...! சரி, தங்களைச் செந்திலாண் டவன் சந்நிதியில் பார்த்திருப்பதாக ஒரு ஞாபகம். என் ஊகம் சரிதானா?" என்று கேட்டார்.

"செந்திலாதிபனின் அடிமையான நான், சிறிது காலமாக அவனடியிலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறேன்."

"கிடைத்தற்கரிய பெரும்பாக்கியம் அது. என் சூழ்நிலை அவ்வாறில்லாததால் என் சக்திக்கேற்ப அவனைப் பஞ்சலோகத்தில் விக்கிரகமாக உருவாக்கி என்கூடவே வைத்துக் கொண்டிருக்கிறேன். அதனால் பிறப்புக்கும் இறப்புக்கும் இடையேயுள்ள காலதர்மத்தை நான் நடத்திச் செல்ல அவன் உதவி செய்கிறான். ஆறுமுகத்தானை தினந்தோறும் முப்போதும் வழிபட்டாலேயே என் மனம் ஆறுதல் அடைகிறது."

"போகுமிடங்களிலெல்லாம் பூஜை செய்ய வசதி கிடைக்க வேண்டுமே? எப்படி அது சாத்தியம்?"

"இன்றுவரை இது சாத்தியமா யிருக்கிறது ... அதனாலேயே மனம் விரும்பும் இடங்களுக்கெல்லாம் போய் வந்து கொண்டிருக்கிறேன். சபரிமலை யாத்திரையை மேற்கொண்டதும் கொஞ்சம் கஷ்டமிருக்கும் என்றுதான் நினைத்தேன். ஆனால், அப்படியொன்றும் இல்லை. அவன் அரை உபவாசம் இருக்கிறான்...நான் முழு உபவாசம் இருக்கிறேன்; அவ்வளவு தான்..."

அவர் பேச்சின் உள்ளடக்கம் எனக்கு சரியாக விளங்கவில்லை. "புரியவில்லையே! இம்மாதிரி சந்தர்ப்பத்தில் பழம், கற்கண்டு, வெல்லம், திராட்சை என்று எதாவது தெய்வத்துக்குப் படைத்தால் போதுமல்லவா? நீங்கள் ஏன் முழு உபவாசம் இருக்கவேண்டும்?" என்று கேட்டேன்.

முருக பக்தர் சிரித்துக்கொண்டே, "அவனுக்குப் படைத்ததைத்தான் நான் உண்பது என்று வழக்கமாக வைத்துக் கொண்டுவிட்டேன். இப்பொழுது அவனுக்கு நாலு திராட்சையும், துளசி ஜலமும்தான் நைவேத்தியமாகக் கிடைக்கிறது" என்றார்.

பக்தியில் திளைக்கும் அந்த அடியாருடைய உள்ளப் பாங்கை நினைத்துப் பார்த்தபோது, என் உள்ளம் நெகிழ்ந்தது. "அப்படியானால் இந்த நான்கு நாட்களும் நீங்கள்

ஆகாரம் உட்கொள்ளாமலேயா நடந்து வருகிறீர்கள்? ஆச்சரியமா யிருக்கிறதே!'' என்றேன்.

"சுவாமி! பக்தியில்தானே சக்தி பிறக்கிறது! சக்தி பிறந்து வளர அறுசுவை உண்டியைக் காட்டிலும் பக்திச் சுவை ஒன்றே பன்மடங்கு உதவி செய்யுமல்லவா! ஐயனைத் தரிசிக்க அறுபது மைல் என்ன? அறுநூறு மைல் கூட நடக்கலாமே!''

அவர் எண்ணமும் செயலும் என்னை வியப்பிலாழ்த்தின. அவர் யார், எந்த ஊர் என்பதை அறிந்துகொள்ள மனம் விழைந்தது. ஆனால், அவரிடம் நேரில் கேட்டறிய ஒரு தயக்கம் உண்டாகியது..."நீங்கள் கன்னி ஐயப்பன் என்றீர்களே... வேறு யாரும் வரவில்லையா? என்னைப்போல் நீங்களும் குருசுவாமி உதவியின்றி மலையாத்திரை செய்யும் கன்னி ஐயப்பன்தானோ?'' என்று கேட்டேன்.

"இல்லை: நாங்கள் நாற்பதுபேர் வந்திருக்கிறோம். வழியில் இடி, மின்னலில் அகப்பட்டுக்கொண்டு அவர்கள் மிகவும் அவதிப்பட்டு விட்டார்கள். நாலைந்து பேர் மயக்கம் போட்டு விழுந்து விட்டார்கள். நான் வழக்கமாகச் செய்யும் காலை பூஜைக்குத் தடை ஏற்படக்கூடாது என்பதற்காக குருசுவாமி, வேறு ஒரு கோஷ்டியோடு என்னை இங்கு அனுப்பி வைத்திருக்கிறார். அவர்கள் வந்ததும் 'ஐயப்ப சேவா சமாஜ' முகாமுக்குப் போய்விடுவோம்.ஆமாம் தாங்கள் தனியாகவா வந்திருக்கிறீர்கள் ? எல்லாம் அவன் செயல் ! உம். எங்கள் முகாமிலேயே இருந்துகொள்ள ஆட்சேபம் இல்லாவிட்டால் தாங்களும் எங்கள்கூட வரலாம் '' என்றார்.

" நீங்கள் அழைக்கிறீர்கள். எனக்கும் வருவதில் விருப்பம் தான். மற்றவர்கள் இதை ஏற்கவேண்டுமே !''

" அந்தக் கவலை வேண்டாம். இந்த கோஷ்டிக்கு நான் தான் தலைவன். இதில் முப்பது பேர் கன்னி ஐயப்பன்மார். பத்து பேர் அனுபவசாலிகள். அனுபவசாலிகளில் ஒருத்தரை குருசுவாமியாகத் தேர்ந்தெடுத்திருக்கிறோம். அவருடைய

பொறுப்பெல்லாம் நாளைக் காலையில் ஐயனுக்கு நெய் அபிஷேகம் செய்வித்து எங்களை சாளக்காயம் வரை அழைத்துச் சென்றதும் தீர்ந்து விடுகிறது. அப்புறம் நான்தான் தனி வழியிருந்து பிரயாணத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும்…"

"திரும்புகாலில் உங்களுக்கு ஒரு பிரயாணத் திட்டம் இருப்பதுபோல் தெரிகிறதே! எந்தெந்தத் தலத்திற்குப் போகப் போகிறீர்கள்?"

"எங்கள் கோஷ்டியில் அநேகமாக எல்லோருமே முருக பக்தர்கள். ஆகையால் குறைந்த பட்சம் முப்பது முருகன் ஸ்தலங்களுக்குப் போய் தரிசித்துவிட்டு வீட்டுக்குப் போக வேண்டும் என்று ஒரு திட்டம் இருக்கிறது. அந்தப் பொறுப்பை நான் ஏற்றுக்கொண்ட பிறகே இவர்கள் ஒன்று சேர்ந்திருக்கிறார்கள். சௌகரியமிருந்தால் தாங்களும் வரலாம்…வருகிறீர்களா?"

"குருடனிடம், உனக்குப் பார்வை அளிக்கிறேன் வேண்டுமா, வேண்டாமா என்று கேட்டால், அவன் என்ன சொல்வான்?" நான் கண்ணீர் சுரக்கச் சொல்லியதும், அவர் 'முருகா முருகா' என்று கூவிக்கொண்டே விபூதியை எடுத்துப் பூசிக் கொண்டார்.

இப்படி நாங்கள் பேசிக்கொண்டிருந்த போது இருபது முப்பது "டார்ச்சு லைட்டு"கள் சேர்ந்து ஒரே திசையில் வெளிச்சம் காட்டிக்கொண்டு கும்பலாக வருவதைப் பார்த்து விட்டு நான், "இந்தப் பஞ்ச காலத்தில் ஒரு கோஷ்டியாக வரும்போது எல்லோரும் எதற்காக விளக்கைப் போட வேண்டும்? ஒரு கோஷ்டிக்கு நாலுபேர், மூன்று பேர் வெளிச்சம் காட்டினால் போதாதோ! நம்ம ஜனங்களுக்குச் சிக்கனமே தெரிவதில்லை……" என்று சொல்லி முடிப்பதற்குள் முருக பக்தர், வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தார். "வாருங்கள்! எங்கள் கோஷ்டிக்காரர்கள்தான் வருகிறார்கள். இருட்டிலும் கும்பலிலும் அவர்கள் என்னைக் கண்டு

பிடிக்க முடியாது என்பதற்காக, நான்தான் அவர்களுக்கு இப்படி ஒரு உத்தி சொல்லி வைத்திருந்தேன். 'நீங்கள் கும்ப லாக நடந்து வந்து எல்லாரும் டார்ச்லைட்டை ஒரு திசையில் காட்டுங்கள். நான் அதை அடையாளமாக வைத்துக் கொண்டு எங்கிருந்தாலும் ஓடி வந்து விடுகிறேன்' என்று சொல்லியிருக்கிறேன்......வாருங்கள்'' என்று என்னையும் அழைத்துக் கொண்டு நடந்தார்.

முருக பக்தர் முன் யோசனையோடு நல்ல திட்டங்கள் போடக் கூடியவராயிருக்கிறார் என்று நான் எண்ணமிட்ட போது, நாட்டு நலனுக்காகத் திட்டம் வகுப்பவர் நிறை வேறும்படியான திட்டங்களை வகுத்திருந்தால் இன்று இந்த நாடு இந்த கதியில் இருக்காதல்லவா என்று எனக்குத் தோன்றியது.

அன்று இரவு ஐயப்ப சேவா சமாஜ முகாமில் நடந்த அறிமுகப் படலத்திலிருந்து முருக பக்தரைப்பற்றி நான் மேலும் பல விவரங்கள் அறிந்தேன். தஞ்சை மாவட்டத்தில் மன்னார்குடியில் வசித்துவரும் அவரை,"அடியார் உடையார்'' என்று வாசகர்களுக்கு அறிமுகப்படுத்த ஆசைப்படுகிறேன். இறைவன் உறைவிடத்தைக் கோயில் என அழைக்கிறோம். நமது இதய கமலத்தில் (குகை) அவன் உறைந்திருக்கிறான் என்பதாலேயே "குகன்'' என்ற பெயர் அவனுக்கு வழங்க லாயிற்று. அடியார் உடையாரின் இதயகமலத்தில் அருவாய் இருக்கும் குமரன், சண்முகன் உருவாய் மலர்ந்து, அவர் இல்லத்தில் பூஜை அறையில் இருந்து வருகிறான். அவர் வெளியிடங்களுக்குப் போகும்போது "டிரான்ஸிஸ்டர்'' போன்ற பெட்டிக்குள் அடங்கி ஒடுங்கி வாசம் செய்து கொண்டிருக்கிறான்! அடியார் உடையார் அவருடைய "மொபைல் கோயி''லின்றி அடியெடுத்து வைப்பதில்லை. முருகன் க்ஷேத்திரங்கள் எல்லாம் அவருடைய பாசறை. பட்டி தொட்டிகளில் உள்ள முருகன் கோயில்களையும் அவ்வப்போது வளைய வரும் பக்தர். திட்டமிட்டு முருகன் உபாசனையை நடத்திவரும் ஒரு சிலரில் அடியார் உடை


யாரும் ஒருவர். ஷஷ்டி, விசாகம், கிருத்திகை, செவ்வாய்க் கிழமை எல்லாம் முருகனுக்கு விசேஷ நாட்கள். அந்த நாட்களில் அடியார் உடையார் அவனோடு ஒன்றி விடுகிறார். ஸ்கந்தஷஷ்டி வைபவத்தில் அவன் அபிஷேக தீர்த்தத்தையே ஆகாரமாய்க் கொண்டு, அவன் தியானத்திலேயே பொழுதைக் கழித்து, முப்போதும் திருமேனி தீண்டி விமரிசையாகப் பூஜை செய்து, மௌனமாயிருந்து கொண்டே முருகனடியார் அனைவரோடும் கண்களால் அளவளாவி, பேரின்பத்தை அடைகிறார்.

அத்தகைய ஒரு முருக பக்தரைக் காட்டியருளிய சபரி மலைத் தெய்வத்தை மனமார வாழ்த்திக்கொண்டே, மறு நாள் காலை எட்டு மணி அளவில் ஐயனுக்கு நெய்யபிஷேகம் நடத்தி தரிசனம் செய்த பிறகு, அவன் துணைகொண்டு முருகன் தலம் முப்பதையும் கருத்தில் இருத்தி, சாளக்காயத்தை நோக்கி அந்தக் கோஷ்டியோடு நடந்தேன். தனிவழி நடந்து பதினெட்டாம் படிக்காவலனைக் கண்ட நான் திரும்புகையில், நாற்பது பேர் கொண்ட கோஷ்டியில் நாற்பத்தியோராவது நபராகச் சேர்ந்து கொண்டிருந்தது எனக்கே ஆச்சரியமாக இருந்தது! சாளக்காயத்தில் எங்கள் வருகைக்காகக் காத்திருந்த பிரத்தியேக பஸ்ஸில் நாங்கள் ஏறி அமர்ந்தோம். அடியார் உடையார் என்னிடம் வந்து, "இப்போது ஒரு புது மாதிரியான திட்டம் போட்டிருக்கிறோம். இதன்படி இங்குள்ள அன்பர்கள் அவரவருடைய மாவட்டத்தில் உள்ள முருகன் கோயில்களுக்கு கோஷ்டியை அழைத்துச் செல்லவேண்டும். ஏற்கனவேயே சிலர் இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வைத்திருக்கிறார்கள். முதலில் இங்கிருந்து நாம் கோட்டயம் - திருவனந்தபுரம் வழியாகச் சென்று வள்ளியூர் செல்லுகிறோம். கேரளத்தில் முருகன் கோயில்கள் அதிகம் இல்லை என்று சொல்லுகிறார்கள். தவிர, அதற்கு எதிராக நிரூபணம் செய்ய நம் கோஷ்டியில் கேரள அனுபவம் பெற்றவரும் இல்லை. ஆகவேதான் தமிழகத்தில் வள்ளியூரில் ஆரம்பிக்கிறோம்!" என்றார்:

அடியார் உடையாரின் அபிப்பிராயத்தை மாற்றும் நோக்கத்தோடு நான், "கேரளத்தில் முருகன் கோயில்கள் இல்லை என்று சொல்லிவிட முடியாது. தமிழகம் மாதிரி நிறைய இல்லையே தவிர, பொறுக்குமணிகளாகச் சில கோயில்கள் உள்ளன. போகும் வழியில் கேரள முருகனைக் காட்டும் பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன். இரண்டு, மூன்று தலங்களில் முருகன் இங்கே தனி அரசு நடத்திக் கொண்டிருக்கிறான். இங்கிருந்து வட திசையில் சென்றால், உடுப்பியில் நமது மதாசாரியார்களில் ஒருவரான ஸ்ரீ மத்வர் வழிபட்ட முருகன் கோயில் ஒன்று இருக்கிறது. ஆதிசங்கரரின் அத்வைத சித்தாந்தத்தை ஸ்ரீ மத்வர் எதிர்த்தாரே தவிர, சிவ வழிபாட்டை அவர் எதிர்க்கவில்லை. கண்ணனுக்கு அளித்த ஸ்தானத்தை கந்தனுக்கும் அளித்திருக்கிறார் ஸ்ரீ மத்வர்! இன்று அந்தப் பிரதேசம் கர்நாடக ராஜ்யமாகத் திகழ்ந்தாலும், அன்று பரசுராம க்ஷேத்திரத்தின் கேந்திர ஸ்தானமாகவே இருந்தது. உடுப்பி ஆதிசுப்பிரமணியத்தை இன்னொரு சந்தர்ப்பத்தில் தரிசிக்கலாம். ஆனால், நாம் செல்லும் வழியில் உள்ள இரண்டு முருகன் தலங்களையும் இப்போது பார்த்து விடலாம்" என்று பதில் கூறியதும், "சுவாமி எந்த ஊர்களைப்பற்றிச் சொல்லுகிறார்? மலையாளத்துக்காரர்கள் காரணமில்லாமல் காசு செலவழிப்பவர்கள் இல்லையே! காலத்தை வீணாக்குபவர்கள் இல்லையே! கந்தன் அவர்கள் ஊரிலேயே கோயில் கொண்டெழுந்தருளியிருக்கிறான் என்றால், அவர்கள் ஏன் பழநியாண்டவனைக் குல தெய்வமாக வழிபடுகிறார்கள்? என்னுடைய அனுபவத்தில் இங்கே முருகன் தலங்கள் இருப்பதாக நான் கேள்விப்பட்டதில்லையே?" என்று ஒரு அன்பர் குறுக்கிட்டார்.

அவர் குரலில் இருந்த அழுத்தமும் தீர்மானமும் என்னை அச்சமடையச் செய்யவில்லை. ஏனெனில், நாலைந்து மாதங்களுக்கு முன்புதான் உதயனாபுரத்தில் உள்ள எம்பெருமான் பாலசுப்ரமணியத்தையும், திருவனந்தபுரம் நகர மத்தியில் உள்ள தைக்காடு முருகனையும் நான் தரிசனம் செய்யும் பாக்யகிம் பெற்றிருந்தேன். இந்தக் குறுகிய காலத்தில் அந்த

# REPUTED FOR RELIABLE SERVICE




1. மானோ பிளாக்செட்
2. கப்ளிங் பம்பு
3. கரும்பு ஆலை
4. மின்சார சங்கு
5. மின்சார மோட்டார்
6. பெல்ட பம்பு
7. மோட்டாருடன் பம்பு
8. மல்டி ஸ்டேஜ் பம்பு
9. டொமஸ்டிக் பம்பு

தயாரிப்பாளர் !

போன் : 22935 தந்தி : "பவுண்டரி"

## சுப்பையா பவுண்டரி

அவனாசி ரோடு கோயமுத்தூர்-18


கிளைகள் :

அருணாசல ஆசாரி வீதி, சேலம்-1.

திண்டிவனம் ரோடு, திருவண்ணாமலை.

ஆலயங்களோ அல்லது ஆலய மூர்த்திகளோ அடியார் கூட்டத்தின் கண்ணில் படாமல் மறைந்திருக்க முடியாது. ஆகவே, நானும் சற்று அதிகமான அழுத்தத்தோடேயே அடியார் உடையாரிடம், "கோட்டயத்திற்கு முதலில் வண்டியைவிடச் சொல்லுங்கள், அங்கிருந்து வழியை விசாரித்துக்கொண்டு உதயணுபுரம் போகலாம்......" என்றேன்.

"கேரளத்தில் கந்தன் கோயில்" என்றதுமே திகைத்த அடியார் உடையார், கோஷ்டித் தலைவர் என்ற ரீதியில் பஸ் கண்டக்டர், டிரைவர்களுக்கு வேண்டிய உத்தரவுகளைப் பிறப்பித்தார். "வடிவேல் முருகனுக்கு அரோஹரா !" என்ற கோஷத்தோடு பஸ் புறப்பட்டதும், என் உள்ளம் ஏழு வயதில் நான் கண்ட முதல் முருகனை எனக்குப் படமெடுத்துக் காட்டியது. அந்த எண்ணத்தில் நான் மெய்ம்மறந்து இருந்தேன்.



# முதல் முதல்வன்

“தஸ்கராணும் பதயே நம: என்பது வேத வாக்கு. திருடர்களுக்குத் தலைவனே போற்றி!” வேதம் இவ்வாறு பரமனை வருணிக்கிறது. ஆதியும் அந்தமும் இல்லாத அரன் மகனை அருணகிரியும், ‘செம்மான் மகளைத் திருடும் திருடன்’ என்று திருட்டுப் பட்டம் கட்டி அன்போடு அழைக்கிறார்.

என் ஏழாவது வயதில் இந்த உயர் சொற்களைப்பற்றி நான் அறிந்திருக்க முடியாது. ஆனால், ஏழு வயதில் நான் கண்ட, கேட்ட சம்பவங்களை இணைத்துப் பார்க்க இந்தப் பழம்பெரும் சொற்கள் இப்போது உதவுகின்றன.

எதிர் வீட்டில் எளிய குடும்பம் ஒன்று குடியேறியது. குடும்பத்தலைவர் ஒரு வட்டிக்கடையில் எடுபிடி ஆசாமியாக வேலை பார்ப்பதாகச் சொல்லி வந்தார்கள். கேவலம் ஒரு கணக்குப் பிள்ளை பதவியைக்கூட அவர் அப்போது எட்டிப் பிடிக்கவில்லை என்ற காரணத்தால் கிராம வாசிகள் அவரை உதாசீனம் செய்தார்கள். ஆனால் என்னைப் போன்ற பாலகர்கள், அவர் வீட்டில் விசேஷ அக்கறை காட்டி வந்ததோடு, அந்தக் குடும்பத்தினர் அனைவரிடமும் பரிவும் சினேகமும் காட்டி வந்தோம். காரணம் வேறொன்றுமில்லை. மாதந் தோறும் வரும் ஷஷ்டி, கிருத்திகை நாட்களில் அந்தக் குடும்பத் தலைவி ஒரு சிறு பாத்திரத்தில் சர்க்கரைப் பொங்கல் செய்து எடுத்துக்கொண்டு, கிராமக் கோயிலுக்குச் செல்லும் போது, எங்களைப் போன்ற சிறுவர்களையும் இட்டுச்செல்வார், கோயிலில் முருகன் சந்நிதியில், அதை நிவேதனம் செய்து, தலைக்கு ஒரு நெல்லிக்காய் அளவு பொங்கலை விநியோகித்து விட்டு, பாத்திரத்தைக் காலி செய்துகொண்டு திரும்புவார். ஆக, மாதம் இரு முறை தவறாமல் நெய்யொழுகும் இனிய பொங்கல் கிடைக்கும்போது நன்றி காட்டாமல் எப்படி இருப்பது? ஷஷ்டியும், கிருத்திகையும் விசாகமும், செவ்வாய்க்கிழமையும் மாதம் பூராவும் இருக்கக்கூடாதா என்று தான் எண்ணிக்கொண்டிருந்தோம். ஆனால், வயது வந்தவர்கள் வேறு விதமாகப் பேசினார்கள்.

"வட்டிக் கடையில் கணக்குப்பிள்ளையாகி விட்டார். தவிர முதலாளி வேறு ஊரில் இல்லை. நோய்நொடியால் தவிக்கிறான். பெரிய சொத்துக்காரன். இரண்டு மூன்று கோயில் சொத்துக்களை நிர்வகிப்பவன். அவன் வேலையை இந்தத் திருடன் மீது போட்டு விட்டிருக்கிறான். கோயில் சொத்து கொஞ்சம் கொஞ்சமாக வீட்டிற்குள் வந்துகொண்டிருக்கிறது! 'சிவன் சொத்து குலநாசம்'—இதெல்லாம் அதிக நாள் ஓடாது" என்று பேசிக் கொண்டார்கள்.

ஊர் வம்பை மேலும் ஊக்குவிப்பது போல் அந்த வீட்டில் சம்பவங்கள் வெகு துரிதமாக மாறி வந்ததோடு, விசேஷ அபிவிருத்தியும் காணப்பட்டது. திடீரென்று ஒரு நாள் அவர்கள் பெண்ணும் பிள்ளையும் கையில் குங்குமச் சிமிழ் ஒன்றோடு கிராமத்தில் உள்ள ஒவ்வொரு வீட்டுக்கும் சென்று, "நாளை எங்கள் வீட்டில் கந்த ஷஷ்டி உற்சவம் ஆரம்பம்.........ஆறு நாட்களுக்கு நடக்கிறது: எல்லோரும் வரவேண்டும்" என்று அழைத்தார்கள்.

இதைத் தொடர்ந்து ஆறு நாட்கள் கிராமமே அல்லோல கல்லோலப்பட்டது. என்னைப் போன்றவர்களுக்கு கொண்டாட்டம். காலையில் ஏழு மணிக்கு-தலைக்கு ஒரு டம்ளர் அபிஷேகப் பால். ஏழரை மணிக்கு பஞ்சாமிர்தம்............ எட்டேகால் மணிக்கு வெண்பொங்கல், ஒன்பது மணிக்கு—இளந்தேங்காயும் வெல்லமும்—பதினொரு மணிக்கு மறுபடியும் பாலும் பழமும்—மத்தியானம் ஒரு மணிக்கு வடை பாயாசத்தோடு சாப்பாடு! எல்லாம் "குமார போஜனம்", "குமார பூஜை" என்ற பெயரில் அமோகமாக நடந்தது. அன்று வரை கிராமக் கோயிலில் உள்ள முருகன் சந்நிதியில் ஆராதனை நடத்தி வந்தவர்கள், முருகனை வள்ளி, தேவயானையோடு அழகான பஞ்சலோக விக்ரஹ உருவில் வீட்டில் பிரதிஷ்டை செய்து விட்டார்கள். ஸ்கந்த ஷஷ்டி என்றால் என்ன என்பதை என் இளம் உள்ளம் அன்றுதான் சிறிதளவு உணர்ந்து கொண்டது. ஸ்கந்த ஷஷ்டி வாழ்க! அதற்கு ஆதாரமான ஸ்கந்தன் வாழ்க! அதை வரையறையோடு பரிமளிக்கக்

கொண்டாடும் அந்தக் குடும்பம் வாழ்க!" என்று பிஞ்சு உள்ளம் சொல்லாமல் சொல்லி என்னை, அந்த ஆறு நாட்களும், பின்னர் வந்த திருக்கல்யாண தினத்தன்றும் அந்த வீட்டிலேயே ஸ்திர வாசம் செய்யும்படி செய்தது.

அடுத்த இரண்டு வருஷங்களில் அந்தக் குடும்பம் நன்கு செழித்தது. பொன்னும், வெள்ளியும் அங்கே குவிந்தன. விசேஷபூஜை, சமாராதனை, அது இது என்று ஒரே திருவிழா மயம்! இதைப் பார்த்துவிட்டு ஊர் வாசிகள் சும்மா இருப்பார்களா? "வட்டிக்கடை முதலாளி இறந்து விட்டார். மோசடி செய்து அவருடைய 'மைனர்' குழந்தைகளுக்கு ஒன்றுமில்லாமல் செய்துவிட்டு, திருடிக் கொண்டு வந்து ஊரைக் கூட்டி போலி பூஜை போடுகிறான். அது எவ்வளவு நாட்கள் நிலைத்து நிற்கும்? அரசன் அன்றே கொல்வான்; தெய்வம் நின்றுதான் கொல்லும்" என்று வம்பளந்து கொண்டே பால், பஞ்சாமிர்தத்தைச் சிறுவர்களை அனுப்பி வாங்கி வரச் செய்து சாப்பிட்டார்கள்! "உண்ட வீட்டிற்கு இரண்டு நினைப்பது தவறு" என்பதை உணராமலேயே இந்தத் தொண்டை அவர்கள் பெருமளவில் செய்யத் தொடங்கியதும், எதிர்வீட்டுக்காரர் செய்யும் பூஜையின் தன்மையும் ஊர்க்காரர்கள் கொண்டுள்ள கொள்கையின் தன்மையும் தெள்ளெனப் புரிந்தது.

வருஷங்கள் ஓடி மறைந்தன. 'சிவன் சொத்து குலநாசம்' செய்யாததால் பொறுமையிழந்த ஊர்க்காரர்கள் வேறு விதமான புரளிகளையும், அவதூறுகளையும் கிளப்பி எதிர் வீட்டுக்காரர்களை இடம்பெயரச் செய்துவிட்டனர். அவர்கள் போன பிறகும் கூட 'அந்தக் குடும்பம் அதோ கதியாகவேண்டும்' என்று ஊரார் கங்கணம் கட்டிக் கொண்டவர்களாதலால் தொடர்ந்து அவர்களுக்கு இடையூறு செய்த வண்ணமிருந்தார்கள். ஆனால், 'கெடுவான் கேடு நினைப்பான்' என்ற கதையில்தான் அது வந்து முடிந்தது. ஊரை விட்டு ஓடிய குடும்பம் மேலும் செழிப்பாக உயர்ந்து விடவே, ஏமாற்றமடைந்த ஊர்க்காரர்கள் மாற்று விளக்கம் ஒன்று கூறினார்கள்.

"முதலில் கோயில் சொத்தை கொஞ்சமாகத் திருடினுன் • கடைசியில் 'கொன்றுல் பாவம்; தின்றுல் போச்சு ' என்று சுவாமியையே வீட்டுக்குத் திருடிக்கொண்டு வந்து விட்டான்! சொத்தைப் பறிகொடுத்த முருகன் தன்னேயே பறி கொடுத்துக் கொண்டு விட்டான்!" என்று அங்கலாய்த்தார்கள்.

முருகனும் அவன் சொத்தும் ஒரே இடத்தில் வந்து சேர்ந்து விட்டது. சொத்து வேறு அவன் வேறு என்று இருந்தால், சொத்தை எடுத்தவன் திருடனுகிறுன். சொத்துக்கு உரிமை பெற்றவர்கள், சொத்து உள்ள இடத்தில் வந்து சேர்ந்து விட்டால், அங்கே திருட்டு எப்படி நடந்ததாகச் சொல்ல முடியும்? எதிர் வீட்டுக்காரர் சாதாரண முருக பக்தர் அல்ல. மிக மிக விவேகமாக, சொத்தைத் திருடி, பின்னர் சொத்துக்கு உடையவனேயும் திருடி இரண்டையும் போற்றி வந்தார். முடிவில் என்ன ஆயிற்று? தன் சொத்தையும் தன்னேயும் பறிகொடுத்துவிட்ட முருகன், அந்த அடியாரின் உள்ளத்தையே திருடிவிட்டான்! திருட்டு சொத்து அனைத்தையும் ஆண்டவனுக்கே அர்ப்பணம் செய்து ஆராதனேகளே நடத்தி, நவமணிகளால் அலங்காரம் செய்து தன்னேயும், தான் ஆண்டிய தெய்வத்தையும் அன்று முதல் இன்று வரை பாதுகாத்துக்கொண்டு வருகின்றனர், அந்தக் குடும்பத்தினர்.

அப்படியொரு அற்புதத்தை என் சிறு வயதில் நிகழ்த்திய முதல் முருகனே ஒரே யாத்திரையில் முப்பது தலங்களில் தரிசிக்கப் போகும்போது நான் எண்ணிப் பார்ப்பதில் தவறில்லே. முதல் முருகன் எண்ணம் முழுவதும் ஆக்ரமித்திருந்த சமயம் எங்கள் "ஸ்பெஷல் பஸ்" உதயணுபுரத்து முருகன் கோயில் முன்பு நின்றது. அப்போது கண்டக்டரும் டிரைவரும்எங்களுடைய முப்பது முருகன் தலயாத்திரைக்குப் பூரண ஒத்துழைப்புக் கொடுக்கத் தீர்மானித்திருந்ததை நான் ஊகித்துக் கொண்டேன். ஏனெனில், அங்குமிங்கும் வழி விசாரித்துக்கொண்டு ஊரைச் சுற்றியலேந்து பொழுதை வீணடிக்காமல் உச்சிகாலத்திற்கு முன்பே உதயணுபுரத்தை அடைந்து விட்டார்கள்.

# கேரள முருகன்

என்னைத் தவிர மற்றவர்கள் அனைவருமே உதயனு புரத்திற்குப் புதியவர்கள். நானும் முதல் தடவை அங்கு சென்று ஆலயமூர்த்தியைத் தரிசிக்கும் வரையில் நம்பிக்கை யற்றுத் தானிருந்தேன். அதனால் என்னுடைய பழைய நிலையில் இருந்த அன்பர்களை உற்சாகப்படுத்த வேண்டிய தைக் கடமையாகக் கருதி, அடியார் உடையாரிடம், "முருகா! இடித்துப் புடைத்துக்கொண்டு நாம் தரிசிக்கும் செந்திலாதிபனை இங்கு ஆற அமரத் தரிசிக்கலாம். இந்த மூர்த்தியின் கோலத்திற்கும் செந்திலாதிபனுக்கும் அதிக வித்தியாசம் இல்லை. வாருங்கள்......" என்றேன்.

உதயனுபுரத்துச் சூழ்நிலை, முருக பக்தர்களைக் கவர்ந் தது அடியார் உடையார் சண்முகனை மார்பில் அணைத்தபடி என்னைப் பின்தொடரத் தயாரானார் "நீங்களே முன் செல்ல லாம்" என்று நான் சொன்னதும், அவர் "அப்படியில்லை; இதிலெல்லாம் ஒரு கட்டுப்பாடு நமக்குள் இருக்கவேண்டும். ஒரே மாதிரியான திட்டமும் அவசியம். குறிப்பிட்ட கோயிலுக்கு அழைத்துச் செல்லும் அன்பரே, அந்த வட்டா ரத்தை பஸ் கடந்து செல்லும்வரை கோஷ்டியின் தலைவர்; உதயனுபுரம், தைக்காடு இரண்டும் தாண்டும் வரை தாங்கள் தான் கோஷ்டியின் தலைவராக இருக்கவேண்டும்" என்று அவர் கேட்டுக் கொண்டிருந்தபோது, கோயில் சிப்பந்தி ஒருவர் வந்து, "வாருங்கள், சீக்கிரம்! நம்ம முருகன் கோயில்தான் இது, நடை சாத்தும் சமயமாகி விட்டது" என்று அழைத் தார்.

"மலையாளத்தில் தமிழ் மணம் வீசுகிறதே! இவர் தமிழரா? அல்லது......?" என்று சந்தேகத்தோடு நாங்கள் அவரைப் பார்த்ததும், அவரிடமிருந்து பதில் சட்டென்று வந்தது! வசன நடையில் அல்ல—அருமையான சித்தர் பாடலைப்பாடி எங்கள் சந்தேகத்திற்கு தத்துவ ரீதியில் பதில் அளித்து வேற்றுமையாகிய அழுக்கை எங்கள் மனத்திலிருந்து நீக்கினார்.

"ஒன்றும் ஒன்றும் ஒன்றுமே உலகனைத்தும் ஒன்றுமே
அன்றும் இன்றும் ஒன்றுமே அனாதியானது ஒன்றுமே
கன்னல் நின்ற செம்பொன்னைக் களிம்பறுத்து நாட்டினால்
அன்று தெய்வம் உம்முளே அறிந்ததே சிவாயவே"

நாங்கள் வியந்துகொண்டே கோயிலினுட் சென்று வெளிப் பிராகாரத்தை வலம் வந்து சந்நிதியில் பிரவேசித்தோம். கோயில், மலையாள வழக்கப்படி கட்டப்பட்டிருந்தாலும், கோயில்கொண் டெழுந்தருளி யிருக்கும் கோலமயிலோன் தீந்தமிழச் செல்வனாகவே தோற்றமளித்தான்.

"கொன்றைச் சடையார்க் கொன்றைத் தெரிய
கொஞ்சித் தமிழைப் பகர்வோனே"

என்று அருணகிரியார் அருளிய திருப்புகழைப் பாடிக் கொண்டிருந்தார் அன்பர் ஒருவர். கேரள ஆசாரத்தை யொட்டி அழகனின் முகத்திலிருந்த சந்தனக்காப்பை அகற்றி னால் செந்தில் கந்தனைத்தான் அங்கு காண்போம்!

"உதயனாபுரத்தில் ஒரு தனி முருகன் கோயில் இருக் கிறதை இவ்வளவு நாட்களாக நான் அறியேன்! உங்களால் இன்று தரிசனம் கிடைத்தது" என்று அடியார் உடையார் சொல்லிக்கொண்டே பஸ்ஸுக்கு வரும்போது, கோயில் சிப் பந்தி குறுக்கிட்டார்.

"தனி முருகன் சந்நிதிதான்! இருந்தாலும் வைக்கத்தப் பன்!—அன்னதான மகாதேவன்—புதல்வனை அவர் ஆதர வில்தான் இங்கு அரசு செலுத்திக் கொண்டிருக்கிறான். ஒவ் வொரு கார்த்திகை மாதத்திலும் அஷ்டமி தினத்தன்று தந்தையும் தனயனும் கூடிக் குலாவுவார்கள். இந்தத் திருவிழா வைபவத்தைப் பார்க்கும் அடியார் குழாத் தினருக்கு அடுத்துவரும் ஜன்மங்களில்கூட இது கண்ணைவிட்டு அகலாக் காட்சியாகும். ஆமாம். ஹரிபாத் முருகனைப் பார்த்து விட்டீர்களோ" என்று கேட்டார்.

"ஹரிபாத் எங்கிருக்கிறது? அங்கும் ஒரு முருகன் இருக் கிறானா?" என்று நான் கேட்டேன்.


31
301
3001
தயாரிப்பாளர்கள்:-மதருஸ் சுகந்த மண்டலம்
PROPS:- எஸ். வி. ஆர் & சன்ஸ்
மதருஸ் ★ மதுரை ★ பெங்களூர்.

பட்டுச் சேலைகள், சோளிகள், நூல் பம்பர் [illegible]கள்,
பாவாடை துண்டுகள் மற்றும் மபத்லால், [illegible]த்,
காலிகோ, கவாலியர் சக்தி முதலிய மி[illegible]
பலகர டெர்லீன் சூட்டிங்குகளும் [illegible]

## P. R. நாராயண[illegible]

[illegible]

494, [illegible]

[illegible]-8.

[illegible] 04

---

[illegible]கள் [illegible]நிறுவனங்கள்

[illegible] அய்யர் & கோ., காரைக்குடி

[illegible] ஏஜென்ஸீஸ், திருச்சி-8.

[illegible] ENTERPRISES, TRICHY-8

[illegible]PROVFD RETAIL SHOW ROOM OF THE

*MAFATLAL GROUP OF MILLS*

**P. R. N. TEXTILES, TRICHY-8.**

"வைக்கத்துக்குப் போவீர்களானால், அங்கிருந்து படகில் இரண்டு மணி நேரம் பிரயாணம் செய்தால் ஆலப்புழையை அடையலாம். ஹரிபாத், ஆலப்புழையிலிருந்து சமீபம்தான்" என்று அவர் சொல்லிக் கொண்டிருந்தபோது, "அங்கேயெல்லாமும் போய்ப் பார்த்துவிடுவோமே! அப்புறம் எப்போ இந்தப் பக்கம் வரப் போகிறோமோ?" என்றார் ஆர்வக்கார அன்பர் ஒருவர். ஆனால் அடியார் உடையார், "அப்படியெல்லாம் திசைமாறி க்ஷேத்ராடனம் செய்யத் தொடங்கினால் குறித்த காலத்தில் பிரயாணத்தை முடித்துக்கொள்ள முடியாது. நிறைவேறக்கூடிய திட்டம் வகுத்திருக்கிறோம். ஆகையால் போகும் வழியில் உள்ள கோயில்களுக்குத்தான் போகலாம்" என்று கண்டித்துச் சொல்லிவிட்டு, "இங்கிருந்து தைக்காடு எத்தனை மைல் இருக்கும்?" என்று கேட்டார்.

"வழியில் எங்கும் இறங்காமல் இரண்டு மணிநேரம் தொடர்ந்து, வண்டி ஓடினால் திருவனந்தபுரத்தை அடையலாம்" என்று நான் சொன்னதும் அடியார் உடையார், தமது இனிய குரலில்.


"நாத விந்து கலாதீ நமோ நம
வேத மந்த்ர ஸ்வரூபா நமோ நம
ஞான பண்டித ஸ்வாமீ நமோ நம"

என்று திருப்புகழைப் பாடினார். எல்லோருடைய குரலும் ஒருமிக்கச் சேர்ந்து தமிழ்த்தெய்வம் உதயணாபுரத்து முருகனுக்கு அஞ்சலி செய்தது.

திருவனந்தபுரம் நகரத்தின் மத்தியில் பெரிய மனிதர்கள் வாழும் பகுதியில், நமது "மகாபெரியவன்" கம்பீரமாகக் கோயில் கொண்டிருக்கிறான். அழகிய திருக்குளத்தினருகில் அடக்கமாக ஆடம்பரமின்றி ஆலயம் அமைந்திருக்கிறது மூலஸ்தானத்தில் காட்சி தரும் கந்தன், பழநி ஆண்டவனை ஞாபகப்படுத்துகிறான் திருவாங்கூர் மன்னரின் நேரிடையான மேற்பார்வையில் இன்று வரை இருந்து வரும் தலம் இது. "ஆசைக்கு ஒரு பெண்; ஆஸ்திக்கு ஒரு பிள்ளை" என்பதுபோல் தமது பிரத்தியேக ஆராதனைக்கு தைக்காட்டில்,

அரன் அம்சமான முருகனையும், அரி ஆராதனைக்கு அனந்த பத்மநாபனையும் வைத்துக்கொண்டு மற்ற தேவாலயங்களை ஆட்சியாளரிடம் ஒப்படைத்திருக்கிறார் மன்னர் !

இங்கே முருகனுக்கு விசேஷ தினங்களான ஷஷ்டி விசாகம், கிருத்திகை எல்லாம் கொண்டாடப்படுகிறது. இன்னொரு விதத்திலும் இந்த முருகன் அதிர்ஷ்டசாலியாயி ருக்கிறான். ஒவ்வொரு நாள் கிழமையும், விழாவும் அடுத் தடுத்து இரண்டு நாட்கள் இங்கே நடைபெறுகின்றன. திருவ னந்த புரத்து தமிழர்கள் தமிழக வழக்கப்படியும், மலையாளி கள் மலையாளத்து வழக்கப்படியும் பூஜை செய்கிறார்கள்! மலையாளக் கணக்கும், தமிழ்க்கணக்கும் ஏறத்தாழ ஒரு நாள் முன்னும் பின்னுமாக வருவதால் முருகனுடைய விசேஷ வைபவங்கள் இரண்டு நாட்கள் கொண்டாடப்படுகின்றன ! கொட்டு மேளமும், காவடியும், தீமிதியும் இங்கே அன்றாட நிகழ்ச்சிகள்.



உதயனாபுரம் :—கேரளத்தில் உள்ள பிரசித்திபெற்ற முருகன்தலம். எர்ணாகுளம்—கொல்லம் ரயில் மார்க் கத்தில் வைக்கம்ரோடு என்ற ஸ்டேஷனில் இறங்கினால் இங்கு போய்ச் சேரலாம். வைக்கம் செல்லும் பஸ்களிலும் போகலாம்,

தைக்காடு;—திருவனந்தபுரம் நகரின் மத்தியில் உள்ள அழகிய சிறிய ஆலயம். மன்னரின் மேற்பார்வையில் இருந்து வரும் ‘ தனியார் துறை ’ கோயில். மனத்திற்கு சாந்தி தரும் மூர்த்தி...



# நெல்லை முருகன்

பொதியமலை, பொருநைநதி பூந்தென்றல், குற்றாலச் சாரல் இவையெல்லாம் தமிழன் ரத்தத்தில் அடங்கியுள்ளவை என்ற காரணத்தால், இவற்றை நேரில் பார்த்து அனுபவியாத கோடிக்கணக்கான தமிழர்கள் கூட ஊகித்து உணர்ந்து பார்த்து இன்புறுகிறார்கள். நேரில் சென்று பார்த்தவர்களோ கல்பகோடி காலத்துக்கு முன்னர், குறுமுனி அகத்தியர் தமது பன்னிரண்டு சீடர்கள் மத்தியில் அமர்ந்து, தமிழ்த் தெய்வம் தேவகுஞ்சரிபாகனிடமிருந்து தாம் கற்றதை, கற்பித்துக்கொண்டிருந்த காட்சியை உருவகப் படுத்திப் பார்த்து நெல்லை மாவட்டத்தின் தனிச் சிறப்பைக் குறித்து சற்றுப் பொறாமைகூட அடைகிறார்கள். ஆனால்,

தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென்று அகமகிழ்க
தம்மினும் கற்றாரை நோக்கிக் கருத்தழிக
கற்றதெல்லாம் எற்றே—இவர்க்கு நாமென்று

என்ற முதுமொழியைத் தாரகமந்திரமாகக் கருதி வாழும் நமது மாண்புமிக்க தமிழ்ச் சமூகம், நெல்லை மாவட்டத்தை பக்திக் கண்கொண்டே பார்க்கிறது. மொழியை ஈந்தவனும், பெற்றவனும் அங்கே நிரந்தரமாக வாசம் செய்கின்றனர் என்று நம்புவதோடு மட்டுமின்றி, உணர்ந்து கொண்டாடவும் செய்கின்றது.

இத்தகைய பெருமைகளோடு கூடிய புண்ணிய பூமிக்குப் போய்க் கொண்டிருக்கிறோம் என்ற ஒரே எண்ணத்தோடு திருவனந்தபுரத்திலிருந்து புறப்பட்ட நாங்கள், நாஞ்சில் நாட்டில்—கன்னியாகுமரி மாவட்டம்—தக்கலைக்குச் சமீபத்தில் குமார கோயிலில் வீற்றிருந்து, முழுத்தமிழுமல்லாத, மலையாளமுமல்லாத, மலையாளம்—தமிழ் கலப்பு மொழி பேசும் பக்தர்களுக்கு அருள் பாலித்துக்கொண்டிருக்கும்

முழுத்தமிழ்த் தெய்வம் முருகனை மானசீகமாகத்தான் வணங்கினேம்.

நாகர்கோவில்—வள்ளியூர் நெடுஞ்சாலையில் வண்டி ஓடிக்கொண்டிருந்த சமயம், நெல்லை முருகன் தம்மைத் தயார் செய்து கொண்டார். இருந்தாலும் அவர் உள்ளத்தில் ஒரு படபடப்பும், தயக்கமும் ஏற்பட்டிருக்க வேண்டும். பக்கத்தில் உட்கார்ந்திருந்த என்னிடம், "சுவாமி, தாங்களும் உதவி செய்தால்தான் என் பணி நன்கு நிறைவேறும். முருகன் உறைவிடமும், முத்தமிழ் வளர்ந்த இடமும் நெல்லைப் பகுதியே என்ற காரணத்தால் மனத்தில் சிறிது அச்சம் ஏற்பட்டிருக்கிறது. நமது கோஷ்டியார் கண்டு மகிழும் அளவுக்கு என் ஒருவனல் ஈடு கொடுக்க முடியுமா என்று சந்தேகமாக இருக்கிறது" என்று கூறிவிட்டு, என் பதிலை ஆவலோடு எதிர்பார்த்தார்.

தமிழ் மொழியில் பொறுப்பு என்பது பிரச்னை நிறைந்த ஒரு வார்த்தை. பொறுப்பின் அடிப்படையில் தான் மனித சமுதாயம் இயங்கி வந்தாக வேண்டியிருக்கிறது. குடும்பஸ்தனுக்கு குடும்பத்தைக் கட்டி மேய்க்க வேண்டிய பொறுப்பு. குடும்பத்தலைவிக்கு குஞ்சு குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பு. குழந்தைகளுக்கு பெற்றோரையும் தங்களுக்கு முன்னும் பின்னும் பிறந்தவர்களையும் "நமது குடும்பம்" என்ற கண்கொண்டு பார்த்து ஒற்றுமையும், ஒழுங்கும் கெடாமல் பாதுகாக்கும் பொறுப்பு ; குருவுக்கு மாணக்கனை முன்னேற்றிவிடும் பொறுப்பு ; மாணக்கனுக்கு குருவுக்கு நல்ல பெயர் வாங்கிக் கொடுக்கும் பொறுப்பு ; அரசனுக்கு பிரஜைகளைப் பேணிக் காக்கும் பொறுப்பு ; பிரஜைகளுக்கு அரசன் கையை பலப்படுத்த வேண்டிய பொறுப்பு ; இத்தனை பொறுப்புகளையும் நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு ஆண்டவனைச் சேர்ந்திருக்கிறது ! இதனலேயே எல்லாப் பொறுப்பையும் தன் மீது சுமத்திக் கொண்டிருக்கும் ஆண்டவனுடைய நிலையை உணர்ந்த உள்ளங்கள் அவனுடைய சுமையைக் குறைக்க பக்தியில் ஈடுபடுகிறது.

பக்தி பலவிதம் : தற்காலிக பக்தி—இதைக் காரியவாதிகள் காட்டும் பக்தி என்று சொல்வது பொருந்தும், பகட்டு பக்தி—அகந்தையைக் குறிக்கும் இது ஆடம்பரம் முக்கால், பக்தி கால் என்ற விகிதத்தில் அமையப்பெற்றது-பிரசார பக்தி ஊருக்கு உபதேசம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டது. போலி பக்தி—பிறரை ஏமாற்ற எண்ணித் தன்னைத் தானே ஏமாற்றிக்கொள்வது. அளவோடு காட்டும் பக்தி—கடவுள் தன்மையும் சக்தியும் தன்னுடையதைக் காட்டிலும் சற்றுச் சிறந்தது என்று உணர்ந்த நிலை. அளவுக்கு மீறிய பக்தி—சுயநலம் கருதாதவரை நீடித்து இருக்கக்கூடியது. தூய பக்தி—அளவுகோலை அப்பால் எறிந்துவிட்டு 'அவன்தான் கதி' என்று இருப்பது. ஞானம் மிகுந்த பக்தி—தடம் புரண்டு ஓடும் தன்மை வாய்ந்த பகுத்தறிவைத் தடைபோட்டு நிறுத்தி, நேர்வழியில் கொண்டு செல்லும் சக்தி வாய்ந்தது. மூட பக்தி—சாலச் சிறந்தது; கண்ணையும், கருத்தையும் வியாபித்துக் கொண்டு நிற்பது. பாமரருக்கு ஆண்டவன் அளிக்கும் வரப்பிரசாதம்.மெய்ஞ்ஞான ஸித்தியடைந்த மகான்களிடம் நிரந்தர வாசம் செய்யக்கூடியது. இந்த வழியில் பக்தியில் திளைப்பவர்களைக் கருவியாக உபயோகித்து ஆண்டவன் மனித சமுதாயத்தை உய்விக்கிறான். அவர்களுக்குத் தாமே வலிய வந்து மொழியைக் கொடுத்து, முதலடியை எடுத்துக் கொடுத்து, முக்தி அளிக்கும் மார்க்கத்தைக் காட்டி, தாம் வாழும் சமுதாயத்தையும் தம் வழியில் இட்டுச் செல்லத் தூண்டுகிறான்: தமிழ் மொழியை இறைவனிடமிருந்து பெற்று நமக்களித்துள்ள அகத்திய மாமுனி, நக்கீரர், சம்பந்தர், சுந்தரர் போன்ற சமயகுரவர்கள், சேக்கிழார், சச்சியப்ப சிவாச்சாரியார், அருணகிரி போன்ற பக்தர்கள் எல்லோரும் இந்த வகையில் கிடைத்தற்கரிய பாக்கியத்தைப் பெற்று, நாம் உய்த்துணர்ந்து நல்வாழ்வு வாழ வழி வகுத்துத் தந்துள்ளார்கள். இருபதாம் நூற்றாண்டில் வாழும் நமக்கு கலியுக வரதனை கந்தனைக் காட்டும் கச்சியப்பனார் கந்த புராணமும், அருணகிரியாரின் திருப்புகழும் ஆறுவமுதமாகத் திகழ்கின்றன.

ஆகவே, கந்தனும், கந்தனோடு ஒன்றி இருக்கும் தமிழ் மொழியும் சேர்ந்து, அன்றும் இன்றும் என்றும் நம்மை பக்தி பரவசத்தில் ஆழ்த்திக்கொண்டிருக்கும் ஒரு பிரதேசத்திற்குள் அடியார் கூட்டத்தை அழைத்துச் செல்ல வேண்டி யிருந்ததை ஒரு பெரும் பொறுப்பாகவும் பணியாகவும் எங்கள் நெல்லை முருகன் எண்ணி கவலையடைந்தது எனக்கு ஆச்சரியம் அளிக்கவில்லை. அவர் மீது சுமந்துள்ள பொறுப் பைப் பகிர்ந்துகொள்ள தீர்மானித்த நான், வள்ளியூரை வண்டி நெருங்கியதும், கோயில் இருக்கும் திசையில் அதைத் திருப்பி ஓட்டச் செய்தேன். நமது இகபரக் குகையில் இருந்தி மூச்சுவரை இருந்து வரும் குகனை—வள்ளியூர் குகைக்கோயிலில் கண்டு ஆனந்தித்தோம்!

கோயிலை விட்டு வெளியே வரும் சமயம் வயதான ஒரு பெரியவர்—முருகன் பெயரைச் சொல்லி இறைஞ்சி வாழ் பவர்—வள்ளியூரைப்பற்றிய ஒரு ரசமான கதையைச் சொன் னார்.

சேரன் ஆட்சியில் இன்றைய நெல்லை மாவட்டத்தின் பெரும் பகுதி அநேக நூற்றாண்டுகள் இருந்து வந்ததைச் சரித்திரம் கூறுகிறது. ஏறத்தாழ பத்தாம் நூற்றாண்டில் சேர மன்னர் ஒருவர் ஆணையின் பேரில் சண்முகர் விக்ரகம் ஒன்று வார்க்கப்பட்டது. மன்னர் அதை எங்கு பிரதிஷ்டை செய்ய நினைத்திருந்தாரோ தெரியவில்லை. விக்கிரகம் பூரண மாகத் தயாரானதும் அதைக் காணும் பேறு பெற்ற சில பக்தர்கள், அதைக் களவாடித் தங்கள் இஷ்ட தலத்திற்குக் கொண்டு செல்லத் திட்டமிட்டு, ஒருநாள் இரவோடு இர வாகத் திட்டத்தை நிறைவேற்றியும் விட்டார்கள்!

அந்த அடியாரின் உள்ளத்தைக் கொள்ளையிட்ட சண்முகன் அந்தக் கொள்ளை பக்திக்காரரின் தோள்களில் மூட்டை வடிவில் ஆரோகணித்துப் புறப்பட்டு கீழ்த் திசையில் பிர யாணமானான். தங்கள் லட்சியத் தலத்திற்குப் போய்ச் சேரும் வரை "சண்முக மூட்டை"யைக் கீழே இறக்கக் கூடாது என்ற சங்கல்பத்தோடு மாற்றுத் தோள் கொடுத்து,

அவ்வப்போது இளைப்பாறிக்கொண்டு சென்ற சண்முகத் திருடர்களுக்கு,வள்ளியூரை அடைந்ததும் சோதனை ஏற்பட்டு விட்டது. மூட்டையை இறக்காதவரை ஒரு அடிகூட மேற் கொண்டு நடக்க முடியாத நிலை வந்துவிடவே அவர்கள், வள்ளியூர் குகைக் கோயிலுக்குள் சண்முகநாதனை இறக்கி வைத்து இளைப்பாறினார்கள். ஆனால், சொத்தைப் பறி கொடுத்தவர்கள் துரத்தி வந்துவிட்டால் என்ன செய்வது என்ற பயமும், அவர்கள் தேடி வருவதற்குள் லட்சியத்தலத் தில் விக்ரகத்தைப் பிரதிஷ்டை செய்துவிடவேண்டும் என்ற அவசரமும் சேர்ந்து கொள்ளவே, அந்த பக்திக் கொள்ளையர் கள் சண்முகனைப் பிரார்த்தித்துக் கொண்டார்கள். "இறைவா! உன்னைத் தூக்கிச் செல்லப்போகிறோம். எங்கள் செந்தி லாதிபனுக்கு இடது பக்கத்தில் அவன் சந்நிதியில் உன்னைக் கொண்டுபோய் பிரதிஷ்டை செய்யும் வரை உன்னை நீ காப் பாற்றிக்கொண்டு எங்கள் தூய எண்ணம் நிறைவேறக்

N. K. SUBBIAH SETTY & SONS BANGALORE-2

"Lion Brand"

LALITHA

THALAMPOO AGARBATHIES

REGD. KOKILA No 2039

Sugntha

Kokila

Agarbathies

*Manufacturers of High Class Agarbathies*

KOKILA & LALITHA BRANDS

N. K. SUBBIAH SETTY & SONS,

*Post Box 796 : Mamulpet,* BANGALORE-24

கருணை காட்ட வேண்டும். ஒரே மூச்சில், ஒரே நடையில் நாங்கள் ஊர் போய்ச்சேர நீ உறுதுணையாக வரவேண்டும்" என்ற அவர்கள் பிரார்த்தனையை அன்று நிறைவேற்றிய சண்முகனே இன்று திருச்செந்தூரில் ஆடிப்பாடிக் கொண்டு வரும் அடியார் கூட்டத்தை ஆட்கொண்டிருக்கிறான்...!

இந்தக் கதையை அந்தப் பெரியவர் சொல்லக் கேட்டதும் செந்தில் தலம் ஒன்றே எங்கள் கருத்தில் நின்றதும்; அதனாலேயே பஸ் கிளம்பியதும் பாடத் தெரிந்தவர், தெரியாதவர் எல்லோருமே சிவகுமாரனின் ஆறுமுக அவதாரத்தைச் சிறப்பித்து மெஞ்ஞானிகள் தோற்றுவித்து அளித்திருக்கும் பாமாலைகளை மாறி மாறி மால்மருகனுக்குச் சூட்டிக் கொண்டிருந்தனர்.

ஆறுமுகமும் அருள்விழிகள் பன்னிரண்டும்
வீறுடைய திண்தோளும் வேல் பிடித்த செங்கரமும்
ஏறி வரும் மாமயிலும் இருபுறமும் தேவியரும்
சீருடைய திருவடியும் சேவலையும் சிந்திப்போம்

புன்னெறியதனிற் செல்லும் போக்கினை விலக்கி மேலாம்
நன்னெறி யொழுகச் செய்து நவையறு காட்சி நல்கி
என்னையும் அடியனாக்கி இருவினை நீக்கியாண்ட
பன்னிரு தடந்தோள் வள்ளல் பாதபங்கயங்கள் போற்றி

மூவிரு முகங்கள் போற்றி முகம் பொழி கருணை போற்றி
ஏவரும் துதிக்க நின்ற ஈராறு தோள்போற்றி—காஞ்சி
மாவடி வைகும் செவ்வேள் மலரடி போற்றி யன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கை வேல் போற்றி
போற்றி

"பத்தித் திருமுக மாறுடன் பன்னிரு தோள்களுமாய்த்
தித்தித் திருக்கும் அமுது கண்டேன் செயல்
மாண்டடங்கப்
புத்திக் கமலத் துருகிப் பெருகிப் புவனமேற்றித்
தத்திக் கரைபுரளும் பரமானந்த சாகரத்தே."

ஏறு மயிலேறி விளையாடு முகம் ஒன்றே
ஈசருடன் ஞான மொழி பேசு முகம் ஒன்றே
கூறு மடியார்கள் வினை தீர்க்கு முகம் ஒன்றே
குன்றுருவ வேல் வாங்கி நின்ற முகம் ஒன்றே
மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம் புணர வந்த முகம் ஒன்றே
ஆறுமுக மான பொருள் நீயருளல் வேண்டும்
ஆதியருணாசல மமர்ந்த பெருமாளே.

ஆறிரு தடந்தோள் வாழ்க ! அறு முகம் வாழ்க !
வெற்றைபக்
கூறுசெய் தனிவேல் வாழ்க ! குக்குடம் வாழ்க !
செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க ! யானைதன் அணங்கு வாழ்க !
மாறிலா வள்ளி வாழ்க ! வாழ்க சீரடியாரெல்லாம்.

'பச்சை மயில் வாகனமும் பன்னிரண்டு திண்தோளும்
அச்சமகற்றும் அயில் வேலும் கச்சைத் திருவரையும்
சீரடியும் செங்கையும் ஈராறு அருள் விழியும்
மாமுகங்கள் ஆறும் விரிகிரணம் சிந்தப்புனைந்த
திருமுடிகள் ஓராறும் எந்தத் திசையும்
எதிர்த்தோன்ற வந்து இடுக்கண் எல்லாம்

பொடிப்படுத்தி எவ்வரமும் தந்து புகுந்து உல்லாசமாக
உளத்திருந்து பல்விதமாம் ஆசு முதல் நாற்கவியும்
அட்டவதானமும் சீர் பேசும் இயல் பல்காப்பியத்
தொகையும் ஓசை எழுத்து முதலாம் ஐந்திலக்கணமும்
தோய்ந்த பழுத்த தமிழ்ப் புலமை பாலித்து
ஒழுக்கமுடன்

இம்மைப் பிறப்பில் இருவாதனை யகற்றி மும்மைப்
பெருமலங்கள் மோசித்து தம்மை விடுத்து ஆயும்
பழைய அடியாருடன் கூட்டித்தோயும் பரபோகம்
துய்ப்பித்துச் சேய கடியேற்கும் பூங்கமலக்
கால் காட்டி ஆட்கொண்டு அடியேற்கு முன்னின்
றருள்—

ஆறுமுகநாதலயத்திலேயே மெய்ம்மறந்திருந்த நானும் நெல்லை முருகனும் நெல்லை மாநகரத்தில் உள்ள சாலைக்குமாரனையும், தாமிரபரணி ஆற்றில் அமுதென ஓடும் வெள்ளத்தை அளவிட்டு அன்பருக்குச் சொல்வதற்காகவே போல்; நட்டாற்றின் நாயகமாக வீற்றிருக்கும் குறுக்குத் துறை சுப்பிரமணியனையும் அடியார் கூட்டத்திற்குக் காட்ட மறந்து விட்டோம். பாளையங்கோட்டையைக் கடந்து நாங்கள் செந்தில் நெடுஞ்சாலையில் போய்க்கொண்டிருந்த போது தான் உணர்வு ஏற்பட்டது. "அடாடா! சாலைக் குமாரன் கோயிலில்தானே செந்தில் மூலவிக்கிரஹத்தைச் சற்றுநேரம் இறக்கி வைத்து எடுத்து வந்தார்கள்? அடியாரை ஆட்கொள்ள செந்தில் சந்நிதியில் அமர்ந்திருக்கும் பெருமான், வழியில் இளைப்பாறிய இடத்தைக் காட்டவேண்டாமா ?" என்று நெல்லை முருகனிடம் கேட்டேன்.


"மணி இப்பொழுது ஒன்பது ஆகப்போகிறது. ஓடிக் கொண்டிருந்தாலேயே அர்த்த ஜாமத்திற்குத் திருச்செந்தூர் போய்ச் சேருவது சந்தேகம். குறுக்குத் துறையானையும் அவசியம் பார்க்க வேண்டியதுதான். என்ன செய்வது! அவகாசம் இல்லையே ?" என்று அவர் பதில் சொல்லி முடிப்பதற்குள் அடியார் உடையார் குறுக்கிட்டார்.

" முருகா! உலகை ஆள்பவன் நமது தமிழ்த் தெய்வம். அவன் இல்லாத இடமே இல்லை. ஓம்கார சொரூபியை உள்ளக் கோயிலில் வைத்துத் தரிசித்தாலேயே போதுமானது. அதுவே சிறந்தது. ஆனாலும் கோயில் என்றும் குளம் என்றும் முன்னோர் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். ஞானம் முற்றிய நிலையை எல்லோரும் எய்திட முடியாதல்லவா? அதனால் தான் அருவாய் உள்ளவனை உருவாக்கிக் காட்டுகிறார்கள். அதற்குக் கோயில் கட்டுகிறார்கள். உற்சவங்கள் நடத்துகிறார்கள். ஒன்றோடு ஒன்றாகப் பிணைக்கிறார்கள்...எல்லாக் கோயில்களுக்கும் இப்பொழுது நாம் போய்க்கொண்டிருந்தால் உரிய காலத்தில் ஊர் போய்ச் சேர வேண்டாமா?

இருமுடி தாங்கி, நெடுவழி கடந்து, ஆபத்தான சூழ்நிலையின் மையத்தில் அமர்ந்திருக்கும் ஹரிஹர மைந்தனை நாம் பார்க்கப் புறப்பட்டதும், நம்மை வழியனுப்பி வைத்த குடும்பத்தினர் எவ்வளவு கலங்கியிருப்பார்கள் தெரியுமா? வழிமேல் விழி வைத்து நம் வருகைக்காகக் காத்துக்கொண்டிருக்கும் அவர்களுக்கு கஷ்டத்தைக் கொடுத்துக் கொண்டு நாம் யாத்திரை நாட்களை நீடித்துக்கொண்டு போவது சரியல்ல. அதனால் ஒன்று செய்ய வேண்டும். இனிமேல் வழியில்—நாம் போகமுடியாத—கோயில்களைப் பற்றிய வரலாறுகளை அந்தந்த மாவட்ட பக்தர் அவரவர்களுக்குத் தெரிந்த அளவு மற்றவர்களுக்குச் சொன்னால் போதுமானது......"


நித்ய பூஜைக்கு பரிசுத்தமான

# கோபால் கற்பூரம்



# R. Gopalakrishnan & Sons

24/90, TELUGU BRAHMIN STREET,
COIMBATORE-1

என்றார். அடியார் உடையாரின் அன்பு கலந்த அடக்கு முறையை அங்கே யாரும் எதிர்க்கத் துணியவில்லை.

ஜெயந்தி நகரம், செந்திலாபுரி, திருச்செந்தூர் என்றெல்லாம் வர்ணிக்கப்படும் புண்ணிய க்ஷேத்திரத்திலிருந்து கடற்காற்று வீசியது. "குறும்பூர் தாண்டியாகி விட்டது... அம்மன்புரம், சோநகன்விளை... இந்த இரண்டையும் கடந்து விட்டால், முருகப்பெருமானின் 'விளக்கு வேல்' கம்பீரமாகக் காட்சியளிக்கும். சுற்று வட்டாரத்தில் பத்து மைல்களுக்கு அந்த மின்சார ஒளிவேல் ஆலயக்கோபுரத்திலிருந்து காட்சி தரும்'' என்று நெல்லை முருகன் மற்றவர்களுக்குச் சொல்லிக் கொண்டிருந்த போது, பஸ்ஸின் முன்புறம் உட்கார்ந்திருந்த பக்தர் "வெற்றிவேல் முருகனுக்கு அரோஹரா'' என்று உணர்ச்சி மேலிட கடலோசையெனக் குரல் எழுப்பினார். பக்தி வெள்ளத்தில் ஆழ்ந்திருந்த அனைவரும் அவருடன் சேர்ந்து கொண்டோம். தொலைவில் கோபுர வேல் பளிச் சென்று தெரிந்தது. கரம் குவித்து வணங்கிய அன்பர் குழாத்தில் ஒருவர் வேலின் மகிமையை வர்ணித்து—

வீரவேல், தாரைவேல், விண்ணோர் சிறை மீட்ட
தீரவேல், செவ்வேள், திருக்கைவேல்—வாரி
குளித்தவேல், கொற்றவேல், சூர்மார்பும் குன்றும்
துளைத்த வேல் உண்டே துணை.

என்ற பாடலைத் தாளக் கட்டோடு பாடினார்.

உடனே இரண்டொரு பக்தர்கள் தங்கள் பைக்குள்ளிருந்த ஜாலராக்களை எடுத்து நாதோபாசனைக்குத் தாளம் போடத் தொடங்கினார்கள். ஒருவர் மோர்சிங் வாத்தியத்தில் வேலனை அமர்த்தி இன்ப மூட்டினார். இன்னொருவர் கஞ்சிராவை எடுத்து வாசித்தார். அவ்வளவுதான், அங்கே திருப்புகழ் பஜனை பலவித நாதத்தில் பாங்காக ஆரம்பமாகி விட்டது!

முற்றிலும் புதிய நண்பர்கள் மத்தியில் பேரின்பத்தை அனுபவித்துக் கொண்டிருந்த நான், "தமிழன் என்பதற்கு

அகராதியில் 'முருக பக்தன்' 'முருகனடிமை' என்று அர்த்தம் போட வேண்டியது தான்" என்று நினைத்துக்கொண்டேன். சாதி, மத இன வகுப்புப் பிரிவுகள் அடங்கிய சமூகமென்று லும் முருக பக்தியில் தமிழ் மகன் ஒன்றுயிருப்பது விந்தையி லும் விந்தைதானே!

செந்திலாண்டவன் விடுதி—யாத்ரிகர்கள் தங்குவதற் காக தேவஸ்தானம் கட்டியுள்ள சத்திரம்—முன்னுல் பஸ் போய் நின்றபோது இரவு மணி சுமார் பத்து இருக்கும். வண்டியிலிருந்து கூட்டமாக இறங்கியதும் இரண்டொரு நபர் எங்களை நோக்கி ஓடி வந்தனர். "அடாடா! அரை மணி முன்னதாகவே வரக்கூடாதா? ஏகாந்த தீபாராதனை, பள்ளி யறை பவனி இரண்டையும் பார்த்திருக்கலாமே! நடை சாத் தும் சமயம்! ஓட்டமாக ஓடினுல் திரை வழியாக தரிசிக்க லாம்" என்ருர் அவர்களில் ஒருவர்.

உடனே அடியார் உடையார் தமது "மொபைல் முருகனை" மார்போடு அணைத்துக் கொண்டு முன்னுல் நடந் தார்.

ஹர ஹரோ ஹரா சுவாமி ஹர ஹரோ ஹரா
ஹர ஹரோ ஹரா சுவாமி ஹர ஹரோ ஹரா
கதிர் காம வேலருக்கு ஹர ஹரோ ஹரா
கந்தப்ப சுவாமிக்கு ஹர ஹரோ ஹரா
திருப்பரங்கிரி தீரனுக்கு ஹர ஹரோ ஹரா
திருச்செந்தூர் தேவனுக்கு ஹர ஹரோ ஹரா
திருப்பழனிச் செல்வனுக்கு ஹர ஹரோ ஹரா
திரு ஏரக பாலனுக்கு ஹர ஹரோ ஹரா
குன்றிலாடும் குமரனுக்கு ஹர ஹரோ ஹரா
குஞ்சரிதன் கணவனுக்கு ஹர ஹரோ ஹரா
குற வள்ளி காந்தனுக்கு ஹர ஹரோ ஹரா
குணங் கடந்த கோலனுக்கு ஹர ஹரோ ஹரா
சோலை மலைக் கிழவனுக்கு ஹர ஹரோ ஹரா
சொகுசுக்கார முருகனுக்கு ஹர ஹரோ ஹரா
சிவ சக்தி வடி வேலனுக்கு ஹர ஹரோ ஹரா

சிங்கார வடி வேலனுக்கு ஹர ஹரோ ஹரா
அகங்கார நாசனுக்கு ஹர ஹரோ ஹரா
அன்பர்களின் நேயனுக்கு ஹர ஹரோ ஹரா
எட்டுக்குடி எந்தைக்கு ஹர ஹரோ ஹரா
எங்கும் நிறை இறைவனுக்கு ஹர ஹரோ ஹரா
ஓங்காரத் தத்துவனுக்கு ஹர ஹரோ ஹரா
ஓம் சக்தி தத்துவனுக்கு ஹர ஹரோ ஹரா...

என்று நாமாவளி பஜனை செய்துகொண்டு நாங்கள் பின் தொடர்ந்து ஓடினேம். கிரி பிரதட்சணம் வந்து சண்முக விலாசத்தில் பிரவேசித்த சமயம் ஓங்கார சப்தத்தை உலகெலாம் கேட்கச் செய்தது ஆலாட்சமணி. அகிலாண்ட கோடி நாயகன் ஆறுமுகப் பெருமானுக்கு ஐந்துமுகத் தீபாராதனை நடந்து கொண்டிருந்தது. நின்ற இடத்திலிருந்து தரிசித்தோம். நெடுஞ்சாண்கிடையாக விழுந்து வணங்கினேம். முதன் முதலாக அந்தத் தெய்விகக் காட்சியைப் பார்த்த பக்த நண்பர்கள் சிலர் மெய்ம்மறந்த நிலையில் நமஸ்கரித்துக்கொண்டே சென்றார்கள்.

"மணி பத்து இருக்குமே? இது என்ன அதிசயம் நம் வருகைக்காக தீபாராதனையைத் தள்ளிப் போட்டிருக்கிறார்களா? ஒன்றும் புரியவில்லையே? குறித்த காலத்தில் தங்கு தடையின்றிப் பூஜை செய்யும் வழக்கமாயிற்றே!" என்று யோசித்துக் கொண்டே நெல்லை முருகனைத் தேடினேன்... அவர் கோயில் சிப்பந்தி ஒருவரிடம் பேசிக்கொண்டிருந்தவர் முக மலர்ச்சியோடு ஓடிவந்து, "எல்லாம் அவன் செயல்...!" என(

"என்ன விசேஷம்? நம்ம கடிகாரம் ரொம்ப வேகமாக ஓடிவிட்டதா!......அல்லது கோயில் கடிகாரம் மெதுவாகப் போகிறதா?......" என்று கேட்டேன்.

"இரண்டுமில்லை......யாரோ ஒரு மந்திரி அர்த்தஜாம தரிசனத்துக்காக இங்கு வருவதாக இருந்ததாம். அதற்காகக் காத்திருந்தார்களாம். இப்போதான் அவர் நாளைக் காலை

விச்வரூபத்திற்கு வரப்போவதாகத் தகவல் அனுப்பினாராம். அதனால் தான் லேட்...!"

"மந்திரி வாழ்க!" என்று எண்ணிக் கொண்ட நான், "மந்திரி வருவதற்காக விச்வரூப தரிசனத்தையும் உச்சி காலத்திற்குத் தள்ளிப்போட்டுவிடப் போகிறார்கள்! கோயில் களில் அந்தந்தக் காலத்தில் முறைப்படி ஆராதனைகள் நடத்தினால்தான் பிராண ப்ரதிஷ்டை செய்யப் பட்ட மூர்த்தி அங்கே உட்கார்ந்திருக்கும். இல்லாவிட்டால் சொல்லாமல் கொள்ளாமல் ஓடிவிடும்...!" என்றேன்.

"உண்மைதான், ஆனால், சர்க்கார் நிர்வாகத்திற்குட் பட்ட ஆலயங்கள் எல்லாவற்றிலும் இப்போது இந்த வழக்கம் தினசரி சம்பவமாகி விட்டது. ராஜ்ய பரிபாலனம் செய்பவர்களுக்கு உலக பரிபாலனம் செய்பவன் அடங்கி இருக்க வேண்டிய காலம் இது!......"

நான் சிரித்தேன். "உலகையும் ராஜ்யத்தையும் பரி பாலனம் செய்யும் இருவரும் பரஸ்பரம் இதை விரும்புகிறார் களோ இல்லையோ, அன்றாடம் கோயிலைப் பரிபாலனம் செய் வதாகச் சொல்லிக்கொண்டிருப்பவர் அவ்வப்போது போடும் தப்புக்கணக்கில் இவ்வாறு நடந்து விடுகிறது" என்றேன்.

கோஷ்டியினிடையே பக்தியும் உற்சாகமும் கரைபுரண் டோடத் தொடங்கியது. அடியார் உடையார் ஆனந்த வெள்ளத்தில் மூழ்கியிருந்தார். என்றோ ஒருநாள் திருவனந்த புரத்திலிருந்து சண்முகனைத் "திருடி" வந்த பக்திக் கொள்ளை யரோடு தம்மை ஒப்பிட்டுப் பார்த்துக்கொண்டாரோ என்னவோ, தமது மார்போடு அணைத்திருந்த மொபைல் சண்முகனை இறுக்கிப் பிடித்துக் கொண்டார். செந்தில்வாழ் அந்தணரின் அரிய சொத்தை—சண்முகனை—தாம் களவாடிப் பெட்டிக்குள் அடக்கி வைத்திருப்பதாக எண்ணினார் போலும்! சந்நிதியை நோக்கிச் செல்லும் பக்த கோஷ்டிக்குத் தலைமை தாங்கிச் செல்ல வேண்டியவர் பின்தங்கி விட்டார்.

சண்முக விலாஸத்திலிருந்து சண்முகனை ஆயிரமாயிரம் தடவை தரிசித்தவர்களே பக்தி போதையில் வெறியோடு ஓடும்போது, முதன் முதலாகப் பார்க்கிறவர்களின் நிலையை எவ்வாறு வர்ணிக்க முடியும்? எல்லோரும் ஓடினர்கள். நெல்லை முருகன் எல்லோருக்கும் முன்னால் ஓடியவர் உள் மண்டப வாயிலின் அருகே நின்று, அடியார் அன்பர்களைத் தடுத்து நிறுத்தினர். "உம்......ஹும். இந்த வழியாக சந்நிதிக்குள் நுழைவது முறையாகாது. கொடி மரம் உள்ள கிழக்கு வாயில் வழியாக சந்நிதிக்குள் நுழைவதுதான் முறை" என்றார்.

சப்த லோகங்களையும் கருணையோடு பார்க்கும் வண்ணம் சண்முகன் இங்கே பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றான். நாழிக்கிணற்றிலும் கடலிலும் ஸ்நானம் செய்துவிட்டுவரும் அடியார் கூட்டம் சண்முக விலாசத்தின் தெற்கு கோடியில் காலை வைத்ததுமே சண்முகன் காட்சி அளிக்கிறான். "வா, வா!" என்று அழைக்கிறான். அந்தக் கணமே அவன் கம்பீரத் தோற்றமும், அவன் கைவேலும் அடியாருடைய அறிவில் புகுந்து விளையாடத் தொடங்கி விடுகின்றன.

கிழக்கு வாயில் வழியாக பக்தர் கோஷ்டியோடு சந்நிதியில் பிரவேசித்த அடியார் உடையாரின் கூரிய திருஷ்டி அங்கே அர்த்த மண்டபத்தில் கடைசி கருங்கல் தூணில் பொருத்தப்பட்டிருக்க மரப்பெட்டியின் மீது விழுந்தது உடனே கிட்டத்தில்போய் நின்று தூணின் மேற்கு முகப்பில் செதுக்கப்பட்டிருந்த சிலையைப் பார்த்துவிட்டு, மற்றவர்களையும் அழைத்துக் காண்பித்தார். அங்கே ஆதிசங்கரர், மூலவரைத் தரிசிக்கும் ரீதியில் அமர்ந்து, அடியார் கூட்டம் முதலில் குரு தரிசனம் செய்யும் பாக்கியத்தை அளிக்கும் வண்ணம் காட்சி தந்துகொண்டிருப்பதைக் குனிந்து ஊன்றிக் கவனித்த அடியார் உடையார், பக்கத்தில் நின்றிருந்த என்னிடம் ஆச்சரியத்தோடு, "எத்தனையோ தடவை இங்கு வந்து போயிருக்கிறேன். என் கண்ணில் இது படவில்லை. கண்ணில் படாத வகையில் இருந்த ஒரு அற்புதத்தைக் கண்ணில் படும்

படிச்செய்த புண்ணியவான் யாரோ தெரியவில்லை. இதற்குக் கோயிலில் முறைப்படி பூஜை செய்கிறார்களா? ரொம்ப விசேஷமாக அமைந்திருக்கிறதே'' என்று கேட்டார்.

''அதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன, நிர்வாகிகள் மனத்தை முருகன் இன்று வரை மாற்றி அமைக்க வில்லை. ஆனால், குருபக்தியின் தனித்தன்மையை உணர்ந்துள்ள பக்தர்கள் அனைவரும் இப்போது இங்கே வழி படுகிறார்கள். கோயில் பூஜையில் சேருவதையும் சேராததையும் அவர்கள் பொருட் படுத்துவது இல்லை...'' என்று நான் பதில் கூறியதும், அடியார் உடையார்...''நம்ம கோஷ்டியினருக்கு சங்கரரோடுகூட பஞ்சலிங்கம், வள்ளிக் குகை இரண்டையும் காட்டிவிட வேண்டும்'' என்று கூறிக் கொண்டே கோஷ்டியோடு சங்கரரைச் சுற்றி வலம் வந்தார். அதன் பின்னரே நாங்கள் சண்முகன் சந்நிதியில் போய் நின்றோம்.

அழகிய மஞ்சத்தில் வெண்பட்டுடுத்தி, பச்சை மேலங்கி பூண்டு,பொறுக்கி எடுக்கப்பட்ட சில ஆபரணங்களை மட்டும் அணிந்து கொண்டு, வைர வேலை வலக் கரத்தில் ஏந்தி காட்சி யளித்த சண்முகனைக் கண்டோம். உடன் கண் பார்வை நேரில் சென்றது. அர்த்த ஜாம அபிஷேகத்தைக் குளிரச் செய்துகொண்டு அடியார் உளங்குளிரக் காட்சியளித்துக் கொண்டிருந்தான் பாலசுப்பிரமணியன். விபூதியபிஷேகம் கலைக்கப்படாத நிலையில், அவன் செவ்வண்ணப் பட்டாடை உடுத்திக் கொண்டிருந்த காட்சி கண் கொள்ளாக் காட்சி யாக இருந்தது. அதில் லயித்துப்போன அன்பர் ஒருவர்,

மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாய் உமை பங்கன் திருவால வாயான்
திரு நீறே

வேதத்தில் உள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு

ஓதத் தகுவது நீறு உண்மையில் உள்ளது நீறு
சீதப் புனல் வயல் சூழ்ந்த திரு வால வாயான்
திரு நீறே

என்று நைந்துருகிப் பாடினர்.

மெய்சோர உடல் சோர நின்றிருந்த அடியார் கூட்டத்தைக் கவனித்தேன். கரங்குவித்துக் கும்பிட்டவர், கும்பிட்டுக் கொண்டே இருந்தார். கன்னத்தில் போட்டுக்கொண்டவர் போட்டுக்கொண்டே யிருந்தார். பாடியவர் பாடிக்கொண்டே யிருந்தார். விழுந்து நமஸ்கரித்தவர் அந்த நிலையிலிருந்து மாறும் எண்ணமே யில்லாதவர் போன்று காணப்பட்டார்! பட்டரும், போற்றியும் அளித்த இலை விபூதிப் பிரசாதத்தை வாங்க இரு கைகளையும் நீட்டியவர் நீட்டிய நிலையிலேயே இருந்தார்! இவ்வாறு சந்நிதியின் மத்தியில் நின்றுகொண்டு, வைத்த கண் வாங்காமல் இடமும், வலமும் மாறி மாறிப் பார்த்துப் பேரின்பத்தை அனுபவித்துக் கொண்டிருந்த அடியார் கூட்டத்தை அப்புறப்படுத்தி, நடை சாத்துவதில் முற்பட்டனர் கோயில் சிப்பந்திகள். விட்டுப் பிரிய மனமில்லாதவர்கள் அவசர அவசரமாக இரு சந்நிதிகளையும் மாறி மாறிப் பார்த்ததைக் கவனித்தால் அவர்கள் இரு சந்நிதிகளையும் எடைபோட்டுப் பார்க்கிறார்களோ என்று எண்ணத் தோன்றியது. சண்முகனைப் பார்க்கும்போது அடியார் மனத்தில் பால சுப்பிரமணியன் ஒரு மாற்று எடை குறைந்து காணப்பட்டான். பாலசுப்பிரமணியன் மீது அவர்கள் பார்வை விழுந்தபோது சண்முகம் சற்று எடை குறையலானான்!

சாம, பேத, தான-தண்டம் நீங்கலாக - வழியைக் கடைப்பிடித்துச் சிப்பந்திகள், அடியார்களைச் சந்நிதியிலிருந்து அகற்றி நடை சாத்தியபோது, கொடி மரத்தடியில் அடியார் உடையாரும், நெல்லை முருகனும் கோஷ்டியினருக்குச் செந்தில் வரலாறுகளை விளக்கிக் கொண்டிருந்தனர்.

"இங்கே மூலஸ்தானம் எது? சண்முகமா? பாலசுப்பிரமணியனா? ஒன்றையொன்று மிஞ்சும் வண்ணம் இருப்பதால் குழப்பமாயிருக்கிறது..." என்று ஒரு பக்தரின் சந்தேகத்திற்கு அடியார் உடையார் பதில் கூறினார்.


"பாலசுப்பிரமணியன்தான் மூலவர்...செந்திலாதிபன், செந்திலாண்டவன் என்றெல்லாம் அழைக்கப்படுகிறான்... மாமுனிவர்களும் அவதார புருஷர்களும் ஆராதித்து வந்த

Grams : DEMCO Phone : 52357
52358

Manufacturers of

PRESTIGE & PREETT

Pressure Cookers and PREETT Modern Kitchenware




**TT. (Private) LIMITED**

Dooravaninagar, Bangalore 16

தெய்வம். ஆதி சங்கரர் இந்தத் தலத்திற்கு வந்து சிறிது காலம் தங்கியிருந்து புஜங்கஸ்தோத்திரம் பாடியுள்ளார். கரிஷியும் அகத்தியரும் வழிப்பட்டிருக்கிறார்கள். இங்கே, குரு அம்சமாகத் திகழ்கிறான் குருநாதன். ஆதிகாலத்து நாடிகளும் ஜோதிட நூல்களும் குரு வழிபாட்டுக்கு இத்தலத்தையே முக்கியமாகக் குறிப்பிடுகின்றன. அருணகிரியாரும், குமரகுருபரரும், பகழிக் கூத்தர் என்ற வைணவ பக்தரும்... இங்கு விசேஷ பக்தி காட்டி அருள் பெற்றிருக்கிறார்கள்."

அடியார் உடையார் விட்ட இடத்தை நெல்லை முருகன் பிடித்துக் கொண்டவர், செந்தில் வரலாற்றைச் சுருக்கமாக, அதே சமயம் ஒன்றைக்கூட விடாமல் கூறினார்.

குமரக்கடவுள் சூரபதுமாதியரை வதம் செய்ய முற்பட்டதும், தமது பரிவார தேவதைகளோடு வந்து முகாமிட்ட தலம் திருச்செந்தூர். இங்கே சூரனைப் பூண்டோடு அழித்து, அவனைச் சேவற் கொடியாக மாற்றிக் கொண்டதால் ஜயந்தி நகரம் என்ற பெயரும் இதற்கு உண்டு. மூன்று உலகங்களிலும் சஞ்சரிக்கும் பாக்கியத்தைத் தவ வலிமையால் பெற்ற திரிசுதந்திரர்கள் வேண்டுகோளுக்கிணங்கி குமார சுப்ரமணியம் இங்கு கோயில் கொண்டெழுந்தருளியுள்ளார். இன்று முக்காணியர் என்று அழைக்கப்படும் முருகனடிமைக் கூட்டத்தினரே திரிசுதந்திரர் ஆவர். அவர்களுடைய பராமரிப்பிலும், பாதுகாப்பிலும், பக்தி நிறைந்த பூஜை ஆராதனையிலுமே முருகப்பெருமான் வெகு காலமாக இங்கு இருந்து வருகிறார்.

சரித்திர வரலாறுகளை யொட்டி திருச்செந்தூரைப் பார்த்தால் அது பெரும்பாலும் சேர நாட்டையே சேர்ந்திருந்ததாகத் தெரிகிறது. சேர மன்னர்களும், பின்னர் தோன்றிய மலையாள ராஜ்ய மன்னர்களும் நெல்லை மாவட்டத்தின் பெரும் பகுதியை ஆண்டு வந்திருக்கிறார்கள். திருச்செந்தூரில் இன்னும் கேரள ஆகம ஆசார முறைப்படிதான் பூஜைகள் நடைபெறுகின்றன. தமிழகத்தில் போற்றிமார்

பூஜை நடத்தும் பெரிய க்ஷேத்திரம் இது ஒன்றுதான். ஆரம்பத்தில் திரிசுதந்திரர் செய்து வந்த பூஜை, பின்னர் கேரள மன்னர் ஆட்சியின்போது மாறியிருக்க வேண்டும்.

ஆங்கிலேய ஆட்சியின்கீழ் நெல்லை மாவட்டம் வந்த காலத்தில் கோயில் நிர்வாகம், திருப்பணி எல்லாம் கேரள மன்னரிடமிருந்து திரிசுதந்திரர்களுக்கு மாறிவிட்ட போதிலும், போற்றிமார் பூஜை மட்டும் நிலைத்து விட்டது. இப்போது இக்கோயிலும் அறநிலையப் பாதுகாப்புச் சட்டத்திற்கு உட்பட்டிருப்பதால் புராண காலத்திலிருந்து வம்ச வழியாக வந்துள்ள திரிசுதந்திரர்—முக்காணியர்—அடியாருக்கு அடியாராக இருந்து காலப் போக்கிற்கேற்ப இறை பணி புரிந்து வருகிறார்கள். திருச்செந்தூர் போகும் அடியாருக்கு அரசாங்கம் எத்தனையோ சௌகரியங்களும் தரிசன சுதந்திரமும் வழங்கியிருந்தாலும். தொன்றுதொட்டு வரும் வழக்கத்தை யொட்டி செந்திலாதிபனை இந்த திரிசுதந்திரர் உதவியோடு தரிசிப்பதையே பெரும்பாலான அடியார் விரும்புகிறார்கள். இன்றைய முக்காணியரே அடியார் பலருக்கு முருகனாகத் தோன்றுகிறார்கள் என்று கூடச் சொல்லலாம்! ஆண்டவன் தரிசனத்திற்குப் பிறகு முக்காணியர் இடும் அறுசுவை உண்டியையும், தலம்பற்றி அவர்கள் கூறும் வரலாறுகளையும் பக்தியோடு கேட்காத பக்தர் இருப்பதற்கில்லை.

அடுத்த நாள் காலை நாலு மணிக்கே கடல் ஸ்நானம் செய்தோம். முக்காணி ஒருவர் ஓடோடி வந்து உதவி செய்தார். நாழிக் கிணற்றில் நாற்பத்தியொரு பேரும் முழுக்கிட்டு வந்ததும் அவர், "ஐந்து மணிக்கே பள்ளியறை திறந்து விடுவார்கள். உடனே விச்வரூப தரிசனம்—கொஞ்சம் வேகமாகப் போங்கள், சந்நிதியில் இடம் பிடித்துக் கொள்ள வேண்டும்..." என்றார் : அதைக் கேட்டதும் சில முருக பக்தர்கள் ஓட ஆரம்பித்தார்கள். என் எண்ணம் எங்கோ ஓடியது. "பாவம், இவர்கள் ஓடுகிறார்கள். மந்திரி வந்திருக்கிறாரோ, இல்லையோ? அவர் வராவிட்டால் விச்வரூபத்தை உச்சி

காலத்திற்குத் தள்ளிப் போட்டு விடுவார்களே! அடியார் உடையார் ஏழு மணிக்குப் புறப்படவேண்டும் என்று திட்டம் போட்டிருக்கிறார். முருகா! இந்த பரம பக்தர்களைச் சோதிக்காதே!'' என்று வேண்டிக்கொண்டே நடந்தபோது, நெல்லை முருகன், கோயிலிலிருந்து நாழிக் கிணறு நடையில் வெகு உற்சாகத்தோடு ஓடிவந்தார்...என்னைப் பார்த்ததும் "நல்லவேளை! மந்திரி வந்துவிட்டார்! விச்வரூப தரிசனம் குறித்த நேரத்தில் கிடைக்கும்...போய் விசாரித்து விட்டு வந்தேன். இதே கவலையில் நேற்று இரவு தூங்கவில்லை'' என்றார்.

"மந்திரி வாழ்க!'' என்றேன்...நேற்று இரவு அவரை வர விடாமல் செய்து, காலம் கடந்து போயும் எங்களுக்குத் தரிசனம் தந்து, இன்று அவரைத் தருவித்து, காலாகாலத்தில் எங்களுக்கு விச்வரூப தரிசனம் தரக் காத்திருக்கும் கந்தனை மனமார வாழ்த்தினேன்: எத்தனையோ தடவை விச்வரூப தரிசனம் செய்திருந்தாலும் அன்றைய தரிசனம் மிகமிக விசேஷமாக இருந்தது. அதற்குக் காரணம், தை மாதக் கடும் குளிரைப் பொருட்படுத்தாமல் கட்டுக் காவலோடும், பரிவாரங்களோடும் கர்ப்பக்கிரகத்தை யடுத்த வாயிற்படியில் முன் வரிசையில் முதலிடத்தில் நின்று கொண்டிருந்த மந்திரிதான் என்று சொல்லாமலே விளங்கும். எப்படி இருந்தால் என்ன? அடியாருக்கு வேண்டியது அவனுடைய ஆனந்த தரிசனம்தானே!

தீபாராதனை முடிந்து வெளியே வந்தோம்.

கொடிமரத்தின் தெற்கு பாகத்தில் நூற்றுக் கணக்கான பக்தர்கள் வரிசையாக நின்றுகொண்டு "அம்போதி மத்தியே...'' என்று ஆரம்பிக்கும் குமார உபநிஷத் சுலோகங்களை ஒரே சுருதியில் ஒரே குரலில் உரைத்து வணங்கும் காட்சி காண்போரை மெய் சிலிர்க்க வைத்தது. சூரபதுமனை வதம் செய்ததும் தம்மைச் சூழ்ந்து நின்ற பரிவாரங்களுக்கு

சுவாமி தமது பன்னிரு கைகளாலேயே விபூதி பிரஸாதம் வழங்கினாராம். பகவானின் பன்னிரு கைகளுடைய ஸ்தானத்தைப் பன்னீர் இலை இன்று பெற்று, திருச்செந்தூர் இலை 'விபூதி' என்ற புகழோடு அடியார் கைகளில் தேவப் பிரஸாதமாக வந்து சேருகிறது. பரமாச்சாரியார் ஆதிசங்கரர் புஜங்க ஸ்தோத்திரத்திலும் இந்த இலை விபூதியைப் பற்றிக் குறிப்பிட்டிருப்பதால், தேவ ஔஷதமாகக் கருதி இதை பக்த கோஷ்டிகள் பெற்றுச் செல்லுகின்றனர். குமார உபநிஷத்தின் கடைசி சுலோகமும், இதன் பெருமையை வர்ணிக்கும் போது—

விராஜபத்ரஸ்த குமார பூதிம்
யோபக்த ஹஸ்தேன—ஸம்ஸ்வீகரோதி
ஸ-ஸர்வஸம்பது ஸமவாப்தி பூர்ண;
பவேத்தி ஸம்யாதி தம் தீர்க்க மாயு:


Documents Copying Same Size,
any records. Certificates, Sale deeds
Plans & designs, Written Matters or
anything & everything.

*Uudertaken and deliverd promptly.*
*Originals returned immediately.*

Phone : **31688**

Contact :

# M. DOSS BROS

**PHOTOGRAPHERS**

14, Poonamalle High Road. MADRAS-3

**ஏதாத்ருசானுக்ரஹ பாஸிதாய**
**ஸாகல்ய கோலாயலை ஷண்முகாய**
**ஓம் ஹம்ஸ! ஓம் தஸ்மை ஷண்முகாய நமோ அஸ்து**

என்று கூறுகிறது.

முக்காணி முருகன் எங்கள் மத்தியில் நின்று கொண்டு மேற்குறிப்பிட்ட விவரங்களைச் சொல்லிவிட்டு, ' இன்று கால சந்தியானதும் மூலவருக்குத் தாராபிஷேகம் நடக்கிறது. உச்சிக்காலத்தில் ஷண்முக அர்ச்சனையும் உண்டு... இரண்டும் அடிக்கடி இங்கே நடைபெறுகிற விசேஷந்தான்... இருந்தாலும் எப்போதாவது அற்புதமாகத்தான் இரண்டும் ஒரே நாளில் நடக்கும்... நீங்கள் வந்த சமயம் பொருத்தமாயிருப்பதால் இரண்டையும் தரிசனம் செய்துவிட்டுப் போகலாமே" என்றார்.

"அது என்ன தாராபிஷேகம், ஷண்முக அர்ச்சனை?" என்று கேட்டார் ஒரு பக்தர்.

'மூலவருக்கு சிரசுக்குமேல் சிறு துவாரத்தோடு கூடிய பெரிய வெள்ளிப் பாத்திரத்தில் பசும்பாலை நிரப்பி நிறுத்தி அபிஷேகப் பாலை குறையக் குறைய பாத்திரத்தில் நிரப்பிக் கொண்டேயிருப்பார்கள். துவாரத்தின் வழியாகத் தாரையாகப் பகவான் தேகத்தில் பால் விழுந்து கொண்டேயிருக்கும். சுமார் மூன்று மணி நேரம் தங்கு தடையின்றி இந்த அபிஷேகம் நடந்துகொண்டேயிருக்குமாதலால், காண்போர் கண்குளிரக் காட்சியளித்த வண்ணமிருப்பான் முருகன். ஏராளமான செலவில் சண்முக நாதனுக்குப் புஷ்பாஞ்சலி செய்வார்கள். ஆறு பட்டர்மார் ஆறுமுகத்தைச் சுற்றி நின்று ஒரே மாதிரியாக ஒரே சமயத்தில் ஸகஸ்ரநாம அர்ச்சனை செய்து, தூப, தீப நைவேத்தியங்கள் செய்வார்கள். ஒரு தடவை பார்த்து விட்டால் அப்புறம் அந்தக் காட்சி கண்ணை விட்டு அகலாது."

முக்காணி முருகன் வருணனையும் முருகன் தரப்போகும் கோலாகலக் காட்சியும் எங்கள் கோஷ்டியினிடையே பிளவை

உண்டாக்கி விடுமோ என்று நான் அஞ்சிய சமயம், அடியார் உடையார், "முருகப் பெருமானின் அறுபடை வீடுகளில் ஒன்றைத்தான் இதுவரை நாம் கண்டிருக்கிறோம். ஐந்துபடை வீடுகளைத் தரிசித்துக் கொண்டு குறித்த காலத்தில் எப்படி ஊர்போய்ச் சேர முடியும்?' அடுத்த வருஷம் நாங்கள் இதே கோஷ்டியாக வந்து உனக்குத் தாரா அபிஷேகமும், சண்முகார்ச்சனையும் நடத்த அருள் புரிய வேணும்' என்று வேண்டிக் கொண்டு, புறப்படுங்கள்—எட்டு மணிக்கு இலஞ்சி, ஒன்பது மணிக்குத் திருமலை...பத்தரைக்குள் கழுகுமலை... சரியாகப் பன்னிரண்டு மணிக்குப் படை வீடான பரங் குன்றத்தில் இருக்க வேண்டும்" என்று சற்றுக் கண்டிப்பாகவே கூறிவிட்டு,

பாதி மதி நதி போது மணி சடை
நாதரருளிய குமரேசா...!

என்ற பாடலைத் துரித காலத்தில், உரத்த குரலில் பாடி எங்களையும் தொடர்ந்து பாடச் சொல்லிவிட்டு, முன்னால் நடந்தார். நாங்கள் பின்னால் ஓடினோம். தமது சொல் வன்மை செயல்திறன் இரண்டிலும் அடியார் உடையாரிடம் தோல்வி கண்டதைக் குறித்து சிறிதும் வருந்தாதவராக 'முக் காணி முருகன்' நழுவி மறைந்தவர் எங்களுக்கு முன்னால் எப்படியோ சென்று சண்முக விலாசத்தில் அப்போதுதான் பிரவேசித்த ஒரு புது பக்தர் கோஷ்டியினரை வளைத்துக் கொண்டு பக்தித்தொண்டு புரியத் தலைப்பட்டிருந்ததைப் பார்த்த நான், "எல்லாத் தொழிலிலும் ஒரு நுட்பம் இருக் கத்தான் செய்கிறது. அதை உணர்ந்து செயல்படுகிறவனே தொழிலில் வெற்றி பெறுகிறான். பக்தித்தொண்டு புரிவதும் ஒரு தொழிலாக மாறிவிட்டிருக்கும் இந்தக் காலத்தில் அதற்கும் ஒருகல்விச் சாலை, கல்லூரி எல்லாம் நாளடைவில் ஏற்படத்தான் வேண்டும். அப்படி ஏற்படும்போது முக்காணி முருகன்மார்களிடம் பாடபோதனைப் பொறுப்பை ஒப் ப டைப்பதுதான் பொருத்தமாயிருக்கும்" என்று எண்ணிக் கொண்டேன்.

இலஞ்சியை நோக்கி வண்டி ஓடிக்கொண்டிருந்தது. எனக்கு முன் ஆசனத்தில் உட்கார்ந்திருந்த மூன்று முருகன் மார்கள் உரையாடியது என்காதில் விழுந்தது. அதை அப்படியே எழுதுகிறேன்! திருச்செந்தூரில் தனிப்பட்ட முறையில் அவர்கள் சேகரித்த தகவல்கள்தான் அவை.

"மூலஸ்தானத்தின் அமைப்பைக் கவனித்தீர்களா நீங்கள்? எங்கும் காணப்படுவது போல் அபயகரம் இல்லை இங்கே."

"அந்தக் கூட்டத்தில் நான் அதைக் கவனிக்கவில்லை. ஆனால், ஒரு கதை கேள்விப்பட்டேன். சுவாமி வழக்கம் போல் தந்தைக்கு (ஈசனுக்கு) பூஜை செய்து கொண்டிருந்தாராம். அந்த சமயம் நாரத முனிவர் சுவாமியைத் தரிசிக்க வந்தவர் துதி பாடவும், சுவாமி அர்ச்சனை செய்த நிலையிலேயே திரும்பிப் பார்த்தாராம். செந்தில் பாலசுப்பிரமணியன் அந்த அவசரத்திலேயே இன்று பக்தர்களுக்குத் தரிசனம் அளித்துக்கொண்டிருப்பதாகக் கூறுவார்கள்..."

"பொருத்தமாகத்தான் இருக்கிறது. நேற்று இரவு பூஜை செய்யும் ஒரு போற்றியோடு சண்முகவிலாசத்தில் பேசிக்கொண்டிருந்தேன். முதிர்ந்த அனுபவமும், வயதும் அடைந்தஇவர் மூலஸ்தானத்தில் ஒரு விளாங்காய்ப் பரிமாணமுள்ள சாளக்கிராமம் இருப்பதாகச் சொன்னார். அது சுப்பிரமணிய சாளக்கிராமமாம். அதன் சக்தி காரணமாகத்தான் செந்திலாதிபன் சந்நிதி தனி விசேஷத்தோடு திகழ்கிறதாம். இதைக்கேட்டபோது எனக்கு ஆச்சரியமாயிருந்தது..."

"சுப்பிரமணிய சாளக்கிராமமா? வெறும் கட்டுக்கதை. சாளக்கிராமம் விஷ்ணு அம்சம் என்பார்களே?"

"அப்படித்தான் நானும் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால், அந்தப் போற்றி என் எண்ணத்தை அடியோடு மாற்றி விட்டார். 'கண்டகி என்ற தேவதாஸியின் தவத்தை மெச்சி மகாவிஷ்ணு தோன்றி, அவள் வேண்டுகோளின்படி அவள் வயிற்றில் தாம் விச்வரூபகோலத்தில் பிறப்பதாக

வாக்களித்தாராம். நேபாளத்தில் அவள் கண்டகி நதியாக ஓடுகிருளாம். அந்த நதிதீரத்தில் மட்டுமே தோன்றிய மகாவிஷ்ணு அவள் மடியில் அவளுக்கு வாக்களித்தபடி சாளக்கிராம வடிவில் விளையாடிக்கொண்டிருக்கிருராம்...''

''அது சரியான கதைதான்: அதனுல்தான் சாளக் கிராமம் மகாவிஷ்ணுவின் அம்சம் என்று சொல்கிருர்கள். உண்மை அப்படியிருக்க, சாளக்கிராமத்தில் மற்ற தெய்வங்களும் தேவதைகளும் எப்படி ஜீவித்திருக்க முடியும்? அந்தப் போற்றியைக் கேட்டீர்களா?''

''கேட்காமல் இருப்பேனு? 'மகாவிஷ்ணுவின் விச்வரூபக் கோலம் என்ருல் என்ன? அதில் முப்பது கோடி தேவர்களும் அடங்கியுள்ளார்கள் அல்லவா?' என்று அவர் பதிலுக்குக் கேட்டுவிட்டு, 'நாளை என் முறை முடிந்து விடுகிறது. வீட்டில் என் பூஜையில் சில சாளக்கிராமங்கள் இருக்கின்றன. அதில் கணபதி, முருகன், சாஸ்தா, சிவன், பார்வதி எல்லாம் இருப்


*Grams : CAUSTIC.*

*Phone :* 36951 / 35099<br>
*Res :* 32683

*Please Contact*

*For All Heavy Chemicals*

The Dakshin Bharat Alkali

Corporation Ltd.,

21/228, Govindappa Naickan St.,

MADRAS-1.

பதைக் காட்டுகிறேன்!' என்றார், நான் ஆச்சரியப்பட்டேன். "நாளைக்குக் காலையில் புறப்பட்டுப் போயாகவேண்டும்...... ஆனால் இங்கு கோயிலில் சாளக்கிராமம் இருப்பதாகச் சொல்கிறீர்களே. அதைக் காட்ட முடியுமா?' என்று கேட்டேன். 'நாற்பது வருஷமாக இந்த சுப்பிரமணிய சுவாமியிடம் வேலை செய்கிறேன். இன்னும் கொஞ்ச நாள் ஓட்டியாக வேண்டும். ஏற்கெனவே சுவாமி பக்கத்தில் கீழே பீடத்தில் இருந்த சாளக்கிராமத்தை எடுத்து மறைவாக வைக்கச் சொல்லி உத்தரவு போட்டுவிட்டார்கள். என்ன காரணமோ தெரியவில்லை. பகிரங்கமாக இருக்கவேண்டாம் என்று அதிகாரிகளும் டிரஸ்டிகளும் கருதியிருக்கிறபோது, நமக்கு ஏன் சங்கடத்தை உண்டாக்கிக்கொள்ள வேண்டும்? இருக்கிற உண்மைச் சங்கதியைச் சொல்லிவிட்டேன்' என்று கூறிவிட்டு பேச்சையும் மாற்றி விட்டார்."

அந்த சாளக்கிராம சம்பவம் குறித்து நானும் கேள்விப்பட்டு விசாரணையும் செய்து பார்த்திருக்கிறேன். நானும் இதுவரை அதைத் தரிசிக்கவில்லை. உறுதியான தகவல் கிடைக்கவில்லை. ஆனால் அப்படியொன்று இருக்கிறது என்று யாரும் ஒப்புக்கொள்ளவும் இல்லை: இல்லை என்று மறுக்கவும் இல்லை.

இலஞ்சியை அடைந்தோம் கோயில் இயற்கை எழிலோடு கூடிய ஒரு பூங்காவின் மத்தியில் இருக்கிறது. கோயில் என்று சொல்வதைவிட இல்லத்தில் உள்ள அலங்கார பூஜை அறை என்று சொல்வது பொருத்தமாக இருக்கும். கமுகு, தென்னை, பலா, வாழை போன்ற பயனுள்ள மரங்கள் அடர்ந்திருக்கும் ஒரு தோப்புக்குள், செயற்கை ஆடம்பரங்கள் எதுவுமின்றி நான்கு மதில்களுக்குள் ஒரே பிராகாரத்தோடு கூடிய சிவாலயத்தில் தமது அருகிலேயே பெற்றோரையும் வைத்துக் கொண்டு, குமார சுப்ரமணியன் அடக்கஒடுக்கமாயுள்ள குழந்தையை பக்தர்களுக்கு ஞாபகப்படுத்திய வண்ணம் தரிசனம் தருகிறான். மூர்த்தியும் கீர்த்தியும் ஒருங்கே பெற்ற தலம் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கும் இலஞ்சியிலிருந்து

குறித்த காலத்திற்குச் சற்று முன்னதாகவே புறப்பட்டு விட்டோம்.

"கோயிலும், சந்நிதியும் ரொம்ப அழகாகவும் அமைதியாகவும் இருக்கிறது. விட்டுப்பிரிய மனமே இல்லை!" என்று சொல்லியவண்ணம் பஸ்ஸில் ஏறிய பக்தரிடம் "முருகன் தலம் ஒவ்வொன்றும் இப்படித்தான் இருக்கும். யாத்திரை இப்போதுதான் ஆரம்பமாகிறது. இப்போதே மனதைப் பறி கொடுத்துவிட்டால் மனம் இல்லாமலேயே மற்ற தலங்களுக்குப் போக வேண்டி வந்துவிடும்..., ஏறுங்கள்...திருமலையில் ஐந்நூறு படிகள் ஏறித்தான் நான்முகனுக்கு வேதப் பொருளை உரைத்த நாராயணன் மருகனைத் தரிசிக்க வேண்டும்" என்றேன்.

செங்கோட்டைக்கு மேற்கில் சுமார் நாலைந்து மைல் தூரத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையைச் சேர்ந்த ஒரு தனிக் குன்றின் மீது அழகியதொரு கோயில் காட்சி அளிக்கிறது. சுற்றுவட்டாரத்தில் வெகுதூரம் மலைக் கோயில் கோபுரம் மட்டும் அல்ல. கோயில் மதில்களும் மண்டபங்களும் தெரிகின்றன. மலையடிவாரத்தில் உள்ள பண்பொழி கிராமத்தில் ஸ்ரீ நாகீச்வரர் ஆலயம் இருக்கிறது. திருவிழாக் காலங்களில் திருமலை முருகன் மலையிலிருந்து இறங்கிவந்து பெற்றோரோடு குலாவி விட்டுப் போவது வழக்கமாம்.

அருணகிரியாரின் திருமலைத் திருப்புகழை முறையோடு பஜனை செய்து கொண்டே மலை மீதேறிக் கோயிலுக்குள் சென்றோம். சபரிமலையாத்திரை செய்து முடித்தவர்களுக்குத் திருமலை சாதாரண மாடிப்படிக்கட்டு போல்தான் தோற்றமளிக்கிறது. மலைமீதுள்ள கோயில் என்றாலும் பெரிதாகவும் வசதிகள் நிறைந்ததாகவும் அமைந்திருக்கிறது. சந்நிதியில் பிரவேசித்தோம். கேரள ஆகமுமில்லாத, சிவாகமமும் இல்லாத ஒரு கலப்புப் பாணியில் பட்டர் பூஜையை நடத்துகிறார் என்றாலும், பூஜையை பக்தி சிரத்தையோடு பரிபூரணமாகச்செய்துபக்தர்களின் மனத்தில் கிளர்ச்சியை உண்டாக்குகிறார். இங்கேயும் இலை விபூதி பிரசாதம் அளிக்கப்பட்ட

போது பக்தர் ஒருவர் பட்டரிடம் "இங்கேயும் திருச்செந் தூர் போலவே தானு?" என்று கேட்டார்.

"ஆமாம். இங்கு மட்டும் இல்லே. நெல்லே மாவட்டத் திலுள்ள முருகன் கோயில்கள் எல்லாவற்றிலுமே இலே விபூதி உண்டு. சில நூறு வருஷங்களுக்கு முன் இங்கேயும் திருச்செந் தூர் போலவே, கேரள ஆகமப்படிதான் ஆராதனேயும் நடந்து வந்தது... வெள்ளேக்காரன் ஆட்சிக்குப் பிறகு சிறுகச் சிறுக தமிழக வழக்கத்தை யொட்டி சிவ ஆகம வழியில் பூஜை நடத்தத் தொடங்கி யிருக்கிறுர்கள்.

சந்நிதியிலேயே சர்ச்சை நடப்பதை அனுமதிக்க விரும்பா தவர் போல் அடியார் உடையார், "பஸ்ஸில் போகும் போது பேச வேண்டியதை இங்கு பேசுவானேன்! புறப் படுங்கள்...இங்கிருந்து ஒரு மணி நேரம் ஓட்டமாக ஓடிஞல் தான் கழுகுமலேயை அடைய முடியும்...உம்...வடிவேல் முருக னுக்கு ஹர ஹரா ஹரோ! திருமலே தெய்வத்திற்கு ஹர ஹரோ ஹரா!" என்று முழக்கிக்கொண்டு திரும்பி நடந்தார்.

கழுகு மலேயை நெருங்கியதும் என் பக்கத்திலிருந்த ஒருவர் "இங்கேயும் மலே ஏறவேண்டியிருக்குமோ? ரொம்ப உயரமோ? ஏறுவது கஷ்டமாக இருக்குமோ? உச்சிக் காலம் நடந்திருக்குமோ?" என்று ஒரேயடியாகச் சந்தேகத்தையும், தயக்கத்தையும் காட்டும் 'மோ' கேள்விகளே அடுக்கிக் கொண்டே போஞர்.

"அப்படியெல்லாம் இல்லே. மலேகள் சூழ்ந்துள்ள ஒரு பிரதேசத்தில் சிறிய கிராமத்திலுள்ள பெரும் கோயிலில் எம்பெருமான் தனி ஆட்சி புரிகிறுன்..." என்று அவருக்குத் தைரியமூட்டும் விதத்தில் நான் பதில் சொல்லிக் கொண் டிருக்கும்போது, பஸ் கோயிலுக்குச் சமீபம் போய் நின்றது.

கோயில் சிப்பந்தி ஒருவர் ஓடிவந்து, "சரியாகப் பன் னிரண்டு மணிக்கு உச்சிகாலம் பார்த்துவிட்டுச் சாப்பாட் டையும் முடித்துக்கொண்டு போகலாம். ஏற்பாடு செய்யச் சொல்கிறேன்" என்று பரிவோடு உபசரித்தவர், "இந்தத்

தல திருக்குளத்தில் ஒரு தடவை ஸ்நானம் செய்தால் போதும்: உள்ளச்சோர்வு, உடல்அயர்ச்சி இரண்டும் ஓட்டம் பிடிக்கும். வாருங்கள்'' என்ருர்.

உண்மையிலேயே கோயில் திருக்குளமும், அதில் நிரம்பி வழிந்துகொண்டிருந்த பால் போன்ற ஜலமும் எங்களைக் கவர்ந்தன. கோஷ்டியிலுள்ள பெரும்பான்மையோரின் கருத்தை ஊகித்து அறிந்து, திட்டத்தைச் சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு மாற்றுவதில் சமர்த்தரான அடியார் உடையார், "ஸ்நானம் செய்ய விருப்பமுள்ளவர்கள் செய்யலாம். ஆனால், அதற்காக பதினைந்து நிமிஷம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது'' என்று சொல்லிவிட்டு, முதலில் தாமே குளத்தில் இறங்கினர். எல்லோருக்கும் அருமையான ஸ்நானம் கிடைத்தது. தொடர்ந்து அதற்கு அரை மாற்று அதிகமாகவே அருமையான தரிசனம் கிடைத்தது.

இலை விபூதி பிரசாதத்தோடு சந்நிதியிலிருந்து வெளிப்பட்டபோது நெல்லை முருகன், அடியார் உடையாரை நெருங்கினர். "தெரிகிறது...பஸ் புறப்பட்டதும் மதுரை முருகன் சார்ஜ் எடுத்துக் கொள்வார்...'' என்று சிரித்துக் கொண்டு கூறியவர், "செந்திலாதிபனைத் திருச்செந்தூரில் கூட்டத்தில் நசுங்கிக் கொண்டு தரிசித்த அன்பர்களுக்கு இலஞ்சி, திருமலை, கழுகுமலை மூன்று இடங்களிலும் அவன் பிரதிபிம்பமோ என்று ஐயம் கொள்ளும் ரீதியில் காட்சியளித்த குமாரக் கடவுளைப் பார்த்து பிரமித்தோம்...நீங்கள் பொறுப்பேற்ற சைங்கர்யத்தை நல்ல முறையில் செய்து முடிக்க ஆண்டவன் உங்களுக்குப் பேருதவி புரிந்திருக்கிறன்...'' என்று கோஷ்டியின் சார்பில் நெல்லை முருகனுக்கு நன்றி செலுத்தினர்.

அடுத்த ஐந்து நிமிஷத்திற்கெல்லாம் மதுரை முருகனுடைய தாற்காலிகத் தலைமையில் பரங்குன்றத்திற்கு விரைவில் போய்ச் சேரவேண்டும் என்ற ஒன்றே குறிக்கோளாகக் கொண்டு எங்கள் கோஷ்டியினர் பஸ்ஸில் ஏறி அமர்ந்தனர்.

**வள்ளியூர் :—** ரயில் மார்க்கம் கிடையாது. கன்னியாகுமரியிலிருந்தும் நாகர்கோயிலிலிருந்தும், திருநெல்வேலி திருச்செந்தூரிலிருந்தும் பஸ் மார்க்கமாக இந்தக் கோயிலை அடையலாம்.

**திருச்செந்தூர் :—** திருநெல்வேலியிலிருந்து 36 மைல் தூரத்தில் வெகு ரம்யமான கடற்கரையில், கடலலைகளைக் கிழக்கு எல்லையாகக் கொண்டு, வெகு தொலைவிலிருந்தே அடியார் மனங் கவரும் வானளாவிய ஒற்றைக் கோபுரமும், நீண்ட மாபெரும் நடைபாதையும், கிரிபிரதட்க்ஷிணமும், பெரிய விசாலமான வெளிப் பிராகாரம் உட்பிராகாரமும் கொண்ட கோயிலில் கிழக்கு நோக்கி ஆண்டவன் அரசு செலுத்திக் கொண்டிருக்கிறான். பஸ், ரயில் போக்குவரத்து உண்டு. மாசி, வைகாசி, விசாகம், ஆவணி, ஸ்கந்த ஷஷ்டி ஆகியவை பெரு விழாவாகக் கொண்டாடப் படுகின்றன.

**இலஞ்சி :—**தென் காசியிலிருந்து செங்கோட்டைக்குப் போகும் வழியில் உள்ள பாடல் பெற்ற தலம். உள்ளப் போராட்டங்களில் உழலும் மனிதனுக்கு உடனே அமைதி தரும் சோலை சூழ்ந்த இடத்தில் ஆர்ப்பாட்டமின்றி ஆலயம் அமைந்துள்ளது.

**திருமலை ; (பண்பொழி) :-** மலைக்கோயில்-செங்கோட்டை ரயில் நிலையத்திலிருந்து மேற்குத் திசையில் நான்கு மைல்கள் போனால் இந்தத் தலத்தை அடையலாம். சிறு மலைதான், 400 அடி உயரத்தில் கோயில் உள்ளது. கிழக்கு முகமாக நின்று ஆண்டவன் அருள் பாலிக்கிறான். தங்க வசதிகள், தேவஸ்தான விடுதிகள் உள்ளன.

**கழுகுமலை :—**திருநெல்வேலியிலிருந்து மோட்டார் மூலம் சுமார் 22மைல் தொலைவில் உள்ளது. சங்கர நயினார் கோயிலிலிருந்தும் ராஜபாளையத்திலிருந்தும் பஸ்மூலம் போய்ச் சேரலாம். இந்தக் கோயில் மலை அடிவாரத்தில் உள்ளது. புராதனமான பெரிய க்ஷேத்திரம்.


ண்டிட் டி. கோபாலாசார்லுவின்
ஜீவாம்ருதம்
ரோக்யத்துக்கும் பலத்துக்கும்

Phone: 26080

"KANNAN COFFEE"

'KANNAN COFFEE' MEANS QUALITY



KRISHNA CORPORATION

Coffee & General Merchants

558, R. G. STREET,

COIMBATORE.

# மதுரை முருகன்

மதுரை—ராமநாதபுரம் இரண்டு மாவட்டங்களும் மனிதனுடைய உயிரும் உடலும்போல இருந்து வருவது எல்லோரும் அறிந்த உண்மை. அந்தக் காரணத்தால் மதுரை முருகனிடம் ராமநாதபுரம் மாவட்டத்தில் எங்கள் கோஷ்டியை அழைத்துச் செல்லும் பொறுப்பையும் சேர்த்து ஒப்படைத்தார் அடியார் உடையார். நெல்லை முருகனோடு உதவியாளர் பணி எனக்குத் தீர்ந்துபோகும் என்று நான் எண்ணியிருந்ததற்கு மாறாக, பஸ்ஸில் முன் ஸீட்டில் உட்கார்ந்திருந்த மதுரை முருகன் விருது நகரைத் தாண்டியதும் என் அருகில் வந்தமர்ந்து, "மன்னிக்கணும், நெல்லை முருகனுக்கு உதவி செய்தது போல் எனக்கும் செய்யவேண்டும். மதுரையில் மூன்று படை வீடுகளை முருக பக்தர்களுக்குக் காட்டியாக வேண்டும் ; என் ஒருவனால் இதைத் திறம்படச் செய்யமுடியாது. ஆகையால், தாங்கள்..." என்றார்.

> "சோடில்லை மேல் வெள்ளைச் சொக்காய் இல்லை
> நல்ல சோமனில்லை
> பாடில்லை கையில் பணமில்லை தேகம் பருமனில்லை
> வீடில்லை-யாதொரு வீருப்புமில்லை
> விவாகமது நாடில்லை நீ நெஞ்சமே
> எந்த வாறினி நண்ணுவையே,"

என்று வள்ளலார் பாடியதற்கேற்ப, நானே வலிய வந்து எனக்கென ஒரு வாழ்க்கையை அமைத்துக் கொண்ட பிறகு, இறைபணி புரியச் சந்தர்ப்பம் கிடைப்பதை மகிழ்ச்சியுடன் ஏற்கவேண்டியதுதானே ?

திருமங்கலம் கடந்து சிறிது தூரம் சென்றதுமே திருப்பரங்குன்றம் தெரிந்தது. அடியார் ஒருவர் அதைப் பார்த்ததும் எழுந்து வந்து, மதுரை முருகனிடம்" படை வீடுகளில் பழநியையும், திருத்தணியையும்தான் நான் பார்த்திருக்கிறேன். இப்போது செந்திலும் பார்த்தாகி விட்டது.

திருப்பரங்குன்றம் தான் முதல் படை வீடு என்று சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஏதோ எல்லோரும் 'படை வீடு' என்கிறார்களே தவிர என் மனதுக்குத் தெளிவு ஏற்படும் விதத்தில் யாரும் சொல்ல வில்லை. தங்களுடைய கருத்து என்ன?'' —என்று கேட்டார்.

மதுரை முருகன் என்னை ஏறிட்டுப் பார்த்து விட்டு, "இதற்குத் தங்கள் உதவி அவசியம் தேவை. ஏனெனில் இந்த பக்தரின் நிலையில் தான் நானும் இதுவரை இருந்து வருகிறேன்'' என்று கேட்டுக் கொண்டார். உடனே நான் கேட்டறிந்து கண்ட அனுபவத்தைக் கூறினேன்.

ஆறுபடை வீட்டு வழி பாட்டின் பின்னால் ஒரு மகத்தான தத்துவமே ஒளிந்து கொண்டிருக்கிறது. தத்துவங்களில் ஆராய்ச்சி செய்யத் தலைப்படும் போது யாருக்கும் குழப்பம் ஏற்படும். வளரும் சமுதாயத்திற்கு அன்றாடப் பிரச்சனை களுக்கு வழி தேடுவதே பெரும் தொல்லை. "சட்டென்று கோயிலுக்குப் போனோம். பட்டென்று கன்னத்தில் போட்டுக் கொண்டோம். தொப்பென்று விழுந்து வணங்கினோம். வீடு திரும்பினோம்'' என்று இப்போது வழிபாட்டு முறை இருந்து வரும்போதே, கோயிலுக்குப் போக 'டயம்' இல்லை. அங்கு போய்ப் பார்த்தால்தான் சாமியா?'' என்று கேட்கும் பக்தர் கூட்டம் பெருகிக்கொண்டே வருகிறது. முக்காலமும் உணர்ந்த நமது முன்னோர் இன்றைய சமுதாயத்தின் போக்கை அன்றே ஊகித்து முருகன் வழிபாட்டுக்கு ஊறு நேர்ந்து விடக் கூடாது என்ற நோக்கத் தோடு தத்துவத்தை ஒளித்து ஆறு முக்கிய இடங்களில் முருகனைத் தரிசிக்கும் வழியை வலியுறுத்தியிருக்கிறார்கள்.

எல்லாம் ஒன்று, காண்பதெல்லாம் மாயை. வாழ்வு, நீர் மேற் குமிழி—ஆக்கல், அருளல், அழித்தல், நீக்கல், மறைத்தல் ஆகிய ஐந்தொழிலைச் செய்வதே பரப்பிரம்மம் என்றெல்லாம் பேசப்படும் தத்துவத்தை மனிதன் ஒரொரு சமயம் உணரத் தான் செய்கிறான். அந்த உணர்ச்சி சிலரிடம் லேசாக இருக் கிறது. சிலரிடம் அளவோடு இருக்கிறது. சிலரிடம் வந்து

போய்க் கொண்டிருக்கிறது. மிகச்சிலரிடம் நிரந்தர வாசம் செய்கிறது. ஆனால் இந்த உணர்ச்சி ஏற்படும்போது பரம் பொருளை எண்ணிப் பார்க்காத மனிதன் இருப்பதற்கில்லை, காண்பது—உணர்வது—அனுபவிப்பது எல்லா வற்றிற்கும் மேலான இடத்திலுள்ள பரம்பொருளை அடைய மனம் விழைகிறது. வழி புலப்படவில்லை. புலப்பட்டாலும் கடின மாயிருக்கிறது "நமக்கும், அதற்கும் வெகு தூரம்" என்று அந்தப் புனித எண்ணத்திற்கே முற்றுப்புள்ளி போட்டு விடு கிறான் மனிதன்.

இவ்வாறு பலதரப்பட்ட மனித சமுதாயத்தின்பால் இரக்கம் கொண்டு அதை உய்ய வைக்கத் தவயோகிகளும், மெய்ஞானிகளும் புராண கர்த்தாக்களும் பரம்பொருளை உணர விரும்பும் மனிதனுக்கு, அவனுடைய நிலைக்கேற்ப பாதை அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். ஜபம், தியானம், தவம், யோகம் என்ற கடினமான பாதைகளோடு பக்தி எனும் வெகு சுலபமான பாதையையும் காட்டியிருக்கிறார் கள். நாம் காணும் விண்ணும் மண்ணும் ஒரு போதும் ஒன்று சேராது, என்பதுதான் நமது கொள்கை. ஆனால் இறைவனெதிரில் கரங்குவித்து "முருகா" என்றும் கோவிந்தா,, என்றும் "அம்பிகே" என்றும் துதிக்கும்போது விண்ணும் மண்ணும் ஒன்றே தான் என்று ஒப்புக் கொள் கிறோம்! ஏனெனில், நமது ஒரு கை விண், மற்றொரு கை மண் ஆகவே, ஒன்று சேராது; ஒன்று சேர முடியாது; என்று அடித் துப் பேசும் நாம் கரங்குவிக்கும் பேது; இரண்டும் ஒன்றுதான் 'மாயை' காரணமாகப் பிரித்துப் பார்க்கிறோமே தவிர, எல்லாம் ஒன்றுதான் என்று ஒப்புக்கொள்கிறோம். இதனு லேயே பரம்பொருளை நாடிச் செல்லும் பெரும்பான்மைச் சமூகம் வெகு சுலபமாயிருக்கும் பக்திப் பாதையை மேற் கொண்டு இறை வழிபாட்டிற்கென்று இடம் இடமாக யாத்திரை செய்து கரங்குவித்துக் கண்ணீர் மல்கி கரைந்து உருகுகிறது. ஆனால், வெகுசுலபமாயுள்ள பக்திப்பாதை மனிதனைப் பரம்பொருளின் சமீபம்வரை தான் இட்டுச்

செல்கிறது. இது ஆன்றோரும் சான்றோரும் மெய்யடியார்களும் கண்டறிந்த உண்மை.

பரம்பொருளோடு ஒன்றிவிடும் நிலைக்கு மனிதப் பிறவியை எடுத்துச்செல்லும் சாதனமே யோகம். தீர்ந்த யோகீச்வரரே பரம்பொருள். மனித உடலைப்பற்றிக் கொண்டு வாழ்ந்தபோதிலும், யோகசாதனையில் முழு வெற்றி கண்டவர் பரம்பொருளோடு இணையும் மார்க்கம் தமது உடலுக்குள்ளேயே ஆறு நிலைகளாக இருப்பதை உணர்கிறார். மூலாதாரத்தில் பாம்பைப் போல சுருண்டு மண்டலமிட்டுக் கொண்டு உறைந்திருக்கும் குண்டலினி சக்தியை யோகத்தால் மேலெழச்செய்து ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம் அநாகதம், 'விசுத்தி, ஆக்ஞை என்ற நிலைகள் வழியாகக் கொண்டு சென்று ஸஹஸ்ராரம் என்ற பரம்பொருளோடு ஒன்றுசேர்த்து விடுகிறார். சாதாரணமாக, மனித புத்தி என்று நாம் நம்மையே சிறுமைப்படுத்திக் கொள்கிறோம். மனித புத்தியே பரம்பொருள் தன்மை வாய்ந்த ஸஹஸ்ராரம் என்பதை யோகீச்வரர்கள் உணர்கிறார்கள். "ஞானம் என்பது முதிர்ந்த அறிவுதான்.

உடல், பொருள், ஆவி மூன்றிலும் பற்றோடு வாழும் சமுதாயம் யோகீச்வரர்களை மிகவும் பக்தி செலுத்தி வணங்குவதோடு தனது கடமையைத் தீர்த்துக் கொள்கிறது. இருந்தாலும் அந்தப் பெரியோரும் மகான்களும் செய்வத்தைப் போற்றி வணங்குவோர் பயனடைய புற வழிபாடாக ஆங்காங்கே தேவாலயங்களை யோக சாஸ்திர ரீதியில் நிர்மாணம் செய்து, சக்தி வாய்ந்த பிரதிஷ்டைகளையும் செய்தருளியிருக்கிறார்கள். இந்தவகையில் பார்த்தால் இன்று முருகனுடைய ஆறுபடை வீடுகளான பரங்குன்று, திருச்செந்தூர், பழனி, சுவாமிமலை, திருத்தணி, பழமுதிர்ச்சோலை ஆகிய தலங்கள் முருக பக்தர்களின் தவயோக நிலையைக் காட்டுகின்றன என்று சொல்வது பொருத்தமாயிருக்கும். அனுபூதிமானான அருணகிரியும், தமது திருவகுப்பில் "ஆறு நிலை யென்று முதலாகிய பரங்கிரியும்" என்றும், திருப்புகழில் "அறுபதி நிலை மேவிய தடமயில் தனிலேறிய பெருமானே"

என்றும் கூறுவது அறுபடை வீடுகுறித்துச் சிந்திக்கும் பக்தரை நேர் வழியில் கொண்டு செல்லும்.

இதை நான் எனக்குத் தெரிந்தவரை சொல்லி முடித்ததும், சந்தேகத்திற்கு விளக்கம் கோரிய முருகபக்தர் "யோக சாஸ்திரத்தில் ஆறு நிலைகளைக் கடந்து ஏழாவது நிலை ஸகஸ்ர தளம் என்றும், அதுவே 'புத்தி' பரம்பொருளோடு ஒன்றிய நிலை என்றும் சொன்னீர்கள்! முருகன் வழிபாட்டில் ஆறு படை வீடு ஆறுயோக நிலைகளைத்தான் குறிக்கின்றன. இதில் ஸஹஸ்ராரம் எது? புரியவில்லையே! என்றுகேட்டார்.

நான் புன்முறுவலோடு, "அறுபடை வீடுகளை யோக நிலைகளாக வழிபடும் அடியார் உள்ளம்தான் ஸஹஸ்ராரம். இதற்குத்தானே அருணகிரியும் அடியார் மனப்பங்கயம்' என்றும் குமரகுருபரர் "ஆறு திருப்பதி கண்டு ஆறெழுத்தும் அன்பிடன் கூறுமவர் சிந்தை குடி கொண்டோனே' என்றும் கூறுகிறார்கள்" என்றேன்.

திருப்பரங்குன்றத்தை நெருங்கும் வரை பேசாதிருந்த அடியார் உடையார், ஏதோ ஞாபகம் வந்தவராக மதுரை


Phone : 76016-17 Grams : Sriniketan

Space Donated by·

# RAMBAL PRIVATE LIMITED

*LATTICE BRIDGE ROAD*
MADRAS-41

Manufacturers of Ferrous & Non-Ferrous Machine Screws
&
Precision Turned Components

முருகனைக் கிட்டத்தில் அழைத்து, "இன்று பிரதோஷம். இப்போதுதான் ஞாபகம் வந்தது அதனால். முதலில் வண்டியை அழகர் கோயிலுக்கு விடச் சொல்லுங்கள். அங்கு ஆண்டவனைத் தரிசனம் செய்து கொண்டு மதுரைப் பெருங் கோயிலில் அங்கையற் கண்ணி—ஆலால சுந்தரரை பிரதோஷ காலத்தில் வணங்குவோம்" என்றார்.

உடனே மதுரை முருகன் டிரைவருக்கு உத்தரவைப் போட்டு விட்டு, அடியார் உடையாரிடம் வந்து, ஆமாம்; நானும் பிரதோஷத்தன்று சிவாலய வழிபாடு என்று சொல் லிக் கொண்டு போய் வருகிறேனே தவிர, அதன் முக்கிய தத்துவம் தெரிந்து கொள்ளவில்லை. நீங்கள்?...' என்றார்

"ஐயன் அண்ட சராசரங்களையெல்லாம் தனது ஆடலால் ஆட்டிக்கொண்டிருக்கிறான். அவன் ஆடல் நின்றால் உலகம் ஸ்தம்பித்து விடும். உயிர்கள் தத்தளிக்கும். எல்லா உயிர்களையும் கருணையோடு அண்ணல் தன்னிடம் லயப்படுத் திக் கொள்ளும் நித்தியப் பிரளயமே சந்தியாகாலம். அப் போது தான் பறவை முதல் மனிதன் வரை எல்லா உயிர் களும் அடங்கும் நேரம். ஆதவன் மேற்றிசையில் மறைந்தும் மறையாமலும் இருக்கும் போது ஏற்படும் இரவு பகல் சந்திக் கும் நேரம்தான் அந்திவேளை. அது ஆண்டவனை நினைக்க உயிர்களுக்குக் கிடைத்திருக்கும் அரியதொரு சந்தர்ப்பம்.

"அமுதினை தேவர்களுக்கு கொடுத்துவிட எண்ணிப் பாற்கடலைக் கடைந்த போது வெளிப்பட்ட கொடிய ஆலகால விஷத்தைக் கண்டு எல்லோரும் பயந்தனர். கருணையே உருவான பரமன் தன் கரங்களால் அவ்விஷத்தை நாம் வாழவேண்டி திரயோதசியன்று ஏந்தி உண்டு, அன்னை பராசக்தியின் அன்புக் கரங்களால் பிடிக்கப்பட்டு, விஷம் நெஞ்சிலேயே நிலையாக நின்று நீலகண்டனாகத் திகழ்ந்தான். உயிர்களிடம் கொண்ட பரம கருணையினால் ஐயன் வலியவந்து ஆண்ட நேரம் இந்த பிரதோஷம். அதில் நாம் ஆண்டவனை நினைத்துப் பார்த்தால் பயனான புண்ணியம் விளைகிறது. மனம் பக்குவப்படுகிறது" என்றார் அடியார் உடையார்.

அழகர் கோயிலை வண்டி அடைந்தது. எல்லோரும் கீழே இறங்கி கோயிலுக்குள் சென்றோம். அன்பர் ஒருவர் மதுரை முருகனிடம், "என்னவோ முருகன் கோயில் ஆறு படைவீடு என்று சொன்னீர்கள், பெருமாள் கோயில் போலல்லவா இருக்கிறது? வழி தவறிவிட்டோமா?," என்றார். நான் சிரித்துக்கொண்டே, "அங்கேதான் நம் பண்பாடு இருக்கிறது. கண்ணனிலே கந்தனைக் காணவேண்டாமா?" என்றேன்.

"சற்று விளங்கும்படியாகக் கூறவேண்டும்" என்றார் அன்பர்.

"வாருங்கள், கள்ளழகரைக் கண்டு கந்தனையும் பார்க்கலாம். இங்கிருந்து 'சிலம்பாறு' போகும் வழியிலே முருகனும் கோயில் கொண்டிருக்கிறான்" என்றேன்.

"அதுதானே கேட்டேன்; மலைமேல்தானே என் முருகன் இருக்கிறான்?', என்றார் திருப்தியோடு அவர்.

"ஆமாம்; ஆமாம். முருகனைத் தற்போது சமீப காலத்தில்தான் மலைமேல் ஸ்தாபனம் செய்திருக்கிறார்கள். அடியார்கள் படும் குறையை நீக்கவே இந்த அருளாடல் நிகழ்த்தியிருக்கிறான் கந்தன்".

"ஆமாம். சமீப காலத்தில் என்கிறீர்களே. அப்போது பழமுதிர்சோலையில் ஆதிகாலத்திலிருந்து முருகன் கோயில் இருக்கவேண்டுமே! அறுபடை வீடுகளில் ஒன்றாயிற்றே இது?'

"இல்லை என்று யாரும் சொல்லவில்லையே! அழகர் கோயில்தான் அது. முருகு என்றாலே அழகு என்பது பொருள்! ஆகவே, 'முருகன்' அழகன் எல்லாம் அவன் தான். நம்முடைய மனித மனம் இருக்கிறதே, அது வளர்த்த சாதிச் சண்டை, மதப் பூசல் காரணமாக கண்ணன் கந்தனாகவும், கந்தன் கண்ணனாகவும் மாறி மாறி பக்தர் மனத்திற்கேற்ப காட்சியளிக்கின்றார்கள்; எல்லாம் ஒன்றுதான் என்ற மனப்பான்மை வளராதவரை பாரத சமுதாயத்துக்கு விமோசனமில்லை..."

"சரி நீங்கள் சொல்வதைப் பார்த்தால் பெருமாள் கோயில்தான், பெருமான் இருக்கும் கோயில் என்றாகிறது. அப்படித்தானே?!

"ஆமாம். இதை ருசுப்பிக்க ஒரு முக்கியமான இடத்தையும் காண்பிக்கிறேன். அதிலிருந்தே நீங்கள் முருகனும் அழகனும் வேறல்லர் என்பதைப் புரிந்து கொள்ளலாம்."

கோயிலுக்குள் கும்பலாகச் சென்றோம். மூலஸ்தானத்திலிருந்து இனிமையான பாடல் ஒன்று காற்றிலே மிதந்து வந்து எங்கள் கருத்தைக் கவர்ந்தது,

"பொன் திகழும் மேனிப் புரிசடை யெம் புண்ணியனும்
நின்றுலகம தாய நெடுமாலும்—என்றும்
இருவர் அங்கத்தால் திரிவரேனும் ஒருவன்
ஒருவன் அங்கத்து என்று முளன்,"

கண்ணனிலே கந்தனையும் அரனிலே அரியையும் இணைத்த நம் பெரு மூதாதையர் வாழ்க! சமரசம் வாழ்க! என்று கூறிக்கொண்டே கோயில் கர்ப்பக்கிருகத்தை அடைந்தோம்.

இறைவனைக் கண்ணாரக் கண்டு, உளமாற வாழ்த்தித் திரும்பும்போது அன்பர், "சுவாமி, ஒரு முக்கியமான இடத்தைக் காண்பிக்கிறேன் என்றீர்களே? என்றார்.

"ஓ! அதுவா. இதோ பாருங்கள். உங்கள் முருகன் முருகனாகவே இருக்கின்றான்!" என்று கருடாழ்வார் பின்னால் இருந்த தூணைக்காட்டினேன். மயிலோடு ஒயிலாக முருகன் அங்கு அந்தத் தூணிலே இருந்தான்! அன்பருக்கு அளவிலா ஆனந்தம்.

"புறப்படுவோமா—? நாழியாகிறது. நான் மலைமேல் போனதேயில்லை. சிலம்பாறுக்குப் போய் ஸ்நானம் செய்ய வேண்டும்" என்றார் அடியார் உடையார்.

அதற்குள்' "இங்கு தோசை விசேஷமாமே!" என்றார் ஒரு பிரசாதப் பிரியர்.

"விசேஷம்தான். ஆனால், கிடைப்பது அரிது...கிடைத்ததை வாங்கியாகி விட்டது. இன்று பிரதோஷமானதால் சொக்கநாதனைத் தரிசனம் செய்துகொண்ட பிறகுதான் விநியோகம்'' என்றார் அடியார் உடையார்.

'கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லையே' என்று வருத்தம் ஏற்பட்டாலும், வெளிக்காட்டிக் கொள்ளாமல், "சே! வாங்கி வைத்துக்கொண்டால் போதும். பிரதோஷ காலத்தில் சாப்பிடலாமா?'' என்று சமாளித்துக்கொண்டார் பிரசாதப் பிரியர்.

சிலம்பாற்றை நோக்கி மலைப்பாதையில் நடந்தோம்.

"இந்த மலையில் ஏன் இன்னும் படி, கிடி என்று ஒன்றும் போடவில்லை. அறுபடை வீடுகளில் இந்தத் தலம் மிக முக்கியமானதாயிற்றே?'' என்றார் அடியார் உடையார்.

"ஏதோ ஆண்டவன் செயல். இயற்கையோடு ஒன்றியுள்ள இறைவன்...இந்தக் காலத்தில் துரிதமாக நிறைவேற்றப்படும் செயற்கைப் புரட்சியைக் கண்டு ஒடி ஒளிய இரண்டொரு இடமாவது இயற்கை எழிலோடு இருக்க வேண்

Phone : 5022

# எஸ்ஸார்பி மில்ஸ்

## பிரைவேட் லிமிடெட்

சரவணம்பட்டி, கணபதி P. O.

**கோயமுத்தூர்-6**

உயர்ந்த ரக 20s, 30s, 40s, ஸ்டேபிள் பைபர் நூல் உற்பத்தியாளர்கள்

டாமா? புரட்சிகரமாக பக்தித்தொண்டு புரிபவர்களின் பார்வை விழாத ஒன்றிரண்டு தலங்களில் இதுவும் ஒன்று'' என்று என் கருத்தை வெளியிட்டதும் அடியார் உடையார் 'அதுவும் நியாயமே' என்று ஒப்புக்கொண்டார்.

அதற்குள் பழமுதிர்ச்சோலை முருகன் கோயில் வந்து விடவே மதுரை முருகன், "எல்லோரும் வலமாகக் கோயிலைச் சுற்றி வந்து அப்படியே ஸ்நான கட்டத்தை நோக்கிப் போகவேண்டும். வரும்போது தான் முருகன் தரிசனம்'' என்றார்.

அவ்வாறே நாங்கள் தண்ணீர்த் தொட்டியை அடைந்தோம். ஒரு சிறு துவாரத்தின் வழியாகத் தண்ணீர் கொட்டிக் கொண்டிருந்தது. "ஆற்றைப் பார்க்க முடியவில்லையே?'' என்று அடியார் உடையார் அங்கலாய்த்தார்.

நக்கீரர் பாடிய திருமுருகாற்றுப்படையைப் பாராயணம் செய்துள்ள அவர், வாழையும், பலாச்சுளையும், மிளகும் சிலம்பாற்றில் அடித்துக்கொண்டு ஓடிவரும் என்று நினைத்தார் போலும்! பாவம்! மனிதன் கையில் இயற்கை மாட்டிக் கொண்டு தவியாய்த் தவிக்கிறது! எல்லோரும் தண்ணீர்த் தொட்டியில் ஸ்நானம் செய்தோம். "அப்பாடி! கரும்பான ஜலம்! பளிங்கு போலல்லவா விழுகிறது!'' என்றார் ஒரு பக்தர்.

"மண்டூக மஹரிஷி இதில் ஸ்நானம் செய்துள்ளார். 12 நாட்கள் தொடர்ந்து ஸ்நானம் செய்தால் உள்ளத்தின் அழுக்கையும் போக்கிப் பரிசுத்தமாக்க வல்லது இந்த நூபுர கங்கை. இங்கே செவ்வாய்க்கிழமை ஸ்நானம் இஷ்டசித்திக் களைத் தரவல்லது'' என்றேன். அங்கிருந்து பிரிய மனமில்லா மலேயே புறப்பட்டு முருகன் கோயிலை நோக்கி நடந்தோம்.

மதுரை முருகன்:

'ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப
அறுவர் பயந்த ஆறமர் செல்வ
ஆல்கெழு கடவுள் புதல்வ!
மால்வரை மலைமகள் மகனே!

மாற்றார் கூற்றே! வெற்றிவேல் போர்
கொற்றவைச் சிறுவ.........பழமுதிர் சோலை
மலை கிழவோனே"

என்று உள்ள முருகப் பாடிக்கொண்டே முன்னால் நடந்தார்' 'வெற்றிவேல் முருகனுக்கு அரஹரோ ஹரா' என்ற கோஷம் வானைப் பிளந்தது. கோயில் புதியதாக இருந்தாலும் படை வீட்டு அரசனை பக்தர்கள் பரிபூரணமாகத் தரிசித்து மகிழ்ந்தனர்.

மலையிலிருந்து இறங்கியதும், மதுரைக்கு ஓடியதும் மனத்திலே பதியவேயில்லை. காரணம் பிரதோஷ தரிசனம் தான். ஒம்...ஒம்...என்று மணி முழங்கும் வேளையில் சொக்கப்பன் சந்நிதியில் நின்றோம். அபிஷேகம், அர்ச்சனை, நைவேத்தியம், தீபாராதனை எல்லாவற்றையும் முறைப்படித் தரிசித்து விட்டு, அன்றலர்ந்த அரும்பாகக் காட்சி தரும் அன்னை மீனாட்சியின் அருள் விழிகளில் விழ முயற்சி செய்து சிறிது நேரம் கூட்டத்தோடு கூட்டமாக சந்நிதியில் காத்திருந்தோம்.

"தாயே, மன்னித்துக்கொள்! பிறந்த வீட்டையே புகுந்த வீடாக்கிக் கொண்டு புருஷனையும் தன்னுள் அடக்கிக் கொண்டு நீ ஆட்சி புரிந்து வருவதை யறிந்தும்கூட பிரதோஷ காலம் என்பதால் முதலில் உன்னைத் தரிசிக்கும் வழக்கத்திற்கு மாறாக அண்டம் உய்ய ஆலகாலத்தை உண்ட ஆண்டவனை முதலில் தரிசித்து விட்டு இங்கு வந்திருக்கிறோம். நித்ய யௌவன மாங்கல்ய மங்களமாக இருக்கும் நீ, அவனுள் பாதி தானே? தாயே! அவனைப் பார்க்கும் அடியார் உன்னையும் தானே சேர்த்துப் பார்க்கிறார்...! உன் செல்வ மகன் திருக்கல்யாணத்தைப் பரங்குன்றத்தில் பார்க்கப் போகிறோம். விடை கொடு." என்று வேண்டிக்கொண்டு புறப்பட்டோம்.

பஸ்ஸை விரட்டிக்கொண்டு போய்க் கோயில் வாசலை அடைந்ததும்......"இடதுபுறம் திரும்ப வேண்டும். அங்கே தான் சரவணப் பொய்கை இருக்கிறது. கை கால் கழுவிக்

கொண்டு பிறகுதான் ஆலயம் செல்லவேண்டும்'' என்றார் மதுரை முருகன்.

அவர் கையிலிருந்த பெரிய பொட்டலத்தைப் பார்த்ததும் நாக்கு சலாம் போட்டது பிரசாதப் பிரியருக்கு. உடனே அழகர் கோயில் தோசை ஞாபகமும் தொடரவே, "இங்கேதான் விநியோகமா?'' என்று கேட்டார் அவர்.

"ஆம்'' என்றார் மதுரை முருகன்.

"பொட்டலம் பெரிதாக இருக்கிறது. நான் வேண்டுமானால் தூக்கி வருகிறேனே?''

"சரி, இந்தாருங்கள். இறைவன் தொண்டில் எல்லோருக்கும் சம பங்கு உண்டு'' என்று பொட்டலத்தை அவர் கையில் திணித்தார், மதுரை முருகன்.

பொட்டலத்தை வாங்கியதும் முகம் பொட்டலமாகப் போய்விட்டது பிரசாதப் பிரியருக்கு! அசடு வழிய, "தோசையாக்கும் என்று பார்த்தேன். இல்லைபோலிருக்கே!'' என்றார்.

"இதுபொரி; தோசையல்ல; அழகர் கோயிலில் நமக்குத் தீனி கிடைக்கவில்லை......ஆனால் வேறு ஜீவனுக்குக் கிடைத்தது'' என்றார் மதுரை முருகன்.

சரவணப் பொய்கையை அடைந்ததும் ஒரு பக்தர், "ஏன் இவ்வளவு காகிதம் தண்ணீரில் கிடக்கிறது?'' என்றார்.

"அதுதான் ஆலயத்திற்கு வரும் அன்பர்கள் புண்ணியம் தேட வந்து, தம்மையுமறியாமல் ஒரு பாவத்தைச் செய்து போவதன் விளைவு. புண்ணிய கைங்கர்யமாக மீனுக்குப் பொரி வாங்கி வந்து போடுவார்கள். கூடவே காகிதத்தையும் கடைசியில் தண்ணீரில் போட்டுத் தண்ணீரில் மாசு உண்டுபண்ணி விடுகிறார்கள்.''

"அதை ஆலய நிர்வாகிகள் கவனிக்க வேண்டாமோ?''

" கவனித்திருந்தால் நீர் என்னைக் கேட்கவே இடமிருக்காதே !"

" ஆமாம்; இங்கே மீன் அதிகமோ ?"

" இந்தாருங்கள், ஆளுக்குக் கொஞ்சம் பொரியை எடுத்துத் தண்ணீரில் போடுங்கள். அப்போது உங்களுக்கே தெரியும் !" என்று எல்லோரிடமும் கொஞ்சம் பொரியைக் கொடுத்துக் காகிதத்தை மடித்து பொறுப்புடன் பையில் வைத்துக் கொண்டார், மதுரை முருகன்.

அள்ளி ஒரு கை போட்டதும், அடிபிடி என்று ஆயிரக் கணக்கில் மீன்கள் தண்ணீரின் மேல் கருமேகம் திடீரெனப் படர்ந்தாற்போல் தென்பட்டன. அது அருமையானதொரு காட்சியாயிருந்த போதிலும், அடியார் உடையாரின் கட்டளைக்குப் பணிந்து, அதிக நேரம் அங்கு நிற்காமல் கோயிலினுள் நுழைந்தோம்.

" இங்குதான் ஆறுமுகப் பெருங்குணக்கடல் தேவயானையை மணந்ததாகச் சொல்லுகிறார்கள் இல்லையா?" என்றார் ஒரு அன்பர்.

" ஆமாம்; ஆமாம். வாசலைப் பார்த்தாலே தெரியவில்லையா ? வாழையும் தோரணமும் கட்டி, அண்ணல் கலியாணக் கோலமாகத்தான் இன்றும் நமக்குக் காட்சி அளிக்கிறான் " என்று கூறினார் மதுரை முருகன்,

சில படிகள் ஏறிக் கோயிலின் உட்புறம் அடைந்தோம். இது மலையைக் குடைந்த கோயிலா ?" என்றார் அன்பர்.

" ஆமாம். அண்ணல் ஆறுமுகத்தான் கலியாணத்திற்கு மயனால் சிருஷ்டி செய்யப்பட்டதாகக் கூறப்படும் குகைக் கோயில். அதோ பாருங்கள், நரசிம்மர், வராகமூர்த்தி, விஷ்ணு, துர்க்கை, சிவன் எல்லா மூர்த்திகளும், தேவதைகளும் வந்து கோயில் கொண்ட க்ஷேத்திரம். அனைவரும் கலியாணத்தைக் காண வந்துள்ளனர்.

நாங்களும் அந்தத் திருமணத் திருக்கல்யாண வைபவத்தை சந்நிதியில் நின்று பார்த்தோம். பரிமளமான சந்தனமும், வெட்டிவேரும், விபூதியும் பிரதான சந்நிதியில் வழங்கியது மிகப் பொருத்தமாயிருந்தது. நித்யகல்யாண மூர்த்தியாக அடியார் மனத்தில் நிரந்தரமாக இருந்துவரும் சண்முக நாதனின் கலியாண மகோற்சவத்தை தேவாதி தேவர்கள் கண்ட விதத்தில் திருப்பரங் குன்றத்தில் இன்றும் நாம் பார்க்கிறோம்.

அடுத்து நடுநிசி வேளைக்குப் பழநியம்பதியை அடைந்து அங்கேயே முகாம் போட்டோம். மறுநாள் தைப்பூச விழா என்றதால் 'ஜேஜே, என்று ஒரே கூட்டம்.

விடிந்தும் விடியாமலும் இருக்கும் நேரத்திலேயே எல்லோரும் எழுந்து சண்முக நதியிலே ஸ்நானத்தை முடித்துக் கொண்டு, திருவாவினன்குடிகோயிலை அடைந்தோம். மதுரை முருகன், "இதுதான் மூன்றாவது படைவீடு. மலைக் கோயிலில் பழநியாண்டவன் இருக்கிறான். இங்கு 'குழந்தை வேலாயுதன்' மயில்மேல் அமர்ந்து அருள் பாலிக்கிறான். லக்ஷ்மி, காமதேனு, சூரியன், பூமி, அக்னி முதலியோர் பூஜை செய்து இங்கு வரம் பெற்றனராம். அதனாலேயே 'திரு, ஆ, இனன் கு, டி. என்று பெயர் இத்தலத்திற்கு வழங்குகிறது" என்றார்.

"மலையை வலமாக வந்து படி எற வேண்டும் என்பது தான் முறை...எல்லோரும் வரவேண்டும்" என்றார் அடியார் உடையார்

ரொம்ப தூரமிருக்குமோ ?" — இது ஒரு அன்பர் கேள்வி.

"முக்கால் மைல்தான். எவ்வளவு தூரமானால் என்ன? பழநிகிரியை வலம் வர வேண்டியது மிகவும் அவசியம்" என்றார் அடியார்.

"அவசியம் என்று சொல்வதில் உட்கருத்து இருக்க வேண்டுமே! அது என்ன என்று தெரிந்தால் என் போன்ற வர்களுக்கு நல்லது என்றார் அன்பர்

"ஆம். இதில் ஒரு கருத்து இருக்கிறது. "சென்ம வெறிப்புப் பிணியகற்றிடும் உயர் சஞ்சீவி தழையவரு பழநி மலை' என்பது ஆன்றோர் வாக்கு. இம்மலையில் பலவித மூலிகைகள் இயற்கையாகவே தோன்றி வளர்கின்றன. அவற்றின் மீது உலாவி வரும் காற்று நம்மீது படுவதால் தேகப் பிணிகள் அகலும். மனப்பிணியைப் போக்க மால் மருகன் மலைமேல் ஆண்டியாக நின்று காட்சி தருகிறான். தேகப்பிணி மனப் பிணி இரண்டையும் ஒருங்கே போக்க வல்ல தலம் இது. முக்கியமாக இங்கு மலைமீது நடுநிசி வேளையில் தினந்தோறும் சிறிது நேரம் ஒரு குளிர்காற்று தனித்தன்மையோடு வீசுகிற தாம். அக்காற்று நீடித்து தேகத்தில் பட்டு, அதை சுவாசித் தால் கருமவியாதிகள் கூட குணமடைகிறதாம்."

சித்தருக்கெல்லாம் சித்தராயுள்ள சுத்த சிவ சித்தனின் மகிமையை அவர் கூறியதும் அடியார் உடையார் கோஷ்டி யோடு மலையைச் சுற்றி 'அனுபூதி' பாடிக் கொண்டே நடந்து ஆனைமுகத்தானை வலம் வந்து வணங்கி மலையேற ஆரம்பித் தார். அவர் பின்னால் எல்லோரும் சென்றனர்.

கண் நிறைந்த காட்சி. ஒரே காவடி மயம், எங்கு பார்த் தாலும் பழ வண்டிகள், ஜன சமுத்திரமாக தோற்றம் அளித் தது, பழனி நகரம்.



"ஆமாம். என்ன மலையாளிகள் கூட்டம் தமிழர் கூட்டத்தைத் தோற்கடித்துவிடும் போலிருக்கிறதே! பழநிக்கும் மலையாளத்திற்கும் ஏதேனும் சம்பந்தம் உண்டோ?" என்றார் ஒருபக்தர்.

"மலையாள ராஜ்யத்திற்குத் தெரிந்த பெருந் தெய்வங்கள் உள்நாட்டில் குருவாயூரப்பன்; ஐயப்பன்! வெளியில் பழநியப்பன். மலையாள ராஜ்யத்தைப் பார்த்துக்கொண்டு (மேற்கே பார்த்த சந்நிதி) பழநி ஆண்டி இருப்பதால்தான் மலையாளத்தில் நிலம், நீர், பொருள் வளங்கள் இருப்பதாக அவர்கள் நம்பிக்கை. அதனால் அறுவடையானதும் தை மாதத்தில் பூசத்திற்கு இங்கு வந்து போகாமல் இருக்க மாட்டார்கள்."

எங்கு பார்த்தாலும் சதக், சதக் என்று வாழைப்பழத் தோலும்; சிந்திய பஞ்சாமிர்தமும் காலைப்பிடித்துக் கொண்டன. பெரிய பெரிய பஞ்சாமிர்த அண்டாக்கள், கங்காளங்கள் பிராகாரம் முழுவதிலும், கோயில் உட்புறங்களிலும் வைக்கப்பட்டிருந்தன.

"இவ்வளவு பஞ்சாமிர்தமுமா அபிஷேகம் செய்வார்கள்?" ஆச்சரியத்துடன் அன்பர் ஒருவர் கேட்டார்.

"அந்தக் காலம் மலையேறியாச்சு. வரும் அடியாரின் விருப்பப்படி, பத்துபடி, இருபதுபடி, நூறுபடி என்று அபிஷேகம் செய்த காலம் கடந்து போன காலம். இப்போ கொஞ்சம் எடுத்துப் போவார்கள். அதை அபிஷேகம் செய்து கொண்டு வந்து பெரிய அண்டாக்களில் இருக்கும் பஞ்சாமிர்தத்தோடு கலந்து தேவப் பிரசாதமாக வழங்கி விடுவார்கள்" என்றேன்.

"எல்லாமே இப்போ 'பிஸினஸ்' ஆகி விட்டது"...என்று அங்கலாய்த்த ஒரு பக்தர், "இவ்வளவு பேரும் எறும்புச் சாரி போல் அபிஷேகத்திற்கு காத்துக் கொண்டிருக்கிறார்களே, கோயில் அபிஷேகம், கால பூஜை என்று ஒன்றும் கிடையாதா? அலங்காரம் முதலியன எப்படி?" என்று கேட்டார்.

[illegible] Agar Batties

*(JOSS STICKS)*

Inspring, Entrancing

For

Peace & Poise

# A. K. S. & CO.

54, Lattice Bridge Road

ADYAR : : MADRAS-20

Phone : 71725

unega

வாழ்வில் ஆனந்தம்


குனேகா


மரிக்கொழுந்து செண்ட்

தயாரிப்பாளர் :

குனேகா

அடையாறு: மதராஸ்-20






| | | |
|---|---|---|
| **13% P.A.** | For 12 months & above. | 1 Automatic re-investment plan. (compound interest) |
| | | 2 10% interest Free Accommodation on Deposits. |
| **12% P.A.** | For 5 to 12 months. | 3 Extra 1/2 % on Deposits of Women & Children. |
| | | 4 Nominal 3/4 % on Loans On Deposits. |
| **10% P.A.** | For 3 to 5 months. | 5 Insurance coverage at the. cost of the Institution. |

**MAHARAJA FINANCES**

மஹா ராஜா பைனான்ஸ்
பெங்களூர்

"அந்தக் காலத்தில் இந்த அபிஷேகத்தை நிறுத்திவிட்டு கோயில் காலம் நடைபெறும். உடனே மறுபடி அபிஷேகம் தான். எம்பெருமான் சதா அரையில் கட்டிய கோவணத் தோடு அபிஷேகம் கொண்டிருப்பான்! அலங்காரமும் ஆர வாரமும் ஆண்டிக்கு ஒவ்வாதவை யாயிற்றே! இருந்தாலும் பிரும்மோற்சவ காலத்தில் ஒன்றிரண்டு நாள் ஆண்டிக்கு ஆபரணங்கள் சாத்தி, கல்யாண கோலத்தில் காட்சி தரச் செய்கிறார்கள்."

மூண்டியடித்துக் கொண்டு நாங்களும் நுழைந்தோம். கையிலிருந்த பெரிய பூங்கற்பூரக் கட்டியை அடியார் உடை யார், பண்டாரத்திடம் கொடுத்து தீபாராதனைக்கு ஏற்பாடு செய்தார்.

ஆனால் பண்டாரம், "அங்கே தீபராதனைச் சீட்டும், கற் பூரமும் வாங்கிக்கொள்ளுங்க!" என்றார்.

"இதோ, கற்பூரம் இருக்கப்பா! கற்பூரம் வேண்டாம், சீட்டுமட்டும் வாங்கிவரச் சொல்கிறேன்."

"இல்லேங்க. இங்கே தேவஸ்தான கற்பூரம் 15 பைசா கொடுத்து வாங்கினால்தான் தீபாராதனை செய்வாங்க. அப்படித்தான் வழக்கம். அதுதான் உத்தரவுங்க."

"அப்பா! முருகா! இங்கேயும் வியாபாரமா? சுத்த மான கற்பூரம் கொண்டு வந்தால்கூட இதை வாங்கு, அதை வாங்கு என்று உன்னை வைத்து இவ்வளவு வியாபாரம் நடக் கிறதே! இப்படி அடியாரின் பிரஜா உரிமை பறிபோவதற்கு நீ உடந்தையாக இருக்கலாமா? அவர்கள் உள்ளம் பாதிக்கப் படுகிறதே!" என்று அடியார் உடையார் வெதும்பினார்.

என்ன வெதும்பினால் என்ன?

மூன்று வில்லை கற்பூர பாக்கெட்டை 15 பைசாவுக்கு வாங்கிவந்த பிறகுதான் தீபாராதனை நடந்தது! அரசியல் வாதிகளின் சட்டதிட்டங்களுக்குட்பட்டு மதக்கொள் கைகளே மாற்றியமைக்கப்படும் இக்காலத்தில், வழிபாட்டுக்

கான விதிமுறைகள் ஏற்பட்டிருப்பதை குறை சொல்லி பயன் என்ன ? பெருமூச்சோடு கொண்டுவந்த பூங்கற்பூரக் கட்டியை பைக்குள் திணித்துக்கொண்டோம்.

நிமிடத்துக்கு நிமிடம் பால், பஞ்சாமிருதம், விபூதி, சந்தனம் என்று மாறி மாறி ஆண்டிக்கு அபிஷேகம் நடந்து கொண்டேயிருந்தது.

வடபழநி ஆண்டவனைப் பார்த்துப் பழகிய சென்னை அன்பர், "என்ன ! தொண்டு கிழமாக அல்லவா இருக்கிறுன் ஆண்டவன் ? கை, கால்கள் முதலியவை மெலிந்து தேய்ந்து விட்டதே விக்ரஹத்தில் ?" என்ருர்.

"இது நவ பாஷாணத்தால் ஆனது. காய கல்பம் செய்து கொள்வதற்கு போகர் ஸ்தாபித்து, நமக்கும் தந்த புனிதமூர்த்தி. இதுபோன்ற மூர்த்தி வேறு எங்குமே இல்லை, தெரிந்து கொள்ளுங்கள் !" என்ருர் அடியார் உடையார்.

"காயகல்பமா ? அதற்கும் ஸ்வாமிக்கும் என்ன சம்பந்தம் ?"

"பஞ்சாமிர்தம் அபிஷேகம் செய்யும் பக்தர், பழநி ஆண்டவன் நினைவிலேயே தூய்மையுடன் இருந்து புண்ணிய மூர்த்தியின் சிரஸிலே அபிஷேகம் செய்து கொடுக்கும் பஞ் சாமிர்த பிரசாதத்தை பக்தி உள்ளத்தோடு உண்டால் காயகல்பத்தின் மகிமை தெரியும். தேவலோகத்தினர் கண்டது ஒரு அமிர்தம். போகர் கண்டது பஞ்ச அமிர்தம் ! இப்போது புரிகிறதா பழநியாண்டவனின் தனித் தன்மை !" என்ருர், அடியார் உடையார்.

கேட்டுக்கொண்டேயிருந்த பக்தர் ஒருவர் பரவசத் துடன்,

"உலகமெலாம் தொழுதேத்தும் உயர் பழநி மலையினிலே
அலகில்லா உயிர்க்குயிராய் அமர்ந்து நிற்கும் பெருமானே
கலகமிடு மனமுடையேன் 'கருணைபெற வந்தடைந்தேன்
இலகுமொரு மொழி பகர எழிற் குருவாய் எழுந்தருளே."

என்று பாடினர்.

தீபாராதனை முடிந்ததும் விபூதிப் பிரசாதம் பெற்றுக் கொண்டு திரும்பினோம். அடியார் உடையார் 'அர்த்தஜாம சந்தனம் இருந்தால் கொஞ்சம் தருகிறீர்களா ?'' என்று அர்ச்சகரிடம் கேட்டு வாங்கின பிறகே வெளியில் வந்தார்.

''அது என்ன அர்த்தஜாம சந்தனம் ?'' என்றார் ஒருவர்.

''அதுதான் பரம ஔஷதம். நவபாஷாணத்தினால் உண்டாக்கப்பட்ட புனிதன்மேல் இரவு பூராவும் இருந்த சந்தனம் அல்லவா ? அதற்குக் கிராக்கி இங்கே ! எல்லா நாட்டு வைத்தியர்களும் அதற்கு 'நான், நீ' என்று போட்டிபோட்டு வாங்கிப் போய் தங்கள் மருந்துகளுடன் சிறிது கலந்து கொள்வார்களாம் !''

பிராகாரத்தைச் சுற்றி வலம் வரும்போது ஒரு முருகனடியார் என்னிடம், ''அங்கே இரு பாதங்கள் செதுக்கப் பட்டிருக்கிறதே ! அது என்ன ?'' என்று கேட்டார்.

''அதுவா...? முகம்மதியர் தொழுவதற்கென்று அது இருப்பதாகக் கூறுகிறார்கள். அவர்கள் சுப்பிரமண்ய ஸ்வாமியை நவ நாதர்களில் ஒருவராகக் கருதுவதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். நாகூர் ஆண்டவர் சந்நிதியில் நம்மவர்கள் குழுமியிருந்து தரிசனம் செய்யவில்லையா ? அப்படியொரு அதிசயம் இங்கேயும் நடைபெறுகிறது'' என்றேன்.

படிக்கட்டில் ஏறியதைவிட இறங்கும்போதுதான் கால் ஆட்டம் கண்டது. படக் கடையைச் சூழ்ந்து கொண்டனர் சிலர். பழநி ஆண்டி, ஆறுமுகம், கலியாண கோலம் என்று எல்லோரும் படம் வாங்கினார்கள்.

* * *

பஸ்ஸில் ஏறியதும் மதுரைமுருகன் கோவை, மாவட்டம் மருதமலையை நோக்கி வண்டியை விடச் சொன்னார்.

அதே சமயம் கோவை முருகனைக் கூப்பிட்டு, ''நீங்கள் இனி பொறுப்பு ஏற்க வேண்டும். மறுபடியும் குன்றக்குடி போகும் போதுதான் என் பொறுப்பு ஆரம்பமாகிறது'' என்றார்.

**திருபரங்குன்றம்** :—மதுரையிலிருந்து அடிக்கடி பஸ் போக்கு வரத்து உண்டு. ரயில் நிலையமும் உண்டு. அறுபடைவீடு களில் முதல் வீடு. ஆறுமுகம்—தெய்வயானை தெய்வத் திருமணம் நடந்த தலம். முப்பத்து முக்கோடி தேவர் களும், மும்மூர்த்திகளும், திரிசக்திகளும் குழுமியிருந்து கண்டானந்தித்த கல்யாணக் காட்சியை இங்கே காண லாம்.

**பழமுதிர்சோலை** :—'அழகர்கோயில்' என்றும் பழமுதிர் சோலை என்றும் போற்றப்படும் படைவீடு இது. மதுரை யிலிருந்து 12மைல் தூரத்தில் உள்ளது. பஸ் போக்கு வரத்து வசதி உண்டு. ரிஷபமலை என்றும் கானமலை என்றும் கூறும் இம்மலையில், பலவித மூலிகைகளோடு கலந்துவரும் 'நூபுர கங்கை' அல்லது சிலம்பாறு ஸ்நாந த்திற்கு உகந்தது. மயில்களும், காட்டெருமைகளும் நிறைந்த வனத்தின் மத்தியில் இயற்கைச் சூழ்நிலையில் மலைமீது அழகான ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. மலை அடிவாரத்தில் பெருமான் பெருமாளாக மங்கையர் புடைசூழக் காட்சி தருகிறான். தவத்திற்கேற்ற தலம்.

**பழநி** :—திண்டுக்கல்—கோயம்புத்தூர் மார்க்கத்தில் 37-வது மைலில் ரயில்வே ஸ்டேஷன் உள்ளது. கோவை, திண்டுக் கல், மதுரை, ஈரோடு முதலிய இடங்களிலிருந்தும் பஸ் போக்குவரத்து உண்டு. ஷண்முக நதி என்ற ஆறு 3மைல் தொலைவில் ஓடுகிறது. கீழ்க்கோயில் திருஆவினன்குடி; மலையின்மீது போகர் கண்ட புனிதமூர்த்தி பழநி ஆண் டவப் பெருந்தகை—போகர் சமாதியும் மலைமேலேயே உள்ளது. 697 படிகள் கொண்டது. தற்போது இழுவை ரயிலும் உள்ளது.

**குன்றக்குடி** :—காரைக்குடியிலிருந்து பஸ், கார் மூலம் இக் கோயிலை அடையலாம். மலையின்மேல் ஆனந்த மூர்த்தி யாகத் திகழ்கிறான் குமரன்.

★

# கோவை முருகன்

கோயம்புத்தூர் முருகனும் பழைய பல்லவியையே பாடினார். "ஸ்வாமி, தாங்கள் இதுவரை அவர்களுக்குச் செய்தது போல்.........." என்று இழுத்தார். "எல்லோருடைய பொறுப்பும் அங்கங்கே முடிந்து விடுகிறது. எனக்கு மட்டும் தொடர்ந்து இருந்து வருகிறது... என்றால் இயன்ற வரை பார்க்கின்றேன்!" என்றேன்.

அதற்குள் ஒரு அன்பர், "ஆமாம்; நீங்கள் பழநியில் படம் வாங்கினீர்களே, அது பழநி ஆண்டியின் படமல்லவா! சிலர் அதை வீட்டில் வைக்கக் கூடாது என்கிறார்களே?" என்று அடியார் உடையாரைக் கேட்டார்.

"ஆமாம்; வாங்கிப் போகிறவர்கள் என்ன செய்வார்கள்?" என்று குறுக்குக் கேள்வி போட்டார் ஒரு பக்தர்.

"ஏதாவது ஒரு கோயிலில் கொண்டு வைத்து விடுவார்கள்."

"ஏன் அப்படி?"

"பழநி ஆண்டவனை வீட்டுப் பூஜையில் வைத்தால், பூஜை செய்பவர் ஆண்டியாகி விடுவார், குடும்பமே அதோகதியாகிவிடும் என்ற ஒரு மூட நம்பிக்கைதான் காரணம்?"

"நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?" என்று அடியார் உடையாரைக் கேட்டார் பக்தர்.

"எனக்கு இந்த நம்பிக்கையையும், இதைக் கடைபிடிக்கும் மக்களையும் நினைத்தால் சிரிப்பாகத்தான் இருக்கிறது. பாருங்கள், நம் ஜனங்கள் பழநியாண்டவன் படத்தை வீட்டில் பூஜையில் வைத்தால் அப்படி இப்படி என்று பேசுகிறார்களே தவிர, அவர்கள் ஒன்றை மறந்து விடுகிறார்கள். பழநியாண்டவனுக்கு மொட்டை, காவடி என்று பிரார்த்தனை செய்வதையும், அவனை வேண்டுவதையும் விடுவதில்லை.

இப்படி பழநியாண்டவனை மனக் கோயிலிலே நிரந்தரமாக வாசம் செய்ய விட்டுவிட்டு, படத்தை வைக்கக்கூடாது என்பதில் அர்த்தமே இல்லை. நிரந்தர வாசம் செய்யும் பழநி ஆண்டவன் அழிக்கமாட்டான்; ஓட்டாண்டியாக்க மாட்டான் என்றால் படத்தில் உள்ள பழநியாண்டவன் ஆக்கிவடுவானு? மனத்தின் பிரமைதான் இதற்குக் காரணம்" என்றார் அடியார் உடையார்.

வண்டி கோயம்புத்தூருக்குள் நுழைந்து பேரூர் க்ஷேத்திரத்தைத் அடைந்தது. சிவனையும், தண்டபாணியையும் அர்ச்சகர் புரிந்த இனிய தமிழர்ச்சனையும் ஆறுமுகன் சந்நிதியும், எழில்மிகு சிற்ப வேலைப்பாடுகளையும் அவசர அவசரமாகப் பார்த்துவிட்டு மருதமலையை அடைந்தோம்.

"மருதமலையில் ஸ்வாமி எப்படி...ஆறுமுகமா?" என்றார் பக்தர்.

"பழநியாண்டவனைத்தான் இங்கேயும் பார்க்கப் போகிறோம். ஆனால், இங்கு தலைப்பாகை அணிந்து ராஜரீகம் செய்து கொண்டிருப்பான்...ஆண்டி அரசு செலுத்துகிறான்" என்றார் கோவை முருகன். மலைமீது ஏற இங்கே கச்சிதமாக படிக்கட்டுகள் உள்ளன. ஏறிச் செல்வதும் கடினமாயில்லை. மேலே சென்றதும் ஒரே மரத்தின் அடிப்பாகத்தில் ஐந்து விதமான மரங்கள் வளர்ந்திருப்பதைக் கண்டு ஆச்சர்யப்பட்டோம். பழய மூலவர் கோயிலையும் வணங்கினோம். மேலே சுனைக்குச் செல்ல நேரமில்லை. குழாயில் கை கால் சுத்தம் செய்து கொண்டு பழநி யாண்டவனின் பிரதி பிம்பமாக காட்சியளித்த மருதாசல மூர்த்தியை மருதை மலையில் தரிசித்துத் திரும்பினோம்.

வண்டியை நேரே ஊத்துக்குளி வழியாக சென்னிமலைக்கு விடச் சொன்னார் கோவை முருகன்.

"மேட்டுப்பாளையத்தில் காரமடைக்குப் பக்கத்தில் 'குறுந்த மலை' என்று ஒரு முருகன் கோயில் இருக்கிறதாமே!" என்றார் அடியார் உடையார்.

" ஆமாம். அங்கேயும் பழநியாண்டியாகத்தான் குமரன் தரிசனம் தருகிறுன். இங்கிருந்தே கும்பிடுங்கள்...!"

ஊத்துக்குளி வருவதற்குச் சிறிது தூரத்திலேயே மலை மேல் கோயில் தெரிந்தது. " அதோ, சென்னிமலை, குமரா சரணம், சேவற்கொடியோனே சரணம் " என்று ஆர்ப்பரித்தார் பக்தர் ஒருவர்.

"சென்னிமலை இல்லை அது, கைத்த மலை என்று சொல்வார்கள். அங்கும் முருகன் பழநியாண்டவனுகத்தான் காட்சி அளிக்கிறுன். இங்கிருந்தே வணங்க வேண்டியதுதான். சாயங் காலத்திற்குள் சென்னிமலை சேர வேண்டும்" என்றுர் கோவை பக்தர்.



"எல்லாம் பார்க்காமலேயே போகிறேமே! பிறகு சந்தர்ப்பம் கிடைக்குமோ, கிடைக்காதோ?" என்று வருந்தினுர் அந்த பக்தர்.

"அது என்ன, கோவையைச் சுற்றியுள்ள கோயில்கள் எல்லாவற்றிலுமே முக்கால் வாசி ஆண்டியாக இருக்கிருன்?" என்ருர் அடியார் உடையார்.

"அதுதான் நானும் கேட்கவேண்டும் என்று நினைத்தேன்!" என்று பக்கவாத்தியத்தை முழக்கினுர் அடுத்தவர்.

இன்னெருவர் கோவை முருகனைப் பார்த்தார். கோவை முருகன் என்னைப் பார்த்தார்.

"ஆண்டவா! நீ ஏன் மொட்டையாக இருக்கிருய்?" என்ற ஆராய்ச்சிக்கு "நான்தான் உன்னைப்போல் இருக்கிறேன் என்று என் தலையில் பொறுப்பு விழுகிறது போலிருக்கிறது!" என்று வாய்விட்டுச் சொன்னேன்.

"நீங்கள்தான் சொல்ல வேண்டும்" என்று ஏகோபித்த குரல்கள் கிளம்பின.

"காரணம், பக்தர்கள்தான். பழநியான் வீட்சண்யம் தான் அது. பழநிக்குப் போய் வந்த பக்தர்கள் தங்கள் தங்கள் ஊரிலுள்ள மலையில் கோயில் கட்டி மூர்த்தியை ஸ்தாபிக்கும் போது மனதில் அடிக்கடி பக்கத்தில் பார்த்துப் பழகிய பழநியாண்டவன் தானே வருவான்? பழநியாண்டவனும், அவன் பஞ்சமிர்தப் பெருமையும் பார் முழுவதும் வீசும் என்ருல் பக்கத்துப் பிரதேசங்களில் அவன் பெயரும் உருவும் அன்றி வேறு எதை வைக்க மனம் இயலும்" என்றேன்.

அடுத்து வண்டி சென்னிமலைமேல் ஏற ஆரம்பித்தது.

"இங்கும் மலைமேல் ரோடு போட்டு விட்டார்களே! போன தடவை வரும்போது இல்லையே!" என்றேன் நான்.

இன்னும் கொஞ்ச நாளில் ஒரு மலை பாக்கி வைக்காமல் ரோடு, இழுவை ரயில் எல்லாம் போட்டு விடுவார்கள். அப்போதுதானே 'கடைக்குப் போனேன்; வடை வாங்கி வந்தேன்' என்று யாத்திரையைச் சுருக்கமாகச் செய்துவர முடியும்?" என்ருர் ஒரு பக்தர்.

வண்டி கோயில் முன் வந்து நின்றதும் கோயிலுக்குச் சென்று 'சென்றவிடமெல்லாம் குன்றுதோறும் நின்ற செல்வனை சென்னிமலையிலும் கண்டோம். ஒரு மிக்க குரல், "வெற்றி வேல் முருகனுக்கு அரஹரோஹரா!" என்று எழும்பியது. அமைதியான சூழ்நிலையும், கோயிலும் மனதை விட்டகலாது.

**மருதமலை**:—கோயம்புத்தூரிலிருந்து பஸ்மூலம் அடையலாம். பழநி தண்டபாணியை ஞாபகமூட்டும் அற்புத மலைக் கோயில். மலைமேல் கார் செல்ல சமீபத்தில் நல்ல ரோடு போடப்பட்டுள்ளது.

**சென்னிமலை**:—திருப்பூர்—ஈரோடு பஸ் மார்க்கத்தில் உள்ள குமரன் மலைக்கோயில். தைப்பூசம் இங்கு 10 தினங்கள் கொண்டாடப் படுகிறது. இதே ரோடில் தான் "ஊத்துக்குளி"யில் இறங்கினுல் கைத்தமலையை அடையலாம். அங்கும் ஆண்டவன் ஆண்டியாக அருள்பாலிக்கிருன். திருப்பூரிலிருந்து 23-வது மைலில் 'ஊதிமலை'யிலும் ஆண்டவன் கோயில் ஒன்று உண்டு. இது புளியம்பட்டியிலிருந்து சுமார் 5 மைல் தொலைவில் உள்ளது. திருப்பூரை மையமாகக் கொண்டு இவ்வளவு முருகன் கோயில்களையும் பார்க்லாம்.




தயாரிப்பு :—

சிப்பாய்காபி ஒர்க்ஸ்

# சேலம் முருகன்

எங்கள் கோஷ்டி திருச்செங்கோட்டை அடையும் போது ஜன சந்தடி அடங்கி விட்டது. இரவு முகாம் திருச்செங்கோட்டில் போட்டோம். காலையில் எழுந்ததும் குளித்து விட்டுக் கிளம்பி விடலாம் என்று 'ஜலம் ஜலம்' என்று தேடி னால் ஜலம் 'அருஞ்ஜல'மாகத்தான் இருந்தது! கோயிலின் அடிவாரத்தில் ஒரு கிணறு. அங்கே ஏகக்கூட்டம்.

"மலைமேல் போங்கள். அங்கே சுனை இருக்கிறது. நிம்மதி யாக ஸ்நானம் செய்யலாம்" என்றார் உள்ளூர்வாசி யொருவர்.

இதுவரை செய்யாத ஒன்றைச் செய்கிறோமே என்று வருந்தி எல்லோருமே குளிக்காமலேயே மலையேறினோம்.

போகும் வழியில், "இது என்ன? பெரிதாகப் பாம்பு செதுக்கப்பட்டிருக்கிறது" என்று கேட்டார் அன்பர்.

"இதுதான் சர்ப்ப சைலம் அதாவது நாகாசலம்."

"நாகாசலமா? படம் விரித்தாடி விடப் போகிறது" என்றார் வேடிக்கையாக. அவரைப் போல் முன் காலத்தி லேயே புலவன் ஒருவன் வேடிக்கையாகக் கேட்டுவிட்டான்!

"வெளிநாட்டுப் புலவன் ஒருவன் இங்கே வாதம் செய்ய வந்திருக்கிறான். உள்நாட்டுப் புலவருக்குப் பீதி. அவர் நல்ல முருக பக்தர். 'முருகா! தினந்தோறும் உன்னைத் தரிசனம் செய்து கொண்டிருந்தேன். நானோ இப்புலவன் முன் தோற் றால் அரசன் ஊரை விட்டே விரட்டிவிட மாட்டானா? அப் புறம் மயில்மன்னா, உன்னை எவ்வாறு பார்ப்பது?" என்று வருந்தினார்.

அன்று மாலை வெளியிலிருந்து வந்த புலவன் உலாவச் செல்லும்போது சந்தோஷமாகக் கவி பாடத் தொடங் கினான்.

"சமரமுகத் திருச் செங்கோடு சர்ப்ப சைல மெனின்
அமரில் படம் விரித்தாடாத தென்னை?"

என்று இரண்டு அடி வந்தது. மேலே கவிதை ஓடவில்லை. திருப்பத் திருப்பப் பாடியதையே பாடிக் கொண்டு மண்டையை உடைத்துக் கொண்டிருந்தான்.

தன் பக்தனைக் காக்க எண்ணிய முருகன், புலவன் முன் மாடு மேய்க்கும் சிறுவனாக வந்து நின்று அவன் பாடிய கவிதையைக் கேட்டு,

"அஃது ஆய்ந்திலையோ?
நமரன் குறவள்ளிபங்கன் எழுகரை நாட்டுயர்ந்த
குமரன் முருகன்தன் மயில்வாகனம் கொத்து
மென்றே"

என்று மேலடி இரண்டையும் முடித்தான். புலவர் ஆச்சரியமடைந்து, 'நீ யாரப்பா?' என்று கேட்டதும் சிறுவன் 'நான் இந்த ஊர் அரச சபைப் புலவர் வீட்டில் மாடு மேய்ப்பவன்' என்று கூறவே, 'புலவர் வீட்டு மாடு மேய்ப்பவனே இப்படிப் பாடினால்...ஐயோ...! புலவரிடம் நாம் தோற்க வேண்டியது தான்' என்று அன்றிரவே ஓடிவிட்டாராம் வந்த புலவர்."

ஓகோ! அதுதான் அருணகிரியாரும் அனுபூதியில் 'நாகாசல வேலவ நாலுகவித்தியாகா......' என்று பாடியிருக்கிறார் போலிருக்கிறது" என்றார் ஒரு அன்பர்.

எல்லோரும் சுனையில் நீராடினோம் இறங்கி ஒரு முழுக்குப் போட்டதும், உடம்பெல்லாம் தேள் கொட்டினாற்போல் எரிச்சல் கண்டது. "அப்பாடி! என்ன சிலுசிலுப்பு" என்று எல்லோரும் ஒரு முழுக்கோடு எழுந்தனர்.

பக்திப் பாடல்களைப் பாடிய வண்ணம் முருகன் ஸந்நிதிக்குச்சென்றோம்.

பழநியாண்டவனே தான்! ஆனால், தண்டுபோல் இங்கு கல்லிலேயே வேல் பிடித்திருக்கிறான். கர்ப்பூர தீபாராதனையில்

கருணைக் கடலாகத் திகழ்ந்தான் கந்தன். அவன் கை கருங்கல் வேல் அடியார் உள்ளங்களில் நிலையாக இடம் பெற்றது.

அங்கிருந்து சென்று அர்த்தநாரீச்வரரையும் வணங்கிப் புறப்பட்டோம்.

மலையிலிருந்து இறங்கியதும், ஓட்டலில் ஒன்று சேர்ந்து படையெடுத்து வயிற்றுப்பாட்டைத் தீர்த்துக்கொண்டு பஸ்ஸில் ஏறினோம். வரும்வழியில் வடகுமரை குமரனையும் அழகு நிலம் (*Fairlands*) சென்று நவீன கால வேலைப் பாட்டுடன் கச்சிதமாகவும் அழகாகவும் உள்ள கோயிலில் குடிகொண்டிருக்கும் குமரனையும், ஸ்கந்தாச்சரமம் முருகனையும், மனமார வணங்கி தரிசனம் செய்து கொண்டோம். இது வரை தலைமை தாங்கிய சேலம் முருகன் தன் பொறுப்பு நீங்கியது என்று பெருமூச்சு விட்டு, "முருகா எல்லாம் உன் செயல்" என்று உட்கார்ந்தார்.

---

**திருச்செங்கோடு:**—ஈரோடிலிருந்தும் பஸ் செல்கிறது. 'சங்கரி துர்க்கம்' ரயில் நிலையத்தில் இறங்கி 'அவுட் ஏஜென்ஸி, பஸ்ஸின் மூலம் இம்மலையை அடையலாம். சர்ப்பகிரி' நாகாசலம் என்று வழங்கும் அர்த்தநாரீச்வர க்ஷேத்திரம். மலைக்கோயில். மலைமேல் சுனை ஒன்றும் உண்டு. தண்டபாணி இங்கு கல்லினாலான வேலோடு காட்சியளிக்கிறான். அருணகிரி அனுபூதியில் சிறப்பாக பாடிய தலம்.

அழகு நிலம் :- **சேலத்தின் ஒருகாலனி**

வடகுமரை :- சேலத்திற்கு அருகாமையில் உள்ளது.

'ஸ்கந்தாச்ரமம்' :- சேலம் உடையாப்பட்டி ரோடில் சென்றால் வழிகாட்டும் பலகை வரும். சிறுமலை மேல் அழகிய சூழ்நிலையில் ஸ்ரீமத் சாந்தாநந்த ஸ்வாமிகளின் ஆச்ரமத்தின் கோயில் மனதைக் கொள்ளை கொள்ளும். சுற்றுப்புற அமைதியின் அணைப்பில் தண்டபாணி கோயில் கொண்டுள்ளான். கம்பீரமானபெரிய (அஜானுபாஹு) உருவம். அவசியம் இருந்து அனுபவிக்க வேண்டிய மலைக்கோயில். வசதிகள் உண்டு. கார் போகும்.

ஓம்

“ ஞான நிட்டையை நல்குநற் தேசிகன்
மான முற்றிடு மானிடனல் லஞல்
வான முற்று வளர் கயிலைப் பரன்
தானே னத் தினஞ் சாற்றிட லாகுமால் '

ஸ்ரீமத் சாந்தானந்த ஸ்வாமிகள்



SRI. V. S. LAXMANAN

**Thirumoorthy Street, T' Nagar, MADRAS-17.**

Phone : 444067

***SRI S. KRISHNAMOORTHY IYER***

Sriniketan, Venus Colony, MADRAS-18

Phone : 76040

# திருச்சி முருகன்

திருச்சிராப்பள்ளியை நோக்கி ஓடிக்கொண்டிருந்தது எங்கள் பஸ். திருச்சி முருகன் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்......வழக்கம்போல் என்னையும் உதவி கேட்டுவிட்டு, "இதுவரை கேட்டிராத ஆச்சரியமான விஷயம் எங்கள் ஜில்லாவில் உங்களுக்குக் காட்டப் போகிறேன்" என்று வண்டியை விராலி மலைக்கு ஓட்டச் சொன்னார். அடர்ந்த மரங்களோடு காட்சிதரும் சிறு மலை. மலைமேல் கோயில். ஆண்டவனைத் தரிசிக்குமுன் ஆண்டவனின் வாகனங்கள் பலவற்றையும் பார்த்தோம்.

"என்ன, மயில் கூட்டம் கூட்டமாக இருக்கிறதே !" என்றார் பக்தர் ஒருவர்.

"விராலிமலையில் விசேஷம் பல. அதில் மயில் கூட்டம் ஒன்று. வாருங்கள், நாழியாகிவிட்டது" என்று அவசரம் அவசரமாக மலையேறினார் திருச்சி முருகன்.

நேரே கோயிலையடைந்ததும் கிழக்கு நோக்கி கம்பீரமாக மயில்வாஹனனாக வீற்றிருக்கும் சண்முகநாதனைக் கண்நிறையக் கண்டு களித்தோம். கோயில் குருக்கள் விபூதிப் பிரசாதத்துடன் வந்தார். அனைவரும் வாங்கிக்கொண்டு திரும்பினோம்.

பிராகாரத்தை வலம்வந்து கொண்டிருந்தபோது திருச்சி முருகன் கையிலிருந்த சுருட்டைப் பார்த்ததும், அடியார் உடையாருக்குத் தூக்கிவாரிப் போட்டது ! "என்ன முருகா? நீங்கள் சுருட்டை வைத்துக்கொண்டிருக்கிறீர்கள் ? உங்களுக்குப் பழக்கம் இல்லையே !" என்று தடுமாறினார்.

"எனக்குப் பழக்கம் கிடையாது, உண்மைதான். இது கோயில் பிரசாதம். அதற்காக வாங்கி வைத்துக்கொண்டிருக்கிறேன். பழநியில் அர்த்தஜாம சந்தனம் விசேஷம் அதுபோல் இங்கு சுருட்டு ஒரு விசேஷம் !"

"சிவ சிவா ! சுவாமிக்கு சுருட்டா ? என்ன சொல்கிறீர் கள் நீங்கள்?...கொஞ்சம் நன்ருக விரிவாகச் சொல்லுங்கள்!"

"புதுக்கோட்டை அரசன் இராமச்சந்திரத் தொண்டை மான் காலத்தில் அரசனுக்கு ஏதோ குன்மநோய்கண்டதாம். அரசனுடைய கனவில் இறைவன் தோன்றி 'கால சந்திக்கும் சாயரக்ஷைக்கும் சுருட்டு நிவேதனம் செய். எனக்கு நிவே தனம் செய்யும் உணவில் கல் நிறைய இருக்கிறது' என்று சொன்ஞராம்.

"விழித்தெழுந்த அரசன், சே! இது என்ன பைத்தியக் காரத் தனமான கனவு. சுவாமிக்குச் சுருட்டா !' என்று பேசாமல் இருந்திருக்கிருன். ஆஞல், வியாதியின் கொடுமை யால் இறைவனைப் பிரார்த்தனை செய்யவே, மீண்டும் கந்தன், 'எனக்குச் சுருட்டு நிவேதனம் செய்' என்று சொன்னதன் பேரில் அரசன் அவ்வாறே செய்தான். அன்று முதல் இன்று வரை தேவஸ்தானத்திலேயே புகையிலை தருவித்து 'சுருட்டு' தயாரிக்கிருர்கள். இதுதான் விஷயம்!" என்ருர் திருச்சி முருகன்.

"வெளியாரும் கொண்டு வருகிருர்களா ?" என்ருர் அடியார் உடையார்.

"இல்லை. கோயில்முறை ஒன்றுதான்" என்ருர் திருச்சி முருகன்.

"ஆமாம். ஏன் இங்கே விச்வநாதர், விசாலாக்ஷி, வீரவாகு, சனகாதியர் முதலிய சந்நிதிகளில் விளக்கு இல்லை? நம் நாட்டுப் புராதன தேவாலயங்கள் பல இந்த நிலையி லிருக்கும்போது, புதிது புதிதாகக் கோயில் கட்டிக் கும்பாபி ஷேகம் பண்ணுவதில் என்ன பயன் ?" என்ருர் அடியார் உடையார்.

"இந்தத் தத்துவம் எல்லோருக்கும் புரிந்து விட்டால் இந்த நாட்டின் முன்னேற்றத்திற்குக் குறைவேது? இங்கே கோயில் விளக்குகளுக்கு எண்ணெய் கொடுப்பது போதாது- அதஞல் இப்படியிருக்கிறது!" என்ருர் கோயில் அத்யயன பட்டர்.

"கோயிலில் கிணறு இல்லையே, கீழேயிருந்துதான் ஜலம் வரவேண்டுமோ?"

"அபிஷேகத்திற்குக்கூட தடாக தீர்த்தம் இருக்கிறதே (குளம்), அதிலிருந்துதான் ஜலம் வருகிறது" என்றார் கோயில் சிப்பந்தி.

"அந்தக் குளம் சுத்தமாக இல்லையே, ஒரே பாசி படர்ந்து அழுக்கு நீராகவல்லவா இருக்கிறது?"

"என்ன செய்வது? அதுதான் இன்றைய நிலை. அரசாங்க முயற்சியில் நல்ல தண்ணீர் ஏற்பாடு செய்து, ஸ்வாமிக்கு அபிஷேகத்திற்கு என்று தனியாகக் கிணறு அல்லது குளம் வெட்டலாம். இங்கு அந்தக் குறை நீங்க முருகன் என்று வழி விடப் போகிறானோ!" என்றார்.

மலையிலிருந்து இறங்கும்போது பாதி வழியில் சொக்கர் சந்நிதியையும் தேவி மீனாக்ஷியையும் தரிசனம் செய்துகொண்டோம்.

Phone : 22035

For

Heavy Chemicals

Contact

RAMANATH & CO

*2/266 Angappa Naicken Street*

MADRAS-1

"இங்குதான் முதலில் அருணகிரி பாடினதாகச் சொல்கிறார்கள்" என்றார் அடியார் உடையார். அதே சமயம் அங்கு நின்ற ஒரு பரதேசி, "இங்கேதான் விராலிநாதர் குகை இருக்கிறது பார்த்துவிட்டுப் போங்கள்" என்றார். உடனே அவர் வழி காட்ட, பின்னாலேயே எங்கள் கோஷ்டி சென்றது; கீழேயும் மேலேயும் ஏறி இறங்கி ஒற்றையடிப் பாதை வழியாக குகையை அடைந்தோம்.

"பெரியதாக இருக்கிறதே குகை! அது எங்கேயோ போகிற வழிபோல இருக்கிறதே?" என்றார் ஒரு பக்தர்.

"திருச்செந்தூர் வரை போகிறது என்று சொல்கிறார்கள். பூராவும் போய்ப் பார்க்கவில்லை. யாராலும் போக முடியவில்லை. ஆனால், என்னுடைய ஊகம், ஸ்வாமி ஸந்நிதிக்குப் போகிறது என்பதுதான்" என்று கூறினார் பரதேசி.

அவரையும் அந்த மர்மக் குகையையும் அங்கேயே விட்டுவிட்டு எல்லோரும் கிளம்பி, மலை இறங்க ஆரம்பித்தோம். ஆனால் பரதேசி விடவில்லை, எங்களைப் பின்தொடர்ந்தார். கீழே இறங்கியதும் வண்டியை நோக்கி நடந்த எங்களை நிறுத்தி, "இப்படிக் கொஞ்சம் வந்து இங்கே அடியேன் இருக்கும் குகையைப் பார்த்துவிட்டுப் போங்க" என்றார்.

"நீங்கள் இங்கே தங்கியிருக்கிறீர்களா?"

"பதினைந்து வருஷமா இந்த எச்சில் பொறுக்கி ஆறுமுகம் இங்கேதான் கிடக்கிறேன்" என்றார் அவர்.

நாங்கள் அங்கே சென்றதும், அவர் குகையைச் சுற்றி மயில்கள் நின்றுகொண்டிருந்ததைப் பார்த்தோம்.

";இங்கே மயில் அதிகம்! இல்லையா?" என்றார் பக்தர்.

"இப்போ கொஞ்சம் குறைவுங்க. இன்னும் நிறைய இருந்திச்சு" என்றார் பரதேசி.

உடனே அவர் பிரத்யேகமான குரலில், "வாம்மா, வா-இங்கே வா ஆ ஆ!" என்று குரல் கொடுத்தார்.

உடனே மந்திரத்தில் கட்டுண்டதுபோல் மயில்கள் மூணு நாலு ஓடிவந்து அவர் தந்த வடையைத் தின்றுவிட்டுச் சென்றன.

அவரிடம் விடை பெற்றுக்கொண்டு வண்டியை வய லூருக்கு விடச்சொன்னோம். வயலூருக்குப் போகும் வழி யிலேயே, தாயுமானவனையும் சிராமலை வேலனையும் தரிசனம் செய்துகொண்டு போனோம்.

"வயலூர் என்று சொல்வதற்கேற்றாற்போல் பரந்த வயல் வெளி மத்தியிலே வாழையும், தென்னையும் அடர்ந்த சோலையாக அல்லவா இருக்கிறது?" என்றார் அன்பர் ஒருவர்.

"காவேரிப் பாய்ச்சல், கேட்பானேன்! கொழிக்கும் நெல் வயல் மத்தியில் கந்தன், தாய் தந்தையுடன் குடிகொண் டிருக்கிறான்."

"அருணகிரி அருள் பெற்ற தலமாமே இது?" என்று கேட்டார் பக்தர்.

"ஆமாம். 'வேல், மயில், சேவல், சிற்றடி, தோள் இந்தத் தலம் வைத்துப்பாடு' என்று கூறியதாக அவரே பாடியிருக்கிறாரே!" என்றார் அடியார் உடையார். தீபா ராதனை செய்து விபூதிப் பிரஸாதம் பெற்றுக்கொண்டு பஸ் ஏறினோம்.

பஸ் புதுக்கோட்டை வழியாகச் சென்றது. நாங்கள் செல்லும்போது உச்சிக் காலம் கடந்து விட்டதால் "திருப் புல் வயல்" முருகனுக்கு மானசீகமாக அஞ்சலி செய்து குன்றக்குடியை நோக்கிச் சென்றோம், மதுரை முருகன் தாற்காலிகமாகத் தலைமை ஏற்றார்.

"இங்கே 'பிள்ளையார் பட்டி' என்று பெரிய க்ஷேத்திரம் இருக்கிறதாமே. அதையும் பார்த்துவிட்டுப் போகலாமே?" என்றார் ஒருத்தர்.

# INDIAN BANK

(Wholly owned by the Government of India)

Head Office, MADRAS.

UNIQUE GIFT OF THE 1970S TO BANK DEPOSITORS.

The Budget proposals presented by the Prime Minister of India provide that:

1. Income derived by any taxpayer from interest on deposits with banking Companies will be exempt from incaome-tax to maximum of Rs. 3,000.

2. Deposits with banking companies upto Rs. 1,50,000 will be exempted from Wealth Tax.

DEPOSIT WITH INDIAN BANK AND REAP THE BENEFITS OF:

(a) exemption from Income-Tax.

(b) exmption form Wealth-Tax

(c) keeping your money safe and wacthing it grow.

(d) assisting country's economic growth by channelling your savings through Indian Bank.

(e) banking service of every description at 273 Branches of Indian Bank.

YOUR ACCOUNT WITH INDIAN BANK IS YOUR PASSPORT TO PROSPERITY. CALL AT THE NEAREST BRANCH OF INDIAN BANK.

*Custodian.*

பிள்ளையார்பட்டி குளத்தினருகில் வந்து நின்றது வண்டி. மதுரை முருகன் முன்னே செல்ல பின்தொடர்ந்தோம். "பெயர்தான் பிள்ளையார் பட்டி! இது பெரிய சிவன் கோயிலல்லவா?" என்றார் அடியார் உடையார்.

"ஆமாம் ஆனால், சில சிவன் கோயில்களில் இப்படித் தான் முருகன் செல்வாக்கு பெற்று ஆட்சி நடத்துகிறான். இங்கே மூத்தோன் ஆட்சி. மலையிலேயே குடைந்து செதுக்கப்பட்ட திருஉருவம்" என்றார் மதுரை முருகன். பெரிய உருவம் படைத்த பெரியோனை வணங்கிப் புறப்பட்டோம்.

குன்றக்குடிக்கு மாலையில் வந்து சேர்ந்தோம். மலையேறி, மயிலேறிய மாணிக்கத்தைக் கண்டு மனச்சாந்தியடைந்தோம்.

"குன்றை வாழ் முருகன் குன்றுதோறும் நின்றாடுவதால் தான் 'குன்றுதோராடல்' என்ற படை வீடு ஏற்பட்டதா?" என்றார் முருகனடியார் ஒருவர்.

"ஆமாம். அதிலும் ஒரு உட்பொருள் இருக்கிறது. பக்தர்களுடைய பக்தி குன்றும்தோறும் ஆடல் புரிந்து அவர்களைத் தன்பால் மீண்டும் இழுத்துக் கொள்ளும் தன்மையுடையவன் கந்தன். அதுதான் குன்றுதோராடல்" என்றும் கொள்ளலாம் என்று அடியார் உடையார் கூறினார்.

வண்டிக்கு வந்ததும் அடியார் உடையார், தஞ்சை முருகனை அழைத்துச் சிறிது நேரம் ஆலோசனை நடத்தினார். அதைத் தொடர்ந்து பஸ் புதுக்கோட்டை ரஸ்தாவில் திரும்பி ஓடியது.

கந்தர்வகோட்டையைத் தாண்டிய பஸ், தஞ்சை நகரத்துக்குப் போகும் பாதையில் ஓடியபோது, என் பக்கத்திலிருந்த தஞ்சை முருகனிடம் ஒரு அன்பர், "சுவாமிமலைக்கு எப்போது போவோம்? அறுபடை வீடுகளில் திருவேரகம் தான் வெகு வெகு முக்கியமானது. அங்கு முருகன் 'தகப்பன் சாமி'யாக இருக்கிறான் என்று சொல்கிறார்களே? அப்படித் தானே?" என்று கேட்டார்.

இவரைப் போலவேதான் கோஷ்டியில் பலர் அவரவருடைய மனத்தில் வேரூன்றியிருந்த முருகன் தலத்தைக் குறிப்பிட்டுச் சொல்லி, 'அதுதான் முக்கியம் : சிறந்தது' என்று வாதம் செய்துகொண்டு வந்ததை நான் கவனித்தேன். ஆரம்பத்திலிருந்தே அவர்களுக்குக் கூறுவதற்கான தகுந்த பதிலைத் தேடிக்கொண்டிருந்த என் புத்தி, எதிர்பாராத விதமாக அப்போது ஒத்துழைத்தது. தஞ்சை முருகனுக்குப் பதிலாக நானே பேசினேன்.

"எண் சாண் உடம்பிற்கு சிரஸே பிரதானம்' என்றார் ஒரு சொற்பொழிவாளர் அழுத்தந் திருத்தமாக ! உடனே மேடையைச் சுற்றி உட்கார்ந்திருந்த ரசிகர்கள், தம்மையறியாமலேயே தலையைத் தடவிப் பார்த்துக் கொண்டார்கள்.

"சிரஸா பிரதானமாமே ! சே ! சே ! கண்தான் பிரதானம். சிரஸா ?...ஊஹூம். மூக்குதான் ! மூக்கு இல்லாவிட்டால் மூச்சு எப்படி விடுகிறது ? சிரஸாமே ! பேத்தல் ! வாயைச் சொல்வதற்கு பதில் சிரஸைச் சொல்கிறார். வாய் வழியாக ஆகாரம் போனால்தானே எண்சாண் உடம்பு எண்சாணாக இருக்கும் : சிரஸா பிரதானம் என்று சொல்வது அறியாமை......இதயம் பட்டென்று அடிக்காவிட்டால் சிரஸாம் அதுவும் இதுவும் தம்பிடி-இல்லை-நயா பைசா-பெறுமா ? மேடை மீது ஏறிப் பேச வாய்ப்புக் கிடைத்து விட்டால் வாய்க்கு வந்ததைப் பேச வேண்டியது சொற்பொழிவாளர் தர்மம்......! வயிற்றை வெட்டிப் போட்டு விட்டு இவர் சிரஸைப் பிரதானமாக வைத்துக்கொண்டு வாழட்டுமே ! சுத்த மோசம் அறிவைக்கட்டி வீட்டில் வைத்துவிட்டு வந்து இங்கே அளக்கிறார்...!

"இப்படி ரஸிகர் கூட்டம் அவரவருக்குத் தோன்றிய விதத்தில் உடல் உறுப்புகளுக்கு முக்கியத்வம் கொடுத்து எண்ணமிட்டு ஒரு முடிவுக்கும் வராமல் குழம்பிக் கொள்வது போல்தான் இருக்கும், நாம் முருகனுடைய அறுபடை வீடுகளிலும், மற்றத் தலங்களிலும் எது முக்கியம், எது சிறந்தது

என்று ஆராய்ச்சியிலோ சர்ச்சையிலோ ஈடுபடும் போது...!" என்று சொல்லிவிட்டு, அந்த அன்பர் முகத்தைப்பார்த்தேன்.

அவர் திகைப்போடும், யோசனையோடும் என்னையே பார்த்துக் கொண்டிருந்தவர், "எண் சாண் உடம்பிற்கு எது பிரதானம்? நீங்கள்தான் சொல்லுங்களேன்!" என்று என்னை மடக்கிக் கேட்டார்.

"எண் சாண் உடம்புக்கு எண் சாண் உடம்பே பிரதானம். பல்வேறு உறுப்புக்களாலான தேகம் தேகமாக இயங்க எல்லா உறுப்புக்களும் அவசியந்தான். ஆனால், உயிர் இருந்தால்தானே இயங்கும்? அதனால் பிராணன் முக்கியம். அதுபோல் அடியார்கள் முருகன்பால் செலுத்தும் பக்தியில் பேதமின்மை இருக்க வேண்டும். உயிரை எப்படி அதற்குக் கொஞ்சப், இதற்கு கொஞ்சம் கூட, இன்னொன்றுக்கு முக்கால் பங்கு என்று பின்னப்படுத்திச் செயலாற்ற முடியாதோ, அப்படியேதான் முருக பக்தியும். செந்திலாண்டவனுக்கு ஐந்து சதவீதம், பழநியாண்டவனுக்குப் பத்து சதவீதம், திருத்தணிகை வேலனுக்கு ஐம்பது சதவீதம் என்று பக்தியைப் பங்கிட முடியுமா? சொல்லுங்கள்!"

"அது முடியாது: அப்படிச் செய்ய முற்படுவதும் கூடாது. நீங்கள் சொல்வது எல்லாவற்றையும் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் சிலர், எனக்குப் பழநியாண்டவனிடம் தான் ஈடுபாடு என்கிறார்களே? அந்த ஈடுபாடு என்பது முக்கியத்துவத்தைத்தானே குறிக்கிறது?"

"முக்கியத்வத்தைக் குறிப்பதாகக் கருதுவது சரியல்ல. புலனாகாத பக்தி என்ற உயிர் துடிப்பு புலனாகாத பரம்பொருளோடு வயப்படும் (இணையும்) போது ஏற்படும் உணர்ச்சியே ஈடுபாடு. அந்த உணர்ச்சிக்காக எத்தனையோ காலம் ஏங்கித் தவம் கிடக்கும் அடியாருக்குச் சொல்லாமல் கொள்ளாமல் என்றோ ஒரு நாள் திடீரென்று கண்ணிமைக்கும் பொழுதில் உண்டாகிறது. அந்தக் குறிப்பிட்ட நேரத்தில் மனம்

## தரத்தில் உயர்ந்த, விலை
## சகாயமான, சரளமாக
## எழுதக் கூடிய



# ஆஸ்வால்

பவுண்டன் பேனாக்கள்,
பால பாயின்ட் பேனாக்கள்,
ரீஃபில்கள், இங்குகள்
வாங்குங்கள்

பவுண்டன் பேனாக்கள்,
பால் பாயின்ட் பேனாக்கள்,
ரீஃபில்களையே வாங்குங்கள்.
இவை ஈடு இணையற்றவை.

*சனுஸால் சேர்ந்த ஆஸ்வால்*
*இங்கையும் வாங்குங்கள்.*

**ஆஸ்வால் பென் கம்பெனி,**
3, கதீட்ரல் ரோடு, சென்னை-6



எதைக் கற்பனை செய்துகொண்டிருக்கிறதோ, அதன் சாயலும் அந்த உணர்ச்சியில் லேசாகப்படுகிறது. தூய்மையான உணர்ச்சியில் சிறிது கறை தென்படக் காரணமான சாயல் தான் ஈடுபாடு. இப்போது புரிகிறதா ஈடுபாடு என்பது முக்கியத்வத்தைக் குறிக்கவில்லை என்று?"

அன்பர் கரங்குவித்து, 'முருகா, முருகா" என்று வணங்கிவிட்டு, "உங்கள் கையால் கொஞ்சம் திருநீறு கொடுங்கள். நான் கொண்டுள்ள முருக பக்தியை நீங்கள் காட்டிய வழியில் வளர்க்க முயற்சி செய்யப் போகிறேன். எனக்கு வெற்றி கிடைக்க இறைவன் திருநீறு உதவட்டும்" என்றார்.

"முருகா! அடியார் உள்ளத்தில் வியாபித்திருந்தும் எப்படியெல்லாம் அதைச் சொல்லுகிறோம்? எல்லாம் உன் அருள்!" என்று அந்த அன்பர்கள் கையில் செந்திலோன் இலை விபூதியை அளித்தேன்.

வயலூர்:—திருச்சிராப்பள்ளியிலிருந்து 7—வது மைலில் மேற்கே உள்ளது இக்கோயில். திருச்சியிலிருந்து அடிக்கடி பஸ் போக்குவரத்து உண்டு. பரந்த பச்சைப் பசேலென்ற வயல் வெளியின் மத்தியிலே தென்னையும் வாழையும் சோலையாகத் திகழும் இடத்தில் அமைந்துள்ள ஆலயம்.

விராலிமலை:—திருச்சி—மதுரை பஸ் மார்க்கத்தில் 16_வது மைலில் உள்ள மலைக்கோயில். 177 படிகள் கொண்டுள்ள சிறுமலை. மலையில் மெய்த்தவத்திற்கு உரிய பல குகைகள் உள்ளன. மயில்களின் கூட்டம் அதிகம். அதி சௌந்தர்யத்துடன் ஆறுமுகன், மங்கையர் இருமருங்கும் புடைசூழக் காட்சியளிக்கிறான். திருபுவனத்தில் சமாதியாயிருக்கும் சதாசிவ ப்ரும்மம் இங்குதான் ஒரு குகையில் தவம் செய்து வந்தாராம்.

# தஞ்சை முருகன்

அப்போது அடியார் உடையார். "வேல் முருகனுக்கு அரோஹரா ! வில்முருகனுக்கு ஹர–ஹரோ-ஹரா" என்று கூறிக்கொண்டே தஞ்சை முருகனைத் தமது அருகில் அழைத்து, "திட்டத்தில் இல்லாவிட்டாலும், எங்குமில்லாத அதிசயமாக ஆண்டவன் வில்லேந்தி காட்சி தரும் பஞ்சநதர் ஆலயத்தில் பத்து நிமிஷம் முருகனைப் பார்த்துவிட்டுப் போகலாமே ! டிரைவரிடம் சொல்லி திருவையாறுக்குப் போகச் சொல்லுங்கள்" என்றார். வில்லேந்திய வேலன் ஒருவனே என்பதாலோ என்னவோ, அகக்கண், புறக்கண் இரண்டுமே அவனை ஆயுள் பூராவும் வைத்திருக்கத் தீர்மானித்தவை போலப் படம் எடுத்து பத்திரப்படுத்திக் கொண்டன.

பிறகு துரிதமாக பஸ் சிக்கலை அடைந்தது. சிக்கல் சிங்கார வேலனை அன்றுதான் நான் முதலில் பார்த்தேன். கருத்தில் நான் அவனை எப்படி உருவகப்படுத்திக்கொண்டிருந்தேனோ, அவ்வாறே அவன் காட்சியளித்ததைப் பார்த்ததும் எனக்கு மெய்சிலிர்த்தது. அடியார் உடையாரிடம் என் அனுபவத்தைச் சொன்னபோது அவர், "மெய்ஞ்ஞானிகள் நம்மிடையே ஸ்தூலமாக வாழாவிட்டாலும், நாம் சுவாசிக்கும் காற்றில் சூட்சுமமாக இருந்து வருகிறார்கள் இல்லையா ? செந்திலாதிபன் சந்நிதியில் இருக்கும் பாக்கியத்தைப் பெற்றிருக்கிறீர்கள். மகான்களும், தவயோகிகளும் அவனை அன்று தூலமாகவும் இன்று சூட்சும மாகவும் வழிபட்டு வருகிறார்கள். அவர்கள் மத்தியில் வாழ்ந்து வரும் உங்களுக்கு இப்படியெல்லாம் அற்புதங்கள் காட்டியருளவேண்டியது அவன் கடமை!" என்று அருமையானதொரு நீதியை எடுத்துச் சொன்னார்.

சிக்கல்கள் நிறைந்த வாழ்க்கையைச் செப்பனிட்டு சிக்கலின்றிக் கடத்திச் செல்ல சிக்கல் தெய்வம் கருணைகாட்டத் தயங்குவதேயில்லையாம் !

அவன் செம்பொன் திருமேனியையும், ஒளிவீசும் ரத்னுபரணங்களையும். சக்திவேலையும் மெய்ம்மறந்த நிலையில் பார்த்துக் களித்துத் திரும்புகையில், ஒரு அன்பர், "அருணகிரி 'அழகிய சிக்கல் சிங்கார வேலவ' என்று பாடியதுபோல், வெகு அழகான தோற்றம். உற்சவரே இப்படி இருந்தால், மூலவர் எப்படி இருப்பாரோ ?" என்று தஞ்சை முருகனிடம் கூறினார்.

"முருகா ! இங்கே மூலவர், உற்சவர் என்ற பாகுபாடு இல்லை. இப்போது பார்த்த சந்நிதிதான் மூலவர், உற்சவர் எல்லாம்...மற்றக் கோயில்களைப்போல் இங்கு சிங்கார வடி வேலன் சிலைவடிவில் இல்லை...தாய் தந்தையருக்கு மத்தியில் 'தங்க'மான பிள்ளையாகவே இருக்கிறான்" என்று தஞ்சை முருகன் பதில் கூறிக்கொண்டே, சிக்கல் சிவாலயத்தைச் சுற்றிக் காண்பித்து விட்டு அடியார் உடையாரிடம், "அடுத்தது எட்டிக்குடிதானே ?" என்று கேட்டார்.

"இல்லை...மன்னார்குடிக்குச் சென்று என் இல்லக்கோயி லில் இறைவழிபாடு செய்துகொண்டு எட்டிக்குடி செல்ல லாம்" என்றார் அடியார்.

"இல்லக்கோயில் என்றால் புரியவில்லையே ! மன்னார்குடி யில் ராஜகோபாலஸ்வாமி கோயில்தானே விசேஷமானது!" என்ற கேள்விக்கு அடியார் உடையார், பஸ் மன்னார்குடியை நோக்கிச் செல்லும்போது பதில் அளித்தார்.

"கோ - கடவுள் - இல் - இல்லம். இதுதானே விளக்கம் கோயிலுக்கு ! இல்லக்கோயில் என்பதற்கு 'இல்லமாகிய கட வுள் இல்லம்' என்றும் விளக்கம் கூறலாமல்லவா ? பிறந்த மண் என்னும்போது பெருமையடையாத உள்ளம் இருக்க முடியாது. பிரயாணத்தின்போது பிறந்த இடம் குறுக்கிட் டால் எக்காரணத்தைக் கொண்டும், தான் பிறந்த இடத்தை மிதிக்காமல் தாண்டிச் செல்லக்கூடாது என்று ஆன்றோர் வகுத்துக் கடைப்பிடித்த கொள்கை. பிறந்த மண்ணின் தன் மையைப் பொறுத்தே உள்ளமும் உடலும் மனிதனுக்கு

வளர்கின்றன என்று தத்வஞானிகள் கூறுகிறார்கள். பிறந்த மண்ணைப் பற்றி இப்படியெல்லாம் சொல்லியிருப்பதை நாம் அலட்சியம் செய்யலாமா? நான் பிறந்த மண் மன்னார்குடி. அதனால்தான் என் இல்லக்கோயிலில் அடியார் பாதம் பட வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்."

தஞ்சை முருகனுக்கு உடனே சுய ஞாபகமும், அதைத் தொடர்ந்து ஓர் உணர்ச்சியும் ஏற்பட்டன, "அப்படியானால் சீர்காழிக்கடுத்த 'கொண்டலில்' சிறிது நேரம் இருந்து போக வேண்டும். என்னுடைய பிறந்த மண் அதுதான்" என்றார்.

கொண்டல் வண்ணன் சந்நிதியில் பிறந்தவரா நீங்கள்! முப்பது வருஷங்களுக்கு முன்பு ஒரு தைப்பூசத் திருவிழாவின் போது கொண்டல் முருகனைத் தரிசித்தேன்...'விபூதி அபிஷே

மோட்டார்கள், பம்புகள் & மானோபிளாக் செட்டுகள்.
டோட்டலி என்கிலோஸ்டு செட்டுகள்

தயாரிப்பாளர்கள் :

"கார்த்திகேயா பவுண்டரி"

KARTHIKEYA FOUNDRY
COIMBATORE

மத்திய செயலகம் :
4, சீதா நிவாஸ்
பெங்களூர் - 2

தொழிலகம் & செயலகம் :
P. B. No. 1332
புலியகுளம் ரோடு.
பாப்பநாயக்கன் பாளையம்,
கோயமுத்தூர் - 18

கம் என்றால் என்ன, விபூதியை முடியின்மீது கொட்டுவார்களோ' என்ற என் சந்தேகத்திற்கு முதன் முதலில் விளக்கம் தந்தவன் கொண்டல் வண்ணப் பெருமாள்தான்!" என்றார் அடியார் உடையார்.

அடியார் உடையார் இல்லத்தில் சற்று நேரம் இளைப்பாறிவிட்டு, எட்டிக்குடிக்குப் பிரயாணமானோம். எட்டிக்குடி, எண்கண் இரண்டும் முருகனடியாரின் இரு கண்களாகத் திகழ்கின்றன! 'சோறுடைத்து' என்ற சோழவளநாட்டில் தஞ்சை மாவட்டம் ஒரு நெற்களஞ்சியம். எட்டிக்குடியை நாங்கள் பிரயாசையுடன்தான் போயடைந்தோம். அந்தப் பிரும்மாண்டமான பஸ்ஸை, வளைந்து செல்லும் மிகக் குறுகலான வயல், வரப்புச் சாலையில் ஓட்டிய பஸ் டிரைவருக்கு ஒரு "பத்மஸ்ரீ"யாவது கொடுக்கலாம். ஏனெனில், எட்டிக்குடி ஆலயத்துக்கு முன்பு உள்ள திருக்குளத்தினருகில் பஸ்ஸை நிறுத்தி எங்களை நல்லபடியாக இறக்கிவிட்ட பிறகு கூட, டிரைவருக்கு அவருடைய சாரத்தியத் திறனில் நம்பிக்கையில்லை. எல்லோருக்கும் முன்பு கோயிலுக்குள் ஓடினார். ஆறுமுகப் பெருமானின் அடிகளில் விழுந்து வணங்கி, திருநீற்றைப் பூசிக்கொண்டு திரும்பியவரை, "இதுவரை ஒரு கோயிலுக்கும் கூப்பிட்டால்கூட வராதவர் இங்கு மட்டும் எங்களுக்கு முன்பு ஓடி தரிசனம் செய்துவிட்டு வருகிறீர்களே! என்ன விசேஷம்?" என்று கேட்டேன்.

"ஹி-ஹி-ஹி-ஒன்றுமில்லை! முப்பது வருஷமாக எந்தெந்த வண்டியெல்லாமோ எடுத்துக்கிட்டு எங்கெங்கெல்லாமோ ஓட்டியிருக்கேனுங்க...இந்தமாதிரி ஒரு 'ரோடு டெஸ்ட்' பார்த்ததில்லை. அதுக்காவத்தான் ஆண்டவனிடம் 'நல்லபடியா அழைச்சு வந்தே! நல்லபடியா திருப்பிக் கொண்டு சேத்திடு' என்று வேண்டிக்கிட்டு வந்தேன்", என்றார்,

சொல்லார் சுருதிப் பிரணவ நீ!
துயர்கால் உயிர்கட்(கு) அருளிறை நீ!

இல்லார்குறை கண்(டு) ஈ இறை நீ!
எளியேன் உள்நோய் இறுமாறு,
வல்லார் அருளைத் தாராயோ?
வையம் அதனில் என்போன்ற
கல்லார் போல்வார் எல்லார்க்கும்
கதி தந்தருளும் ஒரு தேவே!

என்ற பாடலைப் பாடிக்கொண்டு அப்போது அன்பர் ஒருவர் முன்னால் செல்ல, எங்கள் கோஷ்டி கோயிலுக்குள் சென்றது. நானும் கலந்துகொண்டு கம்பீரமான சிலைவடிவில் மயில் வாகனனாகவும், ஆறுமுகனாகவும், தேவியரோடு வீற்றிருக்கும் தேவாதிதேவன், ஓங்காரப் பொருளோன், சரவண பவன், எனையாளும் ஈசனைக் கண்ணாரக் கண்டேன்.

கட்டிச்சூடத்தை வைத்து கற்பூர ஹாரத்தி செய்த பட்டர், "நன்றாய்க் கவனியுங்கள். இந்தச் சிலை உலக மகா

---


# ரமணீஸ்

# பேபி கிரைப்

குழந்தைகளுக்கு உண்டாகும் வாய்வு, வயிற்றுப் பொருமல், வயிற்றுவலி, அஜீரணம், மாந்தம் முதலிய சகல வியாதிகளையும் போக்கி ஆரோக்கியத்தை கொடுக்கும்.

★

தயாரிப்பாளர்கள்

தி சௌத் இந்தியா மான்யுபாக்சரிங் கம்பெனி

**மதுரை.**

அதிசயங்களில் ஒன்ருகச் சேர்க்கப்பட வேண்டியதாகும், மயிலின் இருமெல்லிய கால்களின் பலத்தை மட்டுமே ஆதாரமாக வைத்து சிற்பி செதுக்கியிருக்கும் அமர சிற்பம். ஒவ்வொரு விரலும் தனித்தனியே மோதிரம் போடும்படி இருக்கிற அழகைப் பாருங்கள் !" என்ருர்.

அடுத்து எண்கண்ணில் ஏழெட்டு நிமிஷங்களே இருந்தோம். எட்டிக்குடி பரமன் அப்படியே இருந்தான் அங்கேயும். ஒரே சிற்பி செதுக்கிய விக்ரஹம்.

திருவேரகம் என்ற திவ்யமான பேரோடு அறுபடை வீடுகளில் ஒன்ருக அடியார் எண்ணத்தில் வேரூன்றியிருக்கும் சுவாமிமலையை நோக்கிப் போய்க் கொண்டிருந்தபோது, திடீரென்று தஞ்சை முருகன், " இந்தாப்பா டிரைவர்! ஒரு நிமிஷம் அந்தக் கோபுரத்தினருகில் நிறுத்து !" என்ருர்.

" சுவாமிமலை என்றதும், ஏதோ மலைக்கோயில் என்று தஞ்சை முருகனிடம் ஓர் அன்பர் கேட்டதற்கு நான் பதில் சொல்ல வேண்டியதாகி விட்டது. ஏனெனில், வண்டி அப்போது கோபுரத்தின் அருகில் நின்றது. பக்தர்களும் இறங்க ஆரம்பிக்கவே, தஞ்சை முருகன் முன்ஞல் ஓடி இறங்கி விட்டார்.

" முருகா ! தஞ்சை ஜில்லாவில் மலை என்பது மருந்துக்குக்கூட கிடையாது. மாடிப்படித்தான் இங்கே மலை ! சுவாமிமலையில் ஒரு இரண்டு மாடிக் கோயில் கட்டி அதில் முருகனைப் பிரதிஷ்டை செய்திருக்கிருர்கள் " என்று சொல்லிக் கொண்டே இறங்கிச் சென்றேன். அப்போது மற்றவர்களுக்கு அந்தக் கோபுரத்தின் பின்ஞல் பெரிய அளவில் வியாபித்திருந்த புராதன ஆலயத்தைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தார் தஞ்சை முருகன்.

திருவலஞ்சுழி என்பது அந்தக் கிராமத்தின் பெயர். கோயிலில் சுவேத (வெள்ளை) விநாயகர் பிரதான சந்நிதி கொண்டிருக்கிருர். ஒரு பலகணி வழியாக பிரசித்தி பெற்ற மூர்த்தியைத் தரிசித்துவிட்டு சுவாமிமலைக்குச் சென்ருேம்.

பக்தர்கள் மலையைத் தேடிக்கொண்டு பொழுதை வீணடித்துவிடப் போகிறார்களே என்ற பயத்தில் அடியார் உடையார், சுவாமிமலையான் தன்மையைக் கோஷ்டிக்கு கோயில் வாசலிலேயே கூறிவிட்டு முன்னால் சென்றார்.

படியேறிச்சென்று, 'பரமனுக்கு உபதேசம் செய்த' தகப்பன் சுவாமியைத் தரிசித்தோம். அஞ்ஞானம் என்னும் இருளைப் போக்கக்கூடியவன் அவன் ஒருவனேதான் என்பதில் ஐயமேயில்லை என்பதை எடுத்துக்காட்டிக் கொண்டிருந்தது அவன் திருக்கோலம் :

" ஞான வடிவாகி, முதுஞான விதையாகும்நன்னுதலின்
முலையமுதுக்(கு) இன் குழவியாகி
ஞான மெனும் பாற்கடலின் நடுச் சுழியதாகி
ஞான நிழலாம் பெரியர் நல் இடமும் ஆகி
ஞான நிறை கதிராகி ஞானியர்க்கும் எட்டா
ஞான இரு சக்தியுடன் இருந்து எவையும் காத்து
ஞானமொடு வட நிழலின் இருப்பார்க்கும் விருப்பாம்
ஞானவுரை விரித்த குருநாதனடி போற்றி "

......என அடியார் உடையாரும் தஞ்சை முருகனும் இழைந்து பாடியபோது ஞானபண்டிதன் மனக் கண்ணில் பூரணமாகத் தோன்றினான்.

" சுவாமி மலையிலும், மற்றும் நாம் பார்த்த தலங்களிலும் செந்திலாதிபன் சந்நிதியில் பூஜை நடத்துவதுபோல நடத்தினால் நன்றாக இருக்கும்" என்று நாங்கள் "புள்ளிருக்கு வேளூரை" (வைத்தீச்வரன் கோயில்) நோக்கி ஓடிக்கொண்டிருந்தபோது, ஒரு அன்பர் என்னிடம் தெரிவித்தார்.

"புறவழிபாடு எவ்வாறு இருந்தால் என்ன? எல்லாம் ஒன்றுதான். அகவழிபாட்டில்தான் நாம் அவனை உணர முடியும். புற வழிபாடு பலவிதம். அவரவர்க்கு, அந்தந்தக் காலத்தில் தோன்றியபடி நிர்ணயம் செய்திருக்கிறார்கள். ஆண்டிதானே! ஆளுக்குத் தகுந்தாற்போல் வேஷம் போடுகிறான். இன்னும் சிறிது நேரத்தில் வைத்தீச்வரன் கோயிலில்

செல்வமுத்துக் குமரனை தரிசிக்கப் போகிறீர்கள்! அங்கே ஆகம விதிகளின்படியே பூஜை நடக்கிறது என்றாலும் ஆகம விதிகளுக்கு ஆலய நிர்வாகிகள் கூறும் விளக்கம் அவ்வப் போது வேறுபடுகிறது!''

''மெய்யான பேச்சு! வைத்தீச்வரன் கோவிலில் எந்த சந்நிதி விசேஷம்! வைத்தியநாதனா? வாலாம்பிகையா? செல்வமுத்துக்குமரனா?''

''மூன்றும் விசேஷம்தான். ஆனால், செல்வமுத்துக் குமரனுக்குத் தனி யோகம். அவனை அப்பாவும் அம்மாவும் செல்வமாக வளர்ப்பதோடு, தருமை ஆதீனகர்த்தர்களும் தனிச்சலுகை காட்டிப் போற்றுகிறார்கள். பட்டத்து இள வரசன் பாணியில்தான் பரமன் மகன் அங்கே காட்சி தரு கிறான்...!''

வைத்தீச்வரன் கோயிலை நாங்கள் அடைந்து மாபெரும் அந்த ஆலயம் பூராவும் சுற்றிவந்து பிரதான மூர்த்திகளை யெல்லாம் தரிசித்துவிட்டுத் திரும்பும்போது பஸ்ஸில் என்னோடு உரையாடிய அன்பர், '' நாம் பார்த்துக் கொண்டு வந்த ஆலயங்களுக்கும், இதற்கும் உண்மையி லேயே வித்தியாசம் இருக்கிறது. கட்டுப்பாடும், கண்ணிய மும், காரிய நோக்கும் சிப்பந்திகளிடையே ஒரே மாதிரியாக இருப்பதை இங்குதான் பார்க்க முடிந்தது. செல்வமுத்துக் குமரனும் நீங்கள் கூறியதைப் போலவேதான் இருக்கிறான். சிக்கல் சிங்காரவேலனுக்கும் முத்துக்குமரனுக்கும் அதிக வித்தியாசம் இல்லை!'' என்றார்.

''இரண்டும் ஒரே சிற்பி ஒரே காலத்தில் வார்த்துச் செய்த உருவமாயிருக்கலாம். இங்கேயும் மூலவரும் உற்சவ ரும் ஒன்றேதான், அதைக் கவனித்தீர்களா?''

''கவனித்தேன். இன்று இரவு அர்த்தஜாமத்திற்குள் தில்லையம்பதியில் நாம் இருக்க வேண்டுமாம். அப்போதி லிருந்து நான் 'சார்ஜ்' எடுத்துக் கொள்ளப் போகிறேன்.

வட ஆற்காடு தென் ஆற்காடு இரண்டுக்கும் நான்தான் என்று அடியார் உடையார் சொல்லியிருக்கிறார். ஆகை யால்'' என்று ஆரம்பித்த ஆற்காடு முருகனிடம்...'' ஆகை யால் நான் என் கைங்கரியத்தை நீடித்துச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறீர்கள். அவ்வளவுதானே?'' என்று கேட்டுவிட்டுச் சிரித்தேன். அவரும் பணிவோடு சிரித்தார்.

வண்டி புறப்பட்டு வடக்கு திசையில் சிறிது நேரம் ஓடி யது. ஒரு ஆற்றுப் பாலத்தைத் தாண்டியதும் '' வண்டி நிற்கட்டும்...'' என்றார் தஞ்சை முருகன். நின்றதும், ''என் னோடு இறங்கி வாருங்கள்—காழிவாழ் கதிர்காம சுவாமி களின் சமாதியைத் தரிசித்துவிட்டுப் போகலாம்...'' என்று கூறியவண்ணம் இறங்கி, சாலையை அடுத்து ஆற்றின் கரையி லிருந்த கட்டிடத்திற்குள் சென்றார். சமாதியை மூன்று முறை வலம் வந்து முன்னால் விழுந்து வணங்கி எழுந்தவர், உணர்ச்சி மேலீட்டால் செய்த நீண்ட பிரசங்கத்தைச் சுருக்க மாகச் சொல்கிறேன்.

''முருகன் அறுபடை வீடுகளில் கதிர்காம க்ஷேத்திரமும் ஒன்று. கதிர்காமம் இலங்கையில் ஒளி வீசிக்கொண்டிருக்கும் ஒரு சிற்றூர். எல்லோரும் அங்கு சென்று வருவது சாத்திய மில்லாததால் அதை உருவகப்படுத்திப் பார்க்காத முருக பக்தர் இருக்கமுடியாது. எட்டாத பொருளை அடைய விழைவது மனித சுபாவம். கதிர்காம முருகன் பலருக்குக் கிட்டாத எட்டாத கொம்பனாகவே இருக்கிறான்.அதனாலேயே பக்தர் மனம் அவனிடம் அதிகமாக லயித்துக்கொண்டிருக் கிறது.

''இந்த நிலையில் காழியில் கதிர்காமத்தைத் தோற்று வித்தார் ஒரு பெரியவர். நூறு வயதுக்கு மேல் வாழ்ந்து அறுபது வருஷங்கள் நீடித்து ஆறுமுக சேவை செய்த அந்தத் துறவியை, சீர்காழிவாசிகள் அன்போடும், பக்தியோடும், பரி வோடும் 'கதிர்காம சுவாமிகள்' என்று போற்றிப் பாராட்டி வந்தனர். அவர் யார், எந்த ஊர், என்ன வயது என்று விவரங்கள் அறிந்த இரண்டொருவர் கூறும் வரலாறுகளி

லிருந்து எழுபது வருடங்களுக்கு முன்பு அவர் வடநாட்டி லிருந்து பால்யத்திலேயே துறவு பூண்டு, மெய்ஞ்ஞான வேட் டையில் பல வருஷங்கள் தவமியற்றிப் பல இடங்களைச் சுற்றியலைந்து, கடைசியில் காழியம்பதியை அடைந்து தங்கிய தாகத் தெரிகிறது. ஞான சித்தியடைந்த நிலையில் ஊர்தேடி வந்து அங்கேயே தங்கியிருக்கத் திருவுளம் கொண்ட பெரிய வரை ஊர்வாசிகள் ஒருமிக்க ஆசிரயித்து கந்தன்பால் அவர் கொண்டிருந்த அளவு கடந்த பக்தியின் அடையாளமாக அவருக்குக் "கந்தசாமி" என்றும் "கதிர்காம சுவாமி" என்றும் பெயர் சூட்டி வழிபட்டார்கள். வெகு காலமாகத் தமிழ் பேசவும், எழுதவும், படிக்கவும் கற்றுக்கொண்டிருந்த சுவாமி கள், அந்தக் காலத்திலிருந்தே, குஞ்சு குழந்தை முதல் தொண்டு கிழவர்வரை எல்லோர் மனத்திலும் "கதிர்காம சுவாமி" யாகத் திகழ்ந்தார்.

"நாளடைவில் சுவாமிகள் தங்கியிருந்த ஸ்தலத்தில் ஆசிரமமும், மடமும் தோன்றி, அங்கே ஒரு தண்டபாணியும் கோயில் கொண்டான். நாலைந்து வருஷங்களுக்கு முன்பு தான் அவர் முக்தியடைந்தார். இன்றும் அவர் தோற்று வித்த மடமும், பிரதிஷ்டை செய்த தண்டபாணியும், அவரு டைய புனித சமாதியும் சீர்காழியில் "கதிர்காமமாகத்" திகழ்கின்றன."

சமீப காலத்தில் தோன்றிய காழி–கதிர்காம அதிசயத் தைப் பார்த்துக்கொண்டு, தஞ்சை முருகனுடைய பிறந்த மண்ணில்-கொண்டல் வண்ணன் கோயிலில்-குமரனைத் தரிசித்தோம். தன் பெருமையை உணராத சிறு கிராமம். பஸ் கோயில் வாசலை யடைந்தபோது கோயில் சாத்தப் பட்டிருந்ததைக் கண்டோம், ஆனால். கோயில் நிர்வாகி ஓடோடியும் வந்து கோயிலைத் திறந்து தீபத்தைத் தூண்டி விட்டு, உள்ளொளி புறவொளி இரண்டுக்கும் காரணமான வனின் திருமுகத்தில் தீபஒளி வீசச் செய்தார். "இப்படி அடி யார் கூட்டம் இத்தலத்தை நாடி வருவது உண்டு. அந்த

கேஸ்ளை எப்படிப்பட்டதாக இருந்தாலும் சரி, நான் ஓடி வந்து எங்கள் முருகனை அவர்களுக்குக் காட்டிவிடுவேன்!" என்றார் உற்சாகத்தோடு.

"அடுத்தது திருமயிலாடியில் தரிசனம் செய்ததும், தஞ்சை முருகன் அடியார் உடையாரிடம் பொறுப்பைத் திரும்பக் கொடுத்துவிட்டு என்னிடம் வந்து, "ஆமாம், எனக்கு ஒரு சந்தேகம்! உங்களுக்கு எந்த ஊர்; எல்லா 'மாவட்ட முருகன்'களோடும் சேர்ந்துவிடுகிறீர்கள்—புரிய மாட்டேன் என்கிறதே!" என்றார்.


# அமிர்தாஞ்சனம்

விரைவில் குணமளிக்கிறது!




Amrutanjan Limited
Luz Church Road
*MADRAS-4.*

அமிர்தாஞ்சனம் தலைவலி, ஜலதோஷம், சுளுக்கு, தசைவலி இவற்றிலிருந்து விரைவில் குணமளிக்கிறது. உபாதை ஏற்பட்டுள்ள இடத்தில் சிறிதளவு அமிர்தாஞ்சனம் தடவி துரித நிவாரணம் பெறுங்கள். 75 வருடங்களாக குடும்பங்களில் பயன்பட்டு வரும் நம்பகமான நிவாரணி அமிர்தாஞ்சனம். எப்போதும் ஒரு பாட்டில் கைவசம் இருக்கட்டும். சிக்கனமான ஜாடிகளிலும், கைக்கு அடக்கமான டப்பாக்களிலும் கிடைக்கிறது.

10 மருந்து பொருள்கள் ஒருங்கே சேர்ந்த அமிர்தாஞ்சனம் வலிகளுக்கும் ஜலதோஷத்திற்கும் ஏற்ற நிவாரணி

நான் சிரித்துக்கொண்டே, "இனிமேல் என் ஊர் ஆற்காடு மாவட்டம்! வைத்தீச்வரன் கோயிலிலேயே ஒப்பந்தம் ஆகிவிட்டது..." என்று வேடிக்கையாகச் சொல்லி விட்டு, "என் ஊர் எது என்று ஆராய்ச்சி செய்வதில் பொழுதைச் செலவிடாதீர்கள். என் ஊர் 'முருகன் மாவட்ட'த்தில் இருக்கிறது என்று நினைத்துக் கொள்ளுங் கள்" என்றேன்.

* * *

"உலகெலா முணர்ந்(து) ஓதற்கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்"

என்று பாடிக்கொண்டே அம்பலத்தரசனுடைய தங்க மாளி கையில் பக்திப் பரவசத்தோடு பிரவேசித்தோம்.

---

சுவாமிமலை:—கும்பகோணம் ரயில் நிலையத்தில் பஸ்ஸில் செல்ல வேண்டும். தந்தைக்கு உபதேசித்த வள்ளல் 60 படிகள் கொண்ட மாடிமேல் ஆனந்தமாக நின்றருளுகிறான். படை வீடுகளில் ஒன்று.

எட்டிக்குடி;—திருத்துறைப்பூண்டியில் இறங்கி, நாகப்பட்டி னத்திற்குச் செல்லும் சாலையில் 10-வது மைலில் 'சீராவட்டம்' பாலத்தடியில் இறங்கி வடக்கே செல் லும் சாலையில் 3 மைலில் (திருவாய்மூர் தலத்திற்கு 1 மைலில்) அமைந்துள்ளது, சத்திரங்கள் உண்டு. கோயிலுக்கு எதிரே அழகான தடாகம். அமைதியான கிராமம். ஆறுமுகத்தோடு மயில்மேல் அமர்ந்த அழகிய மூர்த்தம். சித்திரா பௌர்ணமி மிக விசேஷமான தினம்.

சிக்கல்:—சிங்காரவேலவனும் எட்டிக்குடியோன் உள்ள அதே திருத்துறை பூண்டி — நாகை சாலையிலேயே கோயில் கொண்டருளுகிறான். உற்சவமூர்த்தி. தந்தை (வெண்ணெய்லிங்கம்) நவநீதேச்வரர் கோயில் என்று லும் தனயனுக்கே பிராதான்யம் அதிகம். "அழகிய சிக்கல் சிங்கார வேலவ" என்று அருணகிரி அழைத்தது

'போல் அழகொழுக அருள்பாலிக்கிறன். ஸ்கந்த ஷஷ்டி யில் வேல் வாங்கும் காட்சி விமரிசையாக இருக்கும். சுவாமிக்கு வியர்த்துவிடும் என்பார்கள்.

ண்கண்:—திருத்துறைப்பூண்டி — நாகை சாலையிலேயே மேலும் மேற்கே சென்றல் 'எண்கண்' வேலவனைத் தரிசிக்கலாம். ஒரே சாலையில் மூன்று கோயில்களும் காலை, மதியம், மாலை தரிசனம் செய்யும்படி அமைந் துள்ளது.

ைவத்தீச்வரன்கோயில்;—ரயில்வே ஸ்டேஷன் உள்ளது. அங்காரக க்ஷேத்திரம் என்று சொல்லப்படுகிறது. முத்துக்குமரன் சிக்கல் சிங்காரனைப் போலவே இருக் கிறன்.

*With the best compilments From* Phone : **86840**

# M. Arunachalam & Co.,

**34, LLOYDS ROAD.**

M. NARAYANASWAMY & Co.,

&

A. MAHADEVAN & Co.

Engineers & Contractors

★

34, Lloyds Road : : 172, Lloyds Road

**Royapettah, Madras-14**

# ஆற்காடு முருகன்

ஆற்காடு முருகன் பொறுப்பேற்றுக்கொண்டார். அப்போது சிவகாமி மணாளனுக்கு அர்த்தஜாம தீபாராதனை நடந்து கொண்டிருந்தது. மணிகளின் ஓசை ஒன்றே போதும் மனச்சாந்தியளிக்க.

'ஐந்து பேரறிவும் கண்களே கொள்ளும்' காட்சியில் உணர்ச்சி வசப்பட்டு "சிவகாமி மணாளா! என்றும் எங்களுக்கு இந்த பாக்கியத்தை அளித்தால் போதும்" என்று மனமுருக வேண்டிக்கொண்டோம்.

பிராகாரம் பிரதக்ஷிணம் வரக் கிளம்பியவுடன், "இங்கே ஏதோ தூணில் தண்டபாணி இருக்கிறதாமே!" என்றார் ஒரு பக்தர்.

"தூணிலும் இருப்பான், துரும்பிலும் இருப்பான் என்பது பொய்யாகாமல் இங்கு தூணில் தோன்றி வளர்ந்து கொண்டே வருகிறான்" என்றார் ஆற்காடு முருகன். அந்த அதிசய ஆண்டி முருகனை அனைவரும் காண ஆசைப்பட்டு, முதலில் அங்கு சென்றது எங்கள் கோஷ்டி.

"இங்கேயும் எல்லா பூஜையும் நடக்கிறதா?"

"தூணில் இருந்தால் பூஜை செய்யத் தடை இல்லை. சகல விசேஷங்களும் அழகாக நடைபெறுகின்றன" என்றார் ஆற்காடு முருகன்.

அங்கிருந்து புறப்பட்டு அருணகிரி பாடிய ஆறுமுகனை வெளிப் பிராகாரத்தில் வடமேற்கு சந்நிதியில் தரிசனம் செய்து கொண்டு புறப்பட்டோம்.

மனத்திலே ஆழமாய் மங்கை சிவகாமியும், மயில்வாகண தண்டபாணியும் விழுந்து விட்டது அடியார் உடையாருக்கு. அவர் மெல்லிய குரலில்,

கனகசபை மேவு எனது குருநாத
கருணை முருகேசப் பெருமாள் காண்
கனக நிறவேதன் அபயமிட வோது
கர கமல ஜோதிப் பெருமாள் காண்
வினவு மடியாரை மருவி விளையாடு
விரகு ரச மோகப் பெருமாள் காண்
விதி முனிவர் தேவர் அருணகிரி நாதர்
விமல சுரர் ஜோதிப் பெருமாள் காண்
சனகி மணவாளன் மருகனென வீறு
சகமகிழ் குமாரப் பெருமாள் காண்
சரண சிவகாமி யிரணகுல காரி
தருமுருக நாமப் பெருமாள் காண்
எனது மனமேவு அமுத குறமாதொ
டியல் பரவு காதற் பெருமாள் காண்
இணையிலப தோகை மதியின் மகளோடு
இயல் புலியூர் வாழ்பொற் பெருமாளே.

எனப் பாடிக்கொண்டே வண்டியில் ஏறினார்.

இரவு முகாமை விழுப்புரத்தில் போட்டோம். காலையில் மயிலம் போவதாக இருந்த திட்டத்தை ஆற்காடு முருகன் மாற்றி விட்டார். வளவனூர் அருகே இருந்த "குமார குப்பம்" என்ற முருகன் கோயிலைப் பார்க்கச் சென்றோம். அங்கிருந்து திரும்பும்போது அடியார் உடையார் என்னிடம், "விழுப்புரத்தில் நாம் பார்க்க வேண்டிய பெரிய தலம் திருவாமாத்தூர் அல்லவா? அங்கு 'வண்ணச் சரபம் தண்டபாணி' ஸ்வாமிகளின் சமாதி யிருக்கிறதே! அங்கேயும் போகவேண்டும்" என்றார்.

விழுப்புரம் வந்து, அங்கிருந்து திருவாமாத்தூர் கோயிலையும், சமாதியையும் தரிசனம் செய்துகொண்டோம். வழியில் "இவர் நிறையத் திருப்புகழ் பாடியிருக்கிறார்" என்றார் ஒரு பக்தர்.

"ஆமாம்; சிறந்த அனுபூதிமானாகத் திகழ்ந்து தமிழுக்கும் தமிழ்க் கடவுளுக்கும் தொண்டு புரிந்திருக்கிறார்" என்றார் அடியார் உடையார். பேசிக்கொண்டே சென்றதில் மயிலம் சீக்கிரம் வந்துவிட்டதுபோல் இருந்தது.

"மயிலம், மயூராசலம் என்பதற்கு ஏதோ காரணம் இருக்கிறாப்போலிருக்கிறதே!" என்றார் அடியார் உடையார்.

"சூரபதுமனது ஆணவம் அழித்து கூறாக்கிய பிறகு அவன் முருகனிடம் வரம் வேண்டினான். தன்னை வாகனமாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று. இறைவன் 'நீ சில காலம் வராகநதிக்கு வடகரையிலுள்ள புண்ணிய நிலத்தில் மயில் வடிவம் கொண்ட மலைக்குன்றாக இருந்து தவம் செய்' என உரைத்தானாம். அதன்படி சூரன் மயில் போன்ற உருக்கொண்ட மலையாக இங்கு இருந்து முருகன் அருளைப் பெற்றிருக்கிறான். இதனை மயூராசலம், மயிலம் என்றும், சிலர் ஓங்கார வடிவமான மலை என்றும் கூறுகிறார்கள்" என்று விளக்கம் கூறினார் ஆற்காடு முருகன்.

கோயிலுக்குள் போனபோது பால் அபிஷேகம் நடந்து கொண்டிருந்தது. முருகனடியார் ஒருவர்.

"உறுதண்ட பாசமொ டாரா வாரா
எனையண்டி யேநம னார்தூதானோர்
உயிர்கொண்டு போய்விடும் நாள் நீமீதா
அருள்வாயே
மதி மிஞ்சு போதக வேலா ஆண
மகிழ் சம்பு வேதொழு பாதா நாதா
மயிலந் தண மாமலை வாழ்வே வானோர்
பெருமானே

என்று இனிய இசைகூட்டி மகிழ்ந்து பிறரையும் மகிழ்வித்தார்,

மலையிலிருந்து இறங்கி, வண்டியைத் திருவண்ணாமலைக்கு விடச் சொன்னார் அடியார் உடையார்.

"தொழுப்பேடு இங்கிருந்து கொஞ்ச தூரந்தான். ஆனாலும் செங்கற்பட்டு முருகனுக்கு அந்தப் பொறுப்பை பிறகு கொடுக்கிறேன். ஏனெனில், கோயிலை இப்போது மூடியிருப்பார்கள்" என்றார் ஆற்காடு முருகன்.

திருவண்ணாமலை சென்றபோது மாலை நேரம். கம்பத்திளையனாரையும், அண்ணாமலையானுடன் உண்ணாமுலை நாயகியையும் தரிசனம் செய்துகொண்டு திரும்பினோம்.

"ரமணாசிரமம் போய் வரலாம்" என்றார் அடியார் உடையார்.

"அவசியம் போகவேண்டும்! நம் நாட்டில் நமக்குத் தெரிந்து சில வருஷங்களுக்கு முன்வரை வாழ்ந்த மஹான்கள் சேஷாத்ரி சுவாமிகளும், ரமணமஹரிஷியும். அவர்களால் நம் பழம்பெரு முனிவர், ரிஷிகளை நாம் மறக்காமல் இருக்க வாய்ப்பு கிடைத்தது" என்றார் ஆற்காடு முருகன்.

அமைதியே உருவான ஆசிரமத்தில் ஐந்து நிமிஷங்கள் இருந்தால்கூட அன்னார் சூட்சுமமாக இன்றும் இருப்பது புலப்படுகிறது.

உயர்தர

ரொட்டி பன்



கேக் பிஸ்கட்

ரமணா & கோ
பேக்கரி

தெப்பக்குளம், திருச்சி-2

அங்கிருந்து பஸ் போளூர் வழியாக எலத்தூர் அடைந்தது. "எலத்தூர் என்ற ஒரு தலம் இருப்பதே எனக்குத் தெரியாது" என்றார் ஒருவர்.

"நம்மில் பலருக்கு இப்படிச் சில க்ஷேத்திரங்கள் தெரியாமல் இருந்து விடுகிறது" என்றேன்.

இது ஒரு சுயம்பு க்ஷேத்திரம். ஸ்வாமி ஸ்வப்பனத்தில் வந்து தனக்குக் கோயில் கட்டச் சொல்லியிருக்கிறார். ஊர் சற்று தள்ளியிருக்கிறது. அதன்படியே கோயில்கட்டி பூஜைகள் கிராமத்தார் பொறுப்பிலேயே இன்றும் நடக்கிறது" என்றார் ஆற்காடு முருகன்.

"உற்சவம் நடத்துகிறார்களா?"

"சென்னையிலிருக்கும் இந்த ஊர் புண்ணியவான் ஒருவர் சிரத்தையாக எல்லா ஏற்பாடுகளிலும் கலந்துகொள்கிறார். பங்குனி உத்திரத்தைச் சிறப்பாகச் செய்கிறார். அவரால்தான் இந்தக் கோயிலே எனக்குத் தெரியும்" என்றார் ஆற்காடு முருகன்.

"இதை நக்ஷத்திரக் கோயில் என்றும் சொல்கிறார்களாமே!" என்றார் அன்பர்.

"ஆமாம். காரணம் தெரியாது. முருகனுக்குச் சந்திரன் போல் படைவீடுகள் இருந்தாலும் நக்ஷத்திரம்போல் இருக்கிறது இது என்று வேண்டுமானால் காரணம் கூறலாம்" என்றார் ஆற்காடு முருகன்.

"அருமையான கோயில்: என்ன காற்று வீசுகிறது!" என்றார் அடியார் உடையார்.

"சூழ்நிலையைப் பாருங்கள் தவத்திற்கேற்ற அமைதி. கிராமத்தின் செழிப்பு, தவழ்ந்து ஓடும் ஆறு. இதுவரை தெரியாது போய்விட்டது. இன்றாவது பாக்கியம்கிடைத்ததே!" என்றார் அடியார் ஒருவர்.

"அடுத்தது வள்ளிமலைதானே?" என்றார் அடியார் உடையார்.

"ஆமாம் ஆனால் திருவலத்தில் தான் இரவு முகாம். காலையில் ஆற்றில் ஸ்நானம், கோயில் தரிசனம்! பிறகுதான் வள்ளிமலைப் பிரயாணம்" என்றார் ஆற்காடு முருகன்.

அதன்படி இரவு முகாமும், மறுநாள் காலை திருவலம் கோயில் தரிசனமும் செய்துகொண்டு வள்ளிமலையை அடைந்தோம்.

"இங்கிருந்துதான் வள்ளியைத் திருத்தணிக்கு எடுத்துச் சென்றதாகச் சொல்லுகிறார்கள், இல்லையா? இன்னும் சுரங்கம் இருக்கிறது. அது திருத்தணி போவதாகக் கூறுகிறார்கள்" என்றார் ஆற்காடு முருகன்.

"மலையைக் குடைந்து கோயில் இல்லையா?"

"ஆமாம். எல்லாம் குகைதான். இங்கு யாரோ ஸ்வாமிகள் சமாதியிருக்கிறதாமே?" என்றார் அன்பர்.

"அதைப் பார்க்கக் கோயிலுக்கும் மேலே ஒற்றையடிப் பாதையிருக்கிறது: அதன் வழியாகப் போகவேண்டும். முருகனைத் தரிசனம் செய்துகொண்டு பிறகு போகலாம், வாருங்கள்" என்றார் ஆற்காடு முருகன். வள்ளி மணாளனுக்கு கற்பூர தீபாராதனை முடிந்ததும் 'வள்ளிமலை ஸ்வாமிகள்' சமாதியைப் பார்க்கச் சென்றோம். அழகான இடம். அங்கே பசுக்கள், கன்றுகள் எல்லாம் எங்களை வரவேற்றன.

"இவர் இங்கு தவம் செய்து இருந்தாரா?" என்றார் ஒருவர்.

"அவர்தான் திருப்புகழுக்கு ராகம் முதலியன போட்டு பாடிக் காட்டியவர், திருப்புகழை நம் சிற்றறிவிற்கு எட்டச் செய்தவர்" என்றார் ஆற்காடு முருகன்.

கூடவந்த சாமியார், தனக்கு உணவாக வைத்திருக்கும் வேர்க்கடலையை எல்லோருக்கும் கொஞ்சம் கொடுத்தார்.

பிறகு அங்கிருந்து கிளம்பி நேரே காஞ்சிபுரத்திற்கு பஸ் புறப்பட்டது.

---

மயிலம் ;—சென்னை — விழுப்புரம் ரயில் வழியில் மயிலம் ஸ்டேஷன் உள்ளது. ஸ்டேஷனிலிருந்து சுமார் 2மைல் தூரத்தில் கிராமம். சிறு குன்றின்மேல் மயில்வண்ணன், மங்கையரோடு காட்சி. பெரிய திருவுரு. (விழுப்புரத்தி லிருந்து திருவாமாத்தூர் தலம் 5 மைலில் உள்ளது. அங்கு வண்ணச்சரபம் தண்டபாணி ஸ்வாமிகள் (முருக தாசர்) சமாதியும் உள்ளது).

எலத்தூர் ;—வட ஆற்காடு போளூரிலிருந்து எலத்தூரை அடையலாம். மலைக்கோயில். நட்சத்திரக்கோவில் என் றும் கூறுகின்றனர்.

அருணாசலம் ;—ஞானத் தபோதனரை வாவென்று அழைக் கும் அண்ணாமலை. ஜோதிமலை ரமணீயமாக அமைந் துள்ளது. முருகன் அருள் பெற்ற அருணகிரி, ப்ரபுட தேவராஜன் காணும்படி வரவழைத்த கம்பத்திளையனார் கோயிலும் காணக் காணத் தெவிட்டாதவை.

வள்ளிமலை ;—வட ஆற்காடு ஜில்லா திருவலம் ரயில் நிலையத் திலிருந்தும், வேலூரிலிருந்தும் பஸ் மார்க்கமாக இந்த மலைக்கோயிலை அடையலாம். தங்க வசதிகள் இல்லை. மலையின்மேல் குகைகளும் சுனைகளும் உள்ளன. திருப் புகழை எல்லோரும் பாட, தொண்டுசெய்த "வள்ளிமலை ஸ்வாமிகள்" சமாதி கோயிலைத் தாண்டி மலைமேல் உள்ளது.

# S. P. MITRA & CO

Distributors of Pharmaceutical

**BOTTLES**

of

all

**VARIETY & SIZE**

40, LUZ CHURCH ROAD,

MYLAPORE : : MADRAS-4

# சென்னை முருகன்

சென்னை–செங்கற்பட்டு இரண்டையும் சுற்றிக்காட்டும் பொறுப்பு ஒரே அன்பரிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர் எங்களை முதலில் நேரே குமரகோட்டம்-காஞ்சீபுரம்-அழைத்துச் சென்றார்.

"அன்னையை வணங்கித்தானே பிள்ளையிடம் செல்ல வேண்டும்? இங்கு அவள் உலக நாயகியாக ஆட்சி செலுத்துகிறாளே!" என்றேன்.

"ஆமாம். ஆனாலும் அன்னையுடனேதான் கந்தன் இருக்கிறான். இவன் கோயிலுக்கு வந்து இப்படியே அன்னை கோயிலுக்குப் போகலாம்" என்றார் சென்னை முருகன்.

"அன்னையுடன் இருக்கிறான் என்கிறீர்கள், கூடவே அன்னை கோயிலுக்கும் இப்படியே போகலாம் என்கிறீர்களே. புரியவில்லையே!" என்றார் ஒரு அன்பர்.

"அன்னை பராசக்திதான் தனயன் கைவேலாகக் காட்சியளிக்கிறாள். அன்னையைவிட்டு அரைவிநாடிகூட இருக்கமாட்டான் ஆறுமுகன். அதனால்தான் சொன்னேன்" என்றார் சென்னை முருகன்.

கச்சியப்பருக்கு 'திகடச' என்று அடி எடுத்துக்கொடுத்து நம் அனைவருக்கும் கந்தபுராணம் அருளிய அண்ணலைக் கண்ணாரக்கண்டு தரிசனம் செய்துகொண்டு, காமாட்சி அம்மையையும் வணங்கினோம்.

"ஆமாம்! இங்கு வந்து அன்னையை வணங்காமல் போகக்கூடாது போனால் பலன் இல்லை; எந்தக் கோயிலுக்குப் போகாவிட்டாலும் பரவாயில்லை; காமாட்சியை தரிசனம் செய்தால் போதும் என்கிறார்களே?" என்றார் பக்தர்.

"ஆமாம். அன்னை இங்கு ஊரின் மத்தியில் இருக்கிறாள். அவள் அரசியாக இருக்கும் பீடம். எந்தக் கோயில் மூர்த்தி

வீதி உலா கிளம்பினாலும், அன்னையை வலம் வந்தேயாக வேண்டிய அமைப்பில் அன்னை கோயில் இருக்கிறது. தலைவியின்—அம்மையின்—அருளைப் பெற்றால் மற்றவை எளிது என்பதைக் குறிக்கத்தான் அப்படிச் சொல்கிறார்களே தவிர, நீங்கள் கூறுவதுபோல் மற்றக் கோயில்களுக்குப் போனால் மட்டும் பலன் இல்லை என்பது நமது விபரீத புத்தி'' என்று விளக்கம் கூறினார் சென்னை முருகன்.

திட்டப்படி பின்னர் 'தொழுப்பேடு' சென்றோம். ''மலை மேல்தான் கோயிலா? மலை என்று பெயர் இருக்கும் இடத்தில் கீழே இருக்கிறான். ஊர் பெயர் வேறுமாதிரியாக இருக்கிற இடத்தில் மேலே இருக்கிறான். வேடிக்கைதான் செய்கிறான்'' என்றார் ஒருவர்.

சின்ன மலைதான். ஆகவே, அதிக சிரமமில்லாமல் ஏறினோம். பக்தர்கள் தொந்தரவு அதிகமில்லாமல் முருகன் நிறைய ஓய்வோடு அமர்ந்திருப்பது தொழுப்பேடு க்ஷேத்திரம் ஒன்றுதான்!

அடுத்து திருப்போரூரை நோக்கி வண்டி ஓடியது.........
''அங்கும் மலைமேல்தான் கோயிலா?'' என்றார் அன்பர்.

''மலைமேலும் கோயில் உள்ளது. ஆனால், அது சிவன் கோயில். தந்தையைக் கீழே வைத்து தான் உயரே இருக்க மனமின்றித்தான், கீழே இருக்கிறான் முருகன்!'' என்றார் சென்னை முருகன்.

''இங்கு மூலவருக்கு அபிஷேகம் இல்லை என்கிறார்களே ஏன்?'' என்றார் அன்பர்.

''மூலவர் சுயம்பு...தானாகவே தோன்றியவர். பனை மரத்தடியிலே இருந்திருக்கிறார். சிதம்பர ஸ்வாமிகள் முயற்சியால் கோயில் உருவாகியிருக்கிறது'' என்றார் சென்னை முருகன்.

''அந்த ஸ்வாமிகள் இப்போது இருக்கிறாரா?''

"இல்லை. அவர் சமாதியாகி விட்டார். அவர் செய்து நமக்கு அளித்த உள்ளமுருக்கும் பாடல்கள் இருக்கின்றன" என்று சொல்லிக்கொண்டே,

"இல்லறத்தா னல்லேன் இயற்கைத் துறவியல்லேன்
நல்லறத்து ஞானியல்லேன் நாயினேன்—சொல்லறத்தில்
ஒன்றேனுமில்லேன் உயர்ந்த திருப்போரூரா !
என்றே இனி ஈடேறுவேன்"

என்று ஊனுருகப் பாடினர்.

மலைமேல் ஏறி ஈசனையும் தரிசனம் செய்துகொண்டு சென்னைக்குப் புறப்பட்டோம்.

சென்னையில் வடபழநியாண்டவன் சந்நிதியில் நின்றோம்.

யாரோ ஒருவர் அபிஷேகம் ஏற்பாடு செய்திருந்ததால் எங்களுக்கும் பார்க்கும பாக்கியம் கிட்டியது.

அபிஷேகம் முடிந்து அலங்காரம் ஆனபிறகு தீபாரதனை போது திரையகற்றியதும், "ஆகா...ஆகா !...அரோஹரா முருகா ! அரோஹரா !" என்று உணர்ச்சி வசப்பட்ட குரல்கள் ஏக காலத்தில் கேட்டன. முருகன் அங்கு வேடனாக, இடையிலே புலித்தோலும், கையிலே வில்லும் தோளிலே அம்புறாத்தூணியும், மறவர்குல முடியும் கொண்டு காட்சியளித்துக் கொண்டிருந்தான்.

பிரஸாதம் வாங்கிக் கொண்டு கந்த கோட்டத்தை அடைந்தோம்.

ஆரவாரமே உருவான நகரின் மத்தியிலே கடைக்காரர்களின் மத்தியில் தன்னுடைய பக்திக் கடையை விரித்திருக்கிறான் கோலமயில் வாஹனன்.

இந்த வட்டாரத்திலுள்ள வாணிகப் பெருமக்கள் பக்தியோடுகூடப் பணத்தையும் வாரி வழங்கி முருகனை வழிபடுகிறார்கள். இங்கே கந்தன், வடலூர் மகானுடைய கண்ணின் மணி......!

குளமும் ஆலயமும் நாம் ஒரு மாநகரத்தின் மத்தியில் இருப்பதையே நினைவுபடுத்தாமல் அமைதியாக இருக்கின்றன.

கந்தப் பரமனிடம் விடை பெற்றுக் கொண்டோம்.

"இங்கிருந்து திருத்தணிதானே!" என்றார் அடியார் உடையார்.

"இல்லை! வழியிலே ஆண்டவர்குப்பம் இருக்கிறது. அதன் பிறகுதான் திருத்தணிகேசனுடைய தரிசனம்." சென்னை முருகன்.

"ஆண்டவர்குப்பம் என்று அடிக்கடி கேள்விப்பட்டிருக்கிறேனே தவிர, போனதேயில்லை" என்றார் ஒரு சென்னைவாசியான பக்தர்.

"ஜனவரி முதல்தேதியன்று பார்க்கவேண்டும். பொன்னேரி வழியாகப் போகிற கார் எல்லாம் ஆண்டவர்குப்பத்துக்குத்தான் போகும்; அவ்வளவு கூட்டம். அன்று அபிஷேகம் முதலியன எல்லாம் பிரமாதமாக இருக்கும்" என்றார் சென்னை முருகன்.

ஆண்டவர்குப்பம் அடைந்தது பஸ். சின்ன ஊர். ஒரே அமைதி, அழகு பொலியும் கோயிலின் முன்னே தெரு இருந்தது. குளத்திலே காலை அலம்பிக்கொண்டு கோயிலுக்குள் சென்றோம்.

யாரோ ஸஹஸ்ரநாம அர்ச்சனை செய்துகொண்டிருந்தார்கள். நாங்களும் அவர்களுடன் சேர்ந்துகொண்டு ஆற அமரத் தரிசனம் செய்துகொண்டு புறப்பட்டோம்.

திருத்தணிகையை லட்சியமாகக்கொண்டு பஸ் ஓடிய போது, நாங்கள் இந்த யாத்திரையில் அனுபவித்து ஆனந்தமடைந்தது இன்பமா, பேரின்பமா என்று என் மனம் சர்ச்சை செய்துகொண்டிருந்தது.

இன்பமா? ஊம்ஹூம்! பேரின்பம்தான்! என்று ஒர் எண்ணம். பேரின்பமில்லை...இன்பம்தான்! பேரின்பத்திற்கு அளவு உண்டா, அல்லது முடிவுதான் உண்டா என்று மற்றோர் எண்ணம்.

ஆமாம்; உண்மையில் பேரின்பம் முடிவற்றது. அளவு கடந்தது. அப்படியானால் நாம் கண்டது என்ன? இன்பமா? பேரின்பமா?

இன்பத்தைக் கண்டோம். பேரின்பத்தை உணர்ந்தோம். ரொம்ப சரி...கண்ணால் கண்டது இன்பம். உள்ளத்தால் உணர்ந்தது பேரின்பம். இதுவரை இரண்டையுமே தான் அனுபவித்தோம். பின் ஏன் இந்த சர்ச்சை? திருத்தணிகையிலிருந்து பிரியப் போகிறோம் என்ற உள்ளுணர்வு இரண்டையும் பேதப்படுத்துகிறது.........

பிரிந்தால் என்ன? பேரின்பத்தில் அடங்கியதுதானே இன்பம்......! உள்ளத்தில் பேரின்பம் நிலைத்து நிற்க உதவி செய்கிறது, கண்ணால் கண்ட இன்பம்....... அவ்வளவுதான்!

ஆம் அதுவேதான். உள்ளத்தில் தோன்றியுள்ள பேரின்பத்திற்கு கண்கண்ட இன்பம் உரமூட்டுகிறது. தண்ணீர் பாய்ச்சுகிறது. தணிகாசலப் பெருமானைத் தரிசித்துவிட்டுப் பிரியும்போது மனம் குழம்ப இடமளிப்பது விவேகமல்ல!

இவ்வாறு எண்ணங்களும், தொடர்ந்து ஒரு தீர்மானமும் தோன்றிய சமயம், திருத்தணி (குன்றுதோறாடல்) மலைப் படிக்கட்டருகிலுள்ள திருக்குளத்தின் கரையில் பஸ் நின்றது. ஜனவரி மாதம் முதல் தேதியன்று லட்சக்கணக்கான பக்தர்கள் திருத்தணித் திருப்படித் திருப்புகழ்த் திருவிழாவில் கலந்துகொண்டு மலையின் உயரத்தை அமுக்கிக் குறைத்துவிட்டார்களோ என்னவோ? முதற்படியில் காலை வைத்ததைத்தான் உணர்ந்தேன். அப்புறம் நூற்றுக்கணக்கான படிகளை நொடியில் கடந்து சென்றுவிட்டேன்!

திருத்தணிகை அறுபடை வீடுகளில் ஒன்று என்பதுடன் அகத்திய மாமுனிக்கு அருள் உபதேசம் செய்து தேனினும் இனிய தெள்ளிய தமிழைக் கொடுத்த இடமும்கூட. சாஸ்திரங்களும், புராணங்களும், சரித்திரங்களும் இந்த வரலாற்றை ச்லோகங்களாகவும், அருமையான பாடல்களாகவும், வசனங்களாகவும் எடுத்துக் கூறுகின்றன. ஆனால், முத் தமிழ் தெய்வமான முருகனை இங்கே மொழிப் பிரச்னையில் ஆழ்த்தியிருந்த அரசியல். தணிகாசலப் பெருமான் தமிழனா, தெலுங்கனா என்பதற்கு நிலையான விடை தமிழன் தான் என்று கிடைத்துவிட்டது. கெட்டதில் சில சமயம் நல்லது ஏற்படுவது உண்டு.

எதிர்காலத்தில் அகராதி தயாரிப்பவர்கள் அரசியல் என்ற பதத்திற்கு "குழப்பம்" என்று அர்த்தம் போடும் அளவிற்கு குழம்பிக் கிடக்கும் அரசியலை மேலும் குழப்ப "தேசீய ஒருமைப்பாடு" என்ற துடுப்பு அடிக்கடி உபயோக கப்படுத்தப்படுகிறது. நம் நாட்டுக்கு இந்தப் பிரசாரம் தேவையில்லை. குமரி முதல் இமயம் வரை தேசம் ஒன்று; மதம் ஒன்று; கலாசாரம் ஒன்று என்பதை ஆயிரமாயிரம் வருஷங்களுக்கு முன்னரே தீர்க்க தரிசனம் நிறைந்த பெரியோர்கள் ஸ்தாபிதம் செய்திருக்கிறார்கள். இந்த ஸ்தாபிதம் வருங்காலத்தில் சிதறுண்டு போகாமலிருக்க "பக்தி" எனும் சங்கிலியை மதத்தின் பெயரால் தோற்றுவித்து, நாடெங்கும் சக்தி வாய்ந்த தேவப் பிரதிஷ்டைகளைச் செய்து, இறை வழிபாட்டில் மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தினார்கள். இதை உணர்ந்தும் உணராதவர் போல் அரசியல்வாதிகள் அவ்வப்போது தேவைப்படும் பலனை அடைய இந்த உண்மையை மறைத்துச் செயல்படுவதால் இன்று "தேசீய ஒருமைப்பாடு" நாட்டை எதிர்நோக்கியுள்ள பலவிதப் பிரச்னைகளோடு சேர்ந்து கொண்டிருக்கிறது.

தான் வளர்த்த பூதமே தன்னை ஒழிக்க முற்பட்டிருப்பதை அவர்கள் இன்று உணர்ந்து செய்வதறியாமல் திகைக்கிறார்கள். பாரத சமுதாயம் போற்றிவரும் பக்தி வாழ்க்

கைக்கு அரசியல்வாதிகள் சிறிதளாவேனும் உதவி செய்திருந்தார்களானால், இன்று தேசிய ஒற்றுமை குறித்தும், தேசத்தின் பேசும் மொழி குறித்தும் குழப்ப நிலை ஏற்பட்டிருக்காது. தேசத்தின் தெற்குக் கோடியில் உள்ள குமரித் தெய்வமும், வடகோடியிலுள்ள கைலாசபர்வதத் தெய்வமும் சமுதாயம் காட்டும் 'பக்தி' ஒன்றினாலேயே தான் இணைக்கப்பட்டிருக்க முடியும். அரசியல் பகுத்தறிவுப் பிரசாரம் ஒருபோதும் பயனளிக்காது.

தாம் வாழும் நாட்டு நிலையில் அக்கறை காட்டாத பிரஜை ஒருவர்கூட இருக்க முடியாது பொதுவாக நாடு க்ஷேமமாக இருந்து, தான் மட்டும் தனது கர்ம வினையால் கஷ்டத்தையனுபவிக்கும் பிரஜை ஆண்டவன் சந்நிதியில் நிற்கும்போது தன் நலனுக்காக வரம் வேண்டிக் கண்ணீர் வடிப்பான். அதற்கு மாறாக, தேசமே கஷ்டத்தில் மூழ்கியிருக்கும் போது அவன் என்ன செய்ய முடியும்? தேசநலனுக்காக ஆண்டவன் சந்நிதியில் கண்ணீர் மல்கி வேண்டுகிறான்.

இன்று சமுதாயமே பின்னவனுடைய நிலையில் இருந்து வருவதை யாரும் மறுக்கத் துணிய மாட்டார்கள். எத்தனையோ இடையூறுகள் இருந்தும்கூட பக்தி உணர்வு கலந்த இரத்தத்தோடு வாழும் பாரத சமுதாயம் அருளொளி வீசும் ஆலயங்களுக்குப் போகும்போதெல்லாம், நாட்டை முன்னிறுத்தி தன்னைப் பின்னுக்கிழுத்து நாடு முன்னேற வரம் வேண்டி இறைவனிடம் இறைஞ்சுகிறது. ஒவ்வொரு வீட்டில் செய்யும் பூஜையின் முடிவில்கூட பசுக்களின் சுபிட்சத்தையும், பருவ மழையையும் சகல உலகமும் நலமுற வேண்டும் என்றுதான் பிரார்த்திக்கப்படுகிறது.

திருத்தணிகை தேவாதி தேவன் சந்நிதியில் சிரமேல் கரங்குவித்து நின்றபோது என் கருத்தை உணர்த்துவது போல்...

"யாரையும் துணை கொண்டிலேன்
நின்னடி இணை துணை அல்லால் நின்
பேரை உன்னி வாழ்ந்திடும்படி
செய்வையோ பேதுறச் செய்வாயோ ?
யாரையும் உயிர்ப் பரப்பையும்
படைத்தருள் பகவனே உலகேத்தும்
சீரை உற்றிடும் தணிகையில்
கடவுள் நின்திருவுளம் அறியேனே !"

என்ற பாடலை யாரோ மனமுருகிப் பாடினர். பாடலை ஆரம்பித்தது முதல் முடிக்கும் வரை ஆர்வத்தோடு பக்தி கோஷங்களை ஆரவாரமாகக் கூறிக்கொண்டிருந்த அடியார்கள் மௌனமாயிருந்ததைக் கவனித்தபோது, 'இங்கு வரம் வேண்டி நிற்கும் எங்கள் நிலையும்அதுதான்' என்று அவர்கள் சொல்லாமல் சொல்லியது போலவே தோன்றியது.

எஞ்சியிருந்த கற்பூரக் கட்டிகளை அடியார் உடையார் பட்டரிடம் கொடுத்தார்.

பேரொளியாகத் திகழும் பெருமான் கற்பூரச் சுடரொளியில் கலந்து காட்சி தந்தான்.

"சீதள வாரிஜ பாதா நமோ நம
நாரத கீத விநோதா நமோ நம
சேவல மாமயில் ப்ரீதா நமோ நம மறை தேடுஞ்
சேகரமான ப்ரதாபா நமோ நம
ஆகம சார சொரூபா நமோ நம
தேவர்கள் சேனை மகீபா நமோ நம கதி தோயப்
பாதக நீவுகு டாரா நமோ நம
மாவசு ரேசக டோரா நமோ நம
பாரினிலே ஜய வீரா நமோ நம மலைமாது
பார்வதியாள் தரு பாலா நமோ நம
நாவல ஞான மனோலா நமோ நம
பால குமார சுவாமீ நமோ நம அருள்தாராய்

என்று உள்ளமுருக ஒன்று சேர்ந்து தண்ணொளி வீசும் தணிகாசலப் பெருமானைப் பணிந்து பிரியா விடை பெற்று, கருத்தை அவன்பால் நிலைத்திருக்கச் செய்துவிட்டு கட்டையை நகர்த்திக்கொண்டு திரும்பினோம்.

*　　　*　　　*

சென்னையில் விடைபெற்று அடியார்கள் பிரிந்த சமயம், வானமே அதிர "வெற்றிவேல் முருகனுக்கு ஹர ஹரோ ஹரா" என்று கோஷமிட்டனர். அடியார் உடையாரிடம் நான், எனக்கு இந்த சந்தர்ப்பத்தை அளித்த உங்களுடைய 'மொபைல் ஷண்முகனை' ஐம்புலன்களுக்கு இடமளித்து, ஆண்டவன் அமைத்த இந்த வீடு குலையும்வரை மறக்கமாட்டேன்!" என்று கூறி, என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டேன்.

வேலும் மயிலும் துணை

சுபம்.

தொழுப்பேடு:—சென்னை—விழுப்புரம் இருப்புப் பாதையிலேயே உள்ளது. நெடுஞ்சாலையோரமாகவே மலைக் கோயில் உள்ளது அதிக உயரத்தில் இல்லை.

குமரகோட்டம்:—காஞ்சீபுரத்தில் காமாக்ஷியோடு பக்கத்திலேயே குலவி விளையாடிக் கொண்டிருக்கிறன் கந்தகோட்ட பரமன். "கச்சியப்ப சிவாசாரியார்" (கந்த புராண ஆசிரியர்) அருள் பெற்ற தலம்,

திருப்போரூர்:—சென்னையிலிருந்து பலகைவாராவதி மார்க்கமாக மஹாபலிபுரம் செல்லும் சாலையில் சுமார் 30 மைலுக்குள் உள்ள 'சுயம்பு' க்ஷேத்திரம். உற்சவ மூர்த்திக்கே அபிஷேகம். ஸ்ரீ சிதம்பர சுவாமிகள் இருந்து அருள் பெற்ற தலம்.

கந்தகோட்டம், வடபழநி:—சென்னை நகரத்தில் பூக்கடை போலீஸ் நிலையத்திற்கு அருகே கந்தசாமி கோயிலும், கோடம்பாக்கத்திலிருந்து 2 மைலில் வடபழநியும் உள்ளது.

**ஆண்டவர் குப்பம்:**—"பொன்னேரி"க்கருகில் சிறு கிராமம், அமைதியான சூழ்நிலை. பெரிய கோயில்: பஸ் போக்கு வரத்து உண்டு.

**திருத்தணி:**—சென்னை—ரேணிகுண்டா ரயில் பாதையில் ஸ்டேஷன் அமைந்துள்ளது. சென்னையிலிருந்து நேரே பஸ் போக்குவரத்தும் உண்டு. மலைக்கோயில், படை வீடுகளில் ஒன்று. கார் போவதற்கு ரோடுபோட்டு விட்டார்கள். திருப்பதி மாதிரியாக்க திட்டமிட்டு, கெடுபிடி செய்வதைக் குறைத்தால் பக்தி வளரும். இல்லாவிடில் பணம்தான் வளரும்.

கோயில் பொது உடமை. அங்கு மனிதன் நிம்மதிக்காகவும், குறைபாடுகளை ஆண்டவனிடம் கூறி மனச் சுமையை குறைக்கவும் போகிறான்: அங்கு எல்லோரும் சமம்: கட்டுப்பாடு, அன்பு ஒழுக்கம் இத்துடன் தான் கோயிலுக்குள் செல்லுகிறான்: அங்கும், வசதி, ஒழுங்கு முறை என்ற பெயரில் அடியார் சாதாரண நாட்களில் கூட கிராதி வழியே சுற்றிச் சென்று இடையே மாட்டிக் கொண்டு முன்னேற முடியாது போனாலும் பின்னேறவும் முடியாது திணற அடிக்கும் விதத்தில் ஏற்பாடுகள் செய்திருப்பது தேவையல்ல. இவைகளெல்லாம் இல்லாமல் தான் இவ்வளவு நாட்களும் கோடானு கோடி மக்கள் தொகை திருத் தணிகையையே முற்றுகையிட்டது போல் சூழ்ந்து கொண்டு ஆண்டவனையும் தரிசனம் செய்து வந்தனர்: ஆகவே வருமானத்தை மட்டும் பெருக்க வழி செய்தால் போதாது. திருத்தணிகேசன் திருப்பதி நிவாஸனாக வேண்டாம்.

ஓம்

# குமாரஸ்தவம்

ஓம் ஷண்முக பதயே நமோ நம:
ஓம் ஷண்மத பதயே நமோ நம:
ஓம் ஷட்கிரீவ பதயே நமோ நம:
ஓம் ஷட்கிரீட பதயே நமோ நம:
ஓம் ஷட்கோண பதயே நமோ நம:
ஓம் ஷட்கோச பதயே நமோ நம:
ஓம் நவநிதி பதயே நமோ நம:
ஓம் சுபநிதி பதயே நமோ நம:
ஓம் நரபதி பதயே நமோ நம:
ஓம் ஸுரபதி பதயே நமோ நம:
ஓம் நடச்சிவ பதயே நமோ நம:
ஓம் ஷடக்ஷர பதயே நமோ நம:
ஓம் கவிராஜ பதயே நமோ நம:
ஓம் தபராஜ பதயே நமோ நம:
ஓம் இகபர பதயே நமோ நம:
ஓம் புகழ்முனி பதயே நமோ நம:
ஓம் ஜயஜய பதயே நமோ நம:
ஓம் நயநய பதயே நமோ நம:
ஓம் மஞ்சுள பதயே நமோ நம:
ஓம் குஞ்சரீ பதயே நமோ நம:
ஓம் வல்லி பதயே நமோ நம:
ஓம் மல்ல பதயே நமோ நம:
ஓம் அஸ்த்ர பதயே நமோ நம:
ஓம் சஸ்த்ர பதயே நமோ நம:
ஓம் ஷஷ்டி பதயே நமோ நம:
ஓம் இஷ்டி பதயே நமோ நம:
ஓம் அபேத பதயே நமோ நம:
ஓம் ஸுபோத பதயே நமோ நம:
ஓம் வியூஹ பதயே நமோ நம:
ஓம் மயூர பதயே நமோ நம:

ஓம் பூத பதயே நமோ நம:
ஓம் வேத பதயே நமோ நம:
ஓம் புராண பதயே நமோ நம:
ஓம் ப்ராண பதயே நமோ நம:
ஓம் பக்த பதயே நமோ நம:
ஓம் முக்த பதயே நமோ நம:
ஓம் அகார பதயே நமோ நம:
ஓம் உகார பதயே நமோ நம:
ஓம் மகார பதயே நமோ நம:
ஓம் விகாச பதயே நமோ நம:
ஓம் ஆதி பதயே நமோ நம:
ஓம் பூதி பதயே நமோ நம:
ஓம் குமார பதயே நமோ நம:
ஓம் அமார பதயே நமோ நம:
ஓம் ஸ்ரீ குமார குருப்யோ நமோ நம:

---


## SASTHA PUBLICATIONS
**(சாஸ்தா பதிப்பகம்)**
*4/1, Poes Road, MADRAS-18.*

ஷண்மத ஸ்தாபனம் (அறுவகை வழிபாடு) பற்றிய ஆறு நூல்களையும் தபாலில் பெற விரும்புவோர் ரூ. 9-00 முன் பணம் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். ரூ. 18–00 சந்தா செலுத்துபவர்களுக்கு கீழே காணும் 12 நூல்களும் தபால் செலவின்றி அனுப்பிவைப்போம். தனித் தனியே புத்தகங்கள் தேவைப்படுபவர்கள் தபால் செலவை ஏற்க வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| ஐயப்பனோடு ஐம்பது நாள் | 2-50 | வைஷ்ணவம் | 1-50 |
| முருகன் தலம் முப்பது | 1-50 | சௌரம் | 1-25 |
| காணபத்யம் | 1-25 | திருமால் திருப்பதிகள் | 1-50 |
| கௌமாரம் | 1-25 | ஐம்பெரு விழாக்கள் | 1-50 |
| சாக்தம் | 1-50 | கேரளம் கண்டேன் | 1-50 |
| சைவம் | 1-25 | பராசக்தி படிவம் | அச்சில் |

நிர்வாகி

# மயில் விருத்தம்



## காப்பு

சந்தன பாளித குங்கும புளகித சண்பக கடகபுயச்
சமர சிகாவல குமர ஷடாநந சரவண குரவணியுங்
கொந்தள பார கிராத புராதனி கொண்கக எனப்பரவுங்
கூதள சீதள பாதமெனக் கருள் குஞ்சரி மஞ்சரிதோய்
கந்தக்ரு பாகர கோமள குப்ப கராதிப மோகரத
கரமுக சாமர கர்ண விசால கபோல விதான மதத்
தெநதம கோதர மூஷிக வாகன சிந்துர பத்மமுகச்
சிவசுத கணபதி விக்னவி நாயக தெய்வ சகோதரனே.

## நூல்

சந்தான புஷ்பபரி மளகிண் கிணீ முகச்
சரணயுக ளமிர்தப்ரபா
சந்த்ர சேகரமூஷி காரூட வெகுமோக
சத்யப்ரி யாலிங்கனச்
சிந்தாமணிக் கலச கரகட கபோலத்ரி
யம்பக விநாயகன் முதற்
சிவனை வலம் வருமளவில் உலகடைய நொடியில்வரு
சித்ரக் கலாப மயிலாம்
மந்தாகினிப்ரபவ தரங்க விதரங்க
வனசரோ தயகிர்த்திகா
வரபுத்ர ராஜீவ பரியங்க தந்திய
வராசலன் குலிசாயுதத்
திந்த்ராணி மங்கில்ய தந்து ரக்ஷாபரண
இகல்வேல் விநோதன் அருள்கூர்
இமையகிரி குமரிமகன் ஏறுநீ லக்ரீப
ரத்னக் கலாப மயிலே.

சக்ரப்ர சண்டகிரி முட்டக் கிழிந்துவெளி
    பட்டுக்ர வுஞ்சசயிலந்
தகரப் பெருங்கனக சிகரச் சிலம்புமெழு
    தனிவெற்பும் அம்புவியும் எண்
திக்குத் தடங்குலடும் ஒக்கக் குலுங்கவரு
    சித்ரப்பதம் பெயரவே
சேடன்முடி திண்டாட ஆடல்புரி வெஞ்சூரர்
    திடுக்கிட நடிக்குமயிலாம்
பக்கத்தி லொன்று படுபச்சைப் பசுங்கவுரி
    பத்மப் பதங்கமழ்தரும்
பாகீரதிச் சடில யோகீசுரர்க்குரிய
    பரமவுப தேசமறிவிக்
கைக்குச் செழுஞ்சர வணத்திற் பிறந்தவொரு
    கந்தச் சுவாமி தணிகைக்
கல்லார கிரியுருக வருகிரண மரகத
    கலாபத்தில் இலகுமயிலே,

யுககோடி முடிவின்மண் டியசண்ட மாருதம்
        உதித்ததென் றயன் அஞ்சவே
    ஒருகோடி அண்டர்அண் டங்களும் பாதாள
        லோகமும் பொற் குவடுறும்
வெகுகோடி மலைகளும் அடியினில் தகர்ந்திரு
        விசும்பிற் பறக்க விரிநீர்
    வேலைசுவறச் சுரர்நடுக்கங் கொளச்சிறகை
        வீசிப்பறக்கு மயிலாம்.
நககோடி கொண்டவுணர் நெஞ்சம் பிளந்துநர
        கேசரி முராரி திருமால்
    நாரணன் கேசவன் சீதரன் தேவகீ
        நந்தனன் முகுந்தன் மருகன்
முககோடி நதிதரன் குருகோடி யனவரத
        முகில்உலவு நீலகிரிவாழ்
    முருகன்உமை குமரன் அறுமுகன் நடவு விகடதட
        மூரிக்கலாப மயிலே,

# வேல் விருத்தம்



வெங்காள கண்டர்கைச் சூலமுந் திருமாயன்
வெற்றிபெறு சுடராழியும்
விபுதர்பதி குலிசமும் சூரன்கு லங்கல்வி
வெல்லா எனக் கருதியே
சங்க்ராம நீ சயித்தருளெனத் தேவரும்
சதுர்முகனும் நின்றிரப்பச்
சயிலமொடு சூரனுடல் ஒருநொடியில் உருவியே
தனியாண்மை கொண்ட நெடுவேல்
கங்காளி சாமுண்டி வாராகி இந்த்ராணி
கௌமாரி கமலாசனக்
கன்னிநா ரணிகுமரி த்ரிபுரைபயி ரவிஅமலை
கௌரிகா மாக்ஷிசைவ
சிங்காரி யாமளை பவானி கார்த் திகைகொற்றி
த்ரியம்பகி அளித்தசெல்வச்
சிறுவன் அறுமுகன் முருகன் நிருதர்கள் குலாந்தகன்
செம்பொற் றிருக்கை வேலே. 1

வேதாள பூதமொடு காளிகா ளாத்ரிகளும்
வெகுளுறு பசாச கணமும்
வெங்கழு குடன்கொடி பருந்துசெம் புவனத்தில்
வெம்பசி யொழிக்க வந்தே
ஆதார கமடமுங் கணபண வியாளமும்
அடக்கிய தடக்கிரியெலாம்
அலையநட மிடுநெடுந் தானவர் நிணத்தசை
அருந்தி புரந்த வைவேல்.
தாதார் மலர்சுனைப் பழநிமலை சோலைமலை
தனிப்பரங் குன்றேரகம்
தணிகைசெந் தூரிடைக் கழியாவினன்குடி
தடங்கடல் இலங்கையதனிற்
போதார் பொழிற்கதிர் காமத் தலத்தினைப்
புகழுமவ ரவர் நாவினிற்
புந்தியில் அமர்ந்தவன் கந்தன்முரு கன்குகன்
புங்கவன் செங்கை வேலே. 2

# திருவகுப்பு

## சேவகன் வகுப்பு

இருபிறை எயிறு நிலவெழ உடலம்
    இருள்படு சொரூப முடைக்கோ விடவே
இறுகிய கயிறு படவினை முடுகி
    எமபடர் பிடரி பிடித்தே கொடுபோய் ;
அருமறை முறையின் முறைமுறை கருதி
    அதரிடை வெருவ ஒறுத்தால் வகையால்
அறிவொடு மதுர மொழியது குழறி
    அலமரு பொழுதில் அழைத்தால் வருவாய்
ஒருபது சிரமும் இருபது கரமும்
    விழஒரு பகழி தொடுத்தோன் மருக!!
உரமது பெரிய திரிபுரம் எரிய
    உயர்கன கிரியை வளைத்தோர் புதல்வ!!
மருவளர் அடவி வனிதையர் பரவ
    மரகத இதணில் இருப்பாள் கணவா.
வளைகடல் கதற நிசிசரர் மடிய
    மலையொடு பொருத முழுச் சேவகனே

## சிவகிரி வகுப்பு

மெத்த மெத்த வக்ர மத்தின்
    மெத்த மெத்த விக்ர மத்தின்
    மெத்த மெத்த உக்ர வெற்றி மிகுபாசமே

விட்டு விட்டு றுக்கு றுக்கு
    கட்டு கட்டு குத்து குத்து
    வெட்டு வெட்டெனச் சினத்து நமனுடியே

சத்த மிட்ட தட்டி நெட்டெ
    யிற்றினைக்க டித்து றுக்கு
    தர்க்க மிட்டெனைப் பிடிக்க வருபோதிலே

தத்தளிக்கும் புத்தியைத்தி
டப்படுத்தி ஒத்திடத்த
ணிப்புறுத்தி மெய்த்துணைக்கு வரவேணுமே;

எத்தலத்தும் எப்பதிக்கும்
எப்படிக்கும் எச்சரித்து
நற்பதத்தை உச்சரிக்கு நினைவாகியே

இட்டம் வைத்த வர்க்க நுக்ர
கச்ச முத்ர வித்தை யிற்ப்ர
சித்த நித்ய முத்தமிழ்க்கும் அருள்போதனே ;

அக்ர பக்ர சித்ர மிட்ட
யிற்ப வடத்த யிற்கிணைத்த
வர்க்க ணுற்ற பொற்குறத்தி மணவாளனே

அத்தனுக்கு மைக்கி தத்த
புத்ர சித்தி முத்தி யைச்செ
யற்பு தச்சி வக்கிரிக்குள் முருகேசனே

ஸ்ரீ வேத வியாசர்
ஸ்ரீ விநாயகப் பெருமான் தன் தந்தத்தை ஒடித்து உலகம் உய்ய ஸ்ரீமத் மகாபாரதம் எழுதின முதல் பல்லாயிர வருஷங்களாக சிறந்த தெய்வீகக் கவிகள் உலகம் உய்ய எழுத்தாணி கொண்டு வேத, உபநிஷத் முதல் புராணங்கள் வரை பொழிந்த தொண்டின் தொடர்பாக நவீனத்தில் **ஆஸ்வால் பேனாக்களும் - மசியும்-** பணியாற்றிவரும் சேவையை சிரம் தாழ்த்தி கை குவித்து விண்ணப்பித்துக் கொள்கிறோம்.

*OSWAL PEN Co.,*

# திருப்புகழ்

## விநாயகர் துதி

கைத்தல நிறைகனி அப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவ
கற்பக எனவினை கடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திடும் அரன் மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறை ரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிரமணிபடும்
அப்புனம் அதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.

* * *

உப்பர் தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலில் தேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காக வனத் தணைவோனே
தந்தை வலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கான நிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானை முகப் பெருமாளே.

பக்கரைவி சித்ர மணி பொற்கலணை யிட்ட நடை
பக்ஷியெனு முக்ரதுர கமுநீபப்
பக்குவம லர்த் தொடையும் அக்குவடு பட்டொழிய
பட்டுருவ விட்டருள்கை வடிவேலும்

திக்கது மதிக்கவரு குக்குடமும் ரக்ஷைதந
சிற்றடியு முற்றியப னிருதோளும்
செய்ப்பதியும் வைத்துயர்தி ருப்புகழ் விருப்பமொடு
செப்பென எனக் கருள்கை மறவேனே
இக்கவரை நற்கனிகள் சர்க்கரை பருப்புடனெய்
எள்பொரிய வல் துவரை இளநீர்வண்
டெச்சில்பய றப்பவகை பச்சரிசி பிட்டுவெள
ரிப்பழ மிடிப்பல்வகை தனிமூலம்
மிக்க அடி சிற்கடலை பக்ஷணமெனக் கொளொரு
விக்கின சமர்த்தனெனும் அருளாழி
வெற்பகுடி லச்சடில விற்பர மரப்பரருள்
வித்தக மருப்புடைய பெருமாளே.


Phone : 73175

PROMPT SERVICE

QUICK DELIVERY

&

Satisfaction to Our Customers

is our MOTTO.

# Annamalai Pharmacy

Dispensing Chemists & Druggists

34/1 Luz Church Road (Alwarpet Turning)

Madras-4.

# திருச்செந்தூர் பிள்ளைத்தமிழ்

கத்துந் தரங்க மெடுத்தெறியக்
கடுஞ்சூ லுளைந்து வலம்புரிகள்
கரையிற் றவழ்ந்து வாலுகத்திற்
கான்ற மணிக்கு விலையுண்டு
தத்துங் கரட விகடதட
தந்திப் பிறைக்கூன் மருப்பில்விளை
தரளந் தனக்கு விலையுண்டு
தழைந்துக் கழுத்து வளைந்தமணிக்
கொத்துஞ் சுமந்த பசுஞ்சாலிக்
குளிர் முத்தினுக்கு விலையுண்டு
கொண்ட நருநித் தலந்தனக்குக்
கூறுந் தரமுண்டுன் கனிவாய்
முத்தந் தனக்கு விலையிலை
முருகா முத்தந் தருகவே
முத்தஞ் சொரியுங் கடலலைவாய்
முதல்வா முத்தந் தருகவே

ஆதிநான் மரபாகி யதனுறும் பொருளாகி
அல்லவை யனைத்து மாகி
அளவினுக் களவாகி யணுவினுக் கணுவாய்
அனைத்துயிரு மாகி அதனின்
சாதியின் பிரிவாகி வெவ்வேறு சமயங்கள்
தானாகி நானாகி மெய்ச்
சாலோக சாமீப சாரூப சாயுச்ய
தன்னொளியி லீலையாகி
ஓதிய தனைத்தினு மடங்காமல் வேறாகி
உள்ளும் புறம்புமாகி
ஒளியிலொளி யாகி மற்றிரவு பகலற்றவிடம்
ஒப்புவித் தெனையிருத்தித்
தீதினை யகற்றிநின் திருவருள் புரிந்தவா
சிறு தேருட்டியருளே.
சேவற் பதாகைக் குமார கம்பீரனே
சிறு தேருட்டியருளே

# திருப்புகழ்

## திருச்செந்தூர்

முந்து தமிழ்மாலை கோடிக் கோடி
  சந்தமொடுநீடு பாடிப்பாடி
  முஞ்சர்மனை வாசல் தேடித்தேடி  உழலாதே
முந்தைவினை யேவராமற் போக
  மங்கை யர்கள்காதல் தூரத்தேக
  முந்தடிமை யேனையாளத் தானு  முனைமீதே
திந்திதிமி தோதி தீதித்தீதி
  தந்ததன தான தானத்தான
  செஞ்செணகு சேகு தாளத்தோடு  நடமாடும்
செஞ்சிறிய கால்வி சாலத்தோகை
  துங்கஅனு கூலபார்வைத் தீர
  செம்பொன் மயில்மீதி லேயெப்போது  வருவாயே
அந்தண்மறை வேள்வி காவற்கார
  செந்தமிழ் சொல்பாவின் மாலைக்கார
  அண்டருபகார சேவற்கார  முடிமேலே
அஞ்சலிசெய் வோர்கள் நேசக் கார
  குன்றுருவ ஏவும் வேலைக்கார
  அந்தம் வெகுவான ரூபக்கார  எழிலான
சிந்துரமின் மேவு போகக்கார
  விந்தை குறமாது வேளைக்கார
  செஞ்சொ லடியார்கள் வாரக்கார  எதிரான
செஞ்சமரை மாயு மாயக்கார
  துங்கரண சூர சூறைக்கார
  செந்தில் நகர்வாழு மாண்மைக்கார  பெருமாளே.

* * *

துள்ளுமத வேட்கைக்  கணையாலே
  தொல்லைநெடு நீலக்  கடலாலே
மெள்ளவரு சோலைக்  குயிலாலே
  மெய்யுருகு மானைத்  தழுவாயே
தெள்ளுதமிழ் பாடற்  தெளிவோனே
  செய்யகுமரேசத்  திறலோனே
வள்ளல்தொழு ஞானக்  கழலோனே
  வள்ளி மணவாளப்  பெருமாளே.

## வள்ளியூர்

அல்லி னேருமின் அதுதானும் அல்லதாகிய உடல்மாயை
கல்லி னேரவ வழிதோறும் கையும் நானு முலையலாமோ
சொல்லி நேர்படு முதுசூரர் தொய்ய வூர்கெட விடும்வேலா
வல்லி மாரிரு புறமாக வள்ளியூருறை பெருமாளே.

## திருமலை

ஒருபது மிருபது மறுபது முடனறும்
உணர்வுற இருபதம் உள நாடி
உருகிட முழுமதி தழலென ஒளிதிகழ்
வெளியொடு மொளிபெற விரவாதே
தெருவினில் மரமென எவரொடு முரைசெய்து
திரிதொழி லவமது புரியாதே
திருமகள் மருவிய திரள்புய அறுமுக
தெரிசனை பெறவருள் புரிவாயே
பரிவுட னழகிய பழமொடு கடலைகள்
பயறொடு சிலவகை பணியாரம்
பருகிடு பெருவயி றுடையவர் பழமொழி
எழுதிய கணபதி இளையோனே
பெருமலை உருவிட அடிமலர் பணிபவர்
பிணிகெட அருள்தரு குமரேசா
பிடியொடு களிறுகள் நடைபயில் கலைதிறள்
பிணையமர் திருமலைப் பெருமாளே.

## இலஞ்சி

சுரும்பணி கொண்டல் நெடுங்குழல் கண்டு
துரந்தெறிகின்ற விழிவேலால்
சுழன்று சுழன்று துவண்டு துவண்டு
சுருண்டு மயங்கி மடவார்தோள்
விரும்பி வரம்பு கடந்து கடந்து
மெலிந்து தளர்ந்து மடியாதே
விலங்கு கடம்பு விளங்கணி தண்டை
விதங்கொள் சதங்கை அடிதாராய்
பொருந்த லமைந்து சிதம்பெற நின்ற
பொலங்கிரி யொன்றை எறிவோனே

புகழ்ந்து மகிழ்ந்து வணங்கு குணங்கொள்
புரந்தரன் வஞ்சி மணவாளா

இரும்புன மங்கை பெரும் புளகஞ்செய்
குரும்பை யணைந்த மணிமார்பா

இலஞ்சியில் வந்த இலஞ்சியமென்று
இலஞ்சி யமர்ந்த பெருமாளே.

அருவமும் உருவமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகிக்
கருணை கூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டுங்
கொண்டே
ஒரு திருமுருகன் வந்தாங்குதித்தனன் உலகமுய்ய

—(கச்சியப்ப சிவசாரியார்.)

## கழுகுமலை

கோங்க முகையு மெலிய வீங்கு புளக களப
மேந்து குவடு குழையும் படிகாதல்
கூர்ந்து குழையை அமளி தோய்ந்து குலவு மினிய
தேங்கு கலவி அமுதுண் டியல் மாதர்

வாங்கு பசழி விழியை மோந்து பகலுமிரவும்
வாய்ந்த துயிலை மிகவும் தணியாத
வாஞ்சை உடைய அடிமை நீண்ட பிறவி அலையை
நீந்தி அமல அடிவந் தடைவேனே

ஓங்க லனைய பெரிய சோங்கு தகர மகர
மோங்கு ததியின் முழுகும் பொருசூரும்
ஓய்ந்து பிரமன் வெருவ வாய்ந்த குருகு மலையில்
ஊர்ந்து மயில துலவுந் தனிவேலா

வேங்கை அடவி மறவர் ஏங்க வனிதை உருக
வேங்கை வடிவு மருவுங் குமரேசா
வேண்டுமடியர் புலவர் வேண்ட அரியபொருளை
வேண்டு மளவி னுதவும் பெருமானே

*Phone: 22522*

EXCELENT ATTENTION

to suit to

all

Tastes

Above all Homely

Stay

at

SREE SEETHARAM

*BOARDING & LODGING*

State Bank Road, :: COIMBATORE.

## திருப்பரங்குன்றம்

உனைத்தி னந்தொழு திலனுன தியல்பினை
உரைத்திலன் பலமலர் கொடுனடியிணை
உறப்பணித்திலன் ஒரு தவமிலனுன தருள்மாறா

உளத்துளன்பின ருறைவிட மறிகிலன்
விருப்பொடுன் சிகரமும் வலம் வருகிலன்
உவப்பொடுன் புகழ் துதி செய விழைகிலன்
மலைபோலே

கனைத்தெழும் பகடது பிடர் மிசை வரு
கறுத்த வெஞ்சின மறலிதனுழையினர்
கதித்தடர்ந் தெறி கயி றடு கதைகொடு
பொருபோதே

கலக்குறுஞ் செயலொழிவற அழிவுற
கருத்து நைந் தல முறுபொழுதளவைகொள்
கணத்தி லென்பய மற மயில் முதுகினில் வருவாயே

வினைத்தலந்தனி லலகைகள் குதிகொள
விழுக்குடைந்துமெ யுகுதசை கழுகுண
விரித்த குஞ்சியரெனு மவுணரை அமர் புரிவேலா

மிகுத்த பண்பயில் குயில்மொழி அழகிய
கொடிச்சி குங்கும முலைமுகடுழுநறை
விரைத்த சந்தன ம்ருகமத புயவரை யுடையோனே

தினத் தினஞ் சதுர் மறை முனி முறைகொடு
புனற் சொரிந்தலர் பொதிய விணவரொடு
சினத்தை நிந்தனை செயுமுனிவரர்தொழ
மகிழ் வோனே

தெனத் தெனந்தென என வரி அளிநறை
தெவிட்ட அன்பொடு பருகுயர் பொழில்திகழ்
திருப்பரங்கிரி தனிலுறை சரவண பெருமாளே

மறைகளின் முடிவால் வாக்கால் மனத்தினால்
அளக்கொணுமல்
நிறைஉடன் யாண்டுமாகி நின்றிடும் நிமலமூர்த்தி
அறுமுக உருவாய்த் தோன்றி அருளொடு சரவணத்தின்
வெறிகமழ் கமலப்போதின் வீற்றிருந் தருளினனே.

## பழமுதிர்சோலை

அகரமுமாகி அதிபனுமாகி
அதிகமுமாகி அகமாகி
அயனெனவாகி அரியெனவாகி
அரனென வாகி அவர்மேலாய்
இகரமுமாகி எவைகளுமாகி
இனிமையுமாகி வருவோனே
இரு நிலமீதில் எளியெனும் வாழ
எனது முன்ஓடி வரவேணும்
மகபதியாகி மருவும் வலாரி
மகிழ் களி கூறும் வடிவோனே
வனமுறை வேடன் அருளிய பூஜை
மகிழ் கதிர் காம முடையோனே
செககண சேகு தகுதிமி தோதி
திமியென ஆடு மயிலோனே
திருமலிவான பழமுதிர் சோலை
மலைமிசை மேவு பெருமாளே

காரணமதாகி வந்து புவிமீதே
காலனணுகாதிசைந்து கதிகாண
நாரணனும் வேத முன்பு தெரியாத
ஞான நடமே புரிந்து வருவாயே
ஆரமுதமான தந்தி மணவாளா
ஆறுமுக மாறிரண்டு விழியோனே
சூரர் கிளை மாள வென்ற கதிர்வேலா
சோலைமலை மேவி நின்ற பெருமாளே

## பழநித் திருவாவினன்குடி

அபகார நிந்தை பட் டுழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே
உனை நா னினைந்தருட் பெறுவேனோ
இபமா முகன் றனக் கிளையோனே
இமவான் மடந்தை யுத்தமி பாலா
ஜெப மாலை தந்த சற் குருநாதா
திருவாவினன் குடிப் பெருமாளே

## பழநி

சுருதிமுடி மோனஞ் சொல் சிற்பரம ஞான சிவ
சமய வடி வாய்வந்த அத்துவித மான பர
சுடரொளிய தாய்நின்ற நிட்களசொ ரூபமுத
லொருவாழ்வே

துரியநிலே யேகண்ட முத்தரித யாகமல
மதனில்வினே யாநின்ற அற்புதசு போதசுக
சுயபடிக மாவின்ப பத்ம பதமேவடைய உணராதே

கருவிலுரு வேதங்கு சுக்கிலநி தானவளி
பொருமவதி லேலெகாண்ட முக்குண வி பாகநிலே
கருதவறி யாவஞ்ச கக்கபடமுடியுடல் வினேதானே

கலகமிட வேபொங்கு குப்பைமல வாழ்வுநிச
மெனவுழலு மாயஞ்செனித்த குகை யேயுறுதி
கருதசுழமாமிந்த மட்டைதனே யாளவுன தருள்தாராய்

ஒருநியம மேவிண்ட சட்சமய வேதவடி
முடிநடுவு மாயண்ட முட்டைவெளி யாகியுயிர்
உடலுணர்வதாயெங்கு முற்பனமதாகவம ருளவோனே

உததரிச மாமின்ப புத்தமிர்த போத சுகம்
உதவுமம லாநந்த சத்திகர மேவுணர
உருபிரண மாமந்த்ர கர்த்தவிய மாக வரு குருநாதா

பருதி கதி ரேகொஞ்ச நற்சரண நூபுரம
தசையநிறை பேரண்ட மொக்கநட மாடுகன
பதகெருவிதாதுங்க வெற்றிமயிலேறுமொரு
திறலோனே

பணியுமடி யார்சிந்தை மெய்ப்பொருள தாகநவில்
சரவணப வாவென்று வற்கரமு மாகிவளர்
பழநிமலே மேனின்ற சுப்ரமணியா வமரர் பெருமாளே.

வரதா மணி நீ
வருகா தெதுதான்
திரதாதிகளால்
இடவே கரியாம்

எனவோரில்
அதில் வாரா
நவலோகம்
இதிலேது

சரதா மறையோ தயன்மாலும்
சகலா கமநூல் அறியாத
பரதே வதையாள் தருசேயே
பழநி புரிவாழ் பெருமாளே

*

வசனமிக வேற்றி மறவாதே
மனது துயராற்றி லுழலாதே
இசைபயில்ச டாக்ஷ ரமதாலே
இகபர செளபாக்யம் அருள்வாயே
பசுபதி சிவ வாக்யம் உணர்வோனே
பழநிமலை வீற்ற ருளும் வேலா
அசுரர் கிளை வாட்டி மிகவாழ
அமரர் சிறை மீட்ட பெருமாளே

சுவாமிமலை

தேனை வடித்துச் சொரிந்த தோகொதி
பாலுடன் ஒக்கக் கலந்த தோ நல
சீனியில் விட்டுப் பிசைந்த தோபல கனிதானோ

தேடியெ டுத்துப் பிழிந்த தோநிறை
பாகுப தத்திற் சமைந்ததோ இவை
சேரவு ருட்டித் திரண்டதோ நவ ரசமீதோ

ஞானமு ளைத்துப் படர்ந்த தோஅதி
லேயெழு புட்பச் சுகந்த மோஇது
நாமகள் வித்தை ப்ரசங்க மோவென உரை நாவால்

நாவலர் மெச்சிப் பணிந்து தாழவும்
நீயது மெச்சித் தணிந்து பேசவும்
நானுனை மெச்சிப் புகழ்ந்து பாடவும் அருள்தாராய்

யானைம தப்பட் டெழுந்த தாமென
வேயிரு பத்மச் சதங்கை யோலிட
ஆறுமுகத்துக் குழந்தை யாயருள் அனையார் பால்

ஆறுமுகற்குச் சொரிந்த பாற்குளம்
ஆறுமுலைக்குப் பிரிந்த பால்நிறை
வாரம லைக்குச் சிறைந்த போதிலும் அமையாதோ

சோலைம லைகுட் டிரிந்து லாவிய
க்ஷீரசமுத்ரத் தரங்க மேலெழு
சூரிய னொக்கத் திரிந்துலாவிய புதல்வோனே

சோலைம லைக்குக் கடம்பு போல் வளர்
விராலிம லைக்குக் கொழுந்து போலுயர்
சுவாமிம லைக்குக் கரும்பு போல்வரு முருகோனே

## திருச்செங்கோடு

அன்பாக வந்து நின்றுள் பணிந்து
ஐம்பூதமொன்ற நினையாமல்

அன்பால் மிகுந்த நஞ்சாருகண்க
ளம் போருகங்கள் மூலைதானும்

கொந்தே மிகுந்த வண்டாடி நின்று
கொண்டாடு கின்ற குழலாரைக்

கொண்டே நினைந்து அன்பேது மின்றிக்
குன்றும லுன்றன் அருள்தாராய்

மன்றாடி தந்த மைந்தா மிகுந்த
வம்பார் கடம்பை அணிவோனே

வந்தேப ணிந்து நின்றார் பவங்கள்
அன்றே கவர்ந்த வடிவேலா

சென்றே யிறைஞ்ச கந்தாவென் முன் பு
செஞ்சேவல் கொண்டு வரவேணும்

செஞ்சாலிகஞ்ச மொன்றாய்வளர்ந்த
செங்கோடமர்ந்த பெருமாளே.

இருந்த வீடுங் கொஞ்சிய சிறுவரும் உறுகேளும்
இசைந்தவூரும் பெண்டிரு மிளமையும் வளமேவும்
விரிந்த நாடுங் குன்றமுநிலையென மகிழாதே
விளக்கு தீபங்கொண்டுனை வழிபட அருள்வாயே
குருந்தி லேறுங் கொண்டலின் மருகபொன் வயலூரா
குரங்குலாவுங் குன்றுறை குறமகள் மணவாளா
திருந்த வேதந் தண்டமிழ்தெரிதரு புலவோனே
சிவந்த காலுந் தண்டையுமழகிய பெருமாளே.

## விராலிமலை

சீரான கோல கால நவமணி
மாலாபிஷேக பார வெகுவித
தேவாதி தேவர் சேவை செயுமுக மலராறும்

சீராடு வீரமாது மருவிய
ஈராறு தோளும் நீளும் வரியளி
சீராக மோது நீப பரிமள இருதாளும்

ஆராதகாதல் வேடர் மடமகள்
சீமூதமூர்வ லாரி மடமகள்
ஆதார பூதமாக வலமிட முறை வாழ்வும்

ஆரா யும் நீதி வேலும் மயிலுமெய்
ஞானபிராம சோதி வடிமும்
ஆபாதனேனும் நாளும் நினைவது பெறவேணும்

ஏராரு மாடகூட மதுரையில்
மீதேறி மாறியாடு மிறையவர்
ஏழேழு பேர்கள் கூறவருபொரு ளதிகாரம்

ஈடாய வூமர்போல வணிகரி
லூடாடி ஆலவாயில் விதிசெய்த
லீலா விசாரதீர வரதர குருநாதா

கூராழியால் முன் வீயநினைபவ
ஸீடேறுமாறு பானு மறைவுசெய்
கோபால ராயனேய முளதிரு மருகோனே

கோடாம லார வாரஅலை யெறி
காவேரியாறு பாயும் வயலியில்
கோனாடுசூழ் விராலி மலையுறை பெருமானே

## என் கண்

சீராரு மயில்காண வேல்காண அடல்கொண்ட
சேவற் பதாகை காணத்
திருமுகத் தாமரைகள் ஓராறு காண நின்
செம்பருதி மேனி காண
ஓராறு நவரத்ன மணிமௌலி காண உள்
ளுகந்து உருகி நகைகள் காண
உபயபரி புரமறைகள் தண்டை யொடு கிண்கிணி
யொலிக்கும்பதங்கள் காணத்
தாரா றிரண்டு புய சயிலங்கள் காணவே
தங்க முப் புரிநூலணி
தயமார்பு காணவே ஈராறு செவியிலணி
தருகுண்ட லங்கள் காண
ஈராறு கை காண அடியார் முன் ஓடிவரும்
எந்தை என் முன் வருகவே
என் கண்ண னுக்கருள்செய் ஈராறு கண்ணனே
என்கண் வேலவன் வருகவே.

## எட்டிக்குடி

ஓங்கு மைம் புல னோடே நினைத்தின் பயர்வேனை
ஓம்பெரும்ப்ரண வாதியுரைத்தென் றனையாள்வாய்
வாங்கி வெங்கணை சூரர்குலகொம் புகடாவி
வாங்கி நின்றன ஏவி லுகைக்குங் குமரேசா
மூங்கி லம்புய வாசமணக்குஞ் சரிமானும்
மூண்ட பைங்குற மாது மணக்குந் திருமார்பா
காங்கை யங்கறு மாசின் மனத்தன் பர்கள் வாழ்வே
காஞ்சிரங்குடி ஆறுமுகத்தெம் பெருமானே.

தவள மதிய மெறிக்குந் தணலாலே
சரச மதனன் விடுக்குங் கணையாலே
கவன மிகவு முரைக் குங் குயிலாலே
கருதி மிகவு மயக்கம் படவோ நான்
பவள நிகருமிதழ்ப் பைங் குறமானின்
பரிய வரையை நிகர்க்குந் தனமேவுந்
திவளு மணிகள் கிடக்குந் திருமார்பா
திகழு மயிலின் மலைக்கண் பெருமானே.

## குமரகோட்டம்

மயலோது மந்த நிலையாலும் வஞ்ச
வசைபேசு கின்ற மொழியாலும்
மறிபோலு கின்ற விழிசேரு மந்த
மதிநேரு கின்ற நுதலாலும்
அயிலேநி கர்ந்த விழியாலும் அஞ்ச
நடையாலும் அங்கை வளையாலும்
அறிவேயழிந்து அயர்வாகி நைந்து
அடியேன் மயங்கி விடலாமோ
மயிலேறி யன்று நொடிபோதி லண்டம்
வலமாக வந்த குமரேசா
மறிதாவு செங்கை அரனாரி டங்கொள்
மலைமாது தந்த முருகேசா
நயவாலு யர்ந்த மணிமாடமும்பர்
நடுவேநி றைந்த மதிசூழ
நறைவீசு கும்ப குடமேவு கம்பை
நகர்மீ தமர்ந்த பெருமாளே.

## திருப்போரூர்

உருக்கார் வாளிகண்கள் பொருப்பார் வார் தனங்கள்
உகப்பார் வால சந்த்ர னுதனூலாம்
உருச்சேர் நீண் மருங்குல் பணைத்தோ ளோதி கொண்ட
லுவப்பா மேல் விழுந்து திரிவோர்கள்
அருக்கா மாதர் தங்கள் வரைக்கே ஓடியின்ப
விலைக்கே பூணு நெஞ்சன் அதிபாவி
அசட்டால் மூடுகின்ற மசக்கால் மாயுமிந்த
அவத்தா லீன மின்றி அருள்வாயே
எருக்கார் தாளிதும்பை மருச்சேர் போதுகங்கை
யினைச்சூ டாதிநம்பர் புதல்வோனே
இருக்கா லே நினைந்து துதிப்பார் நாவினெஞ்சி
லிருப்பா யானைதங்கு மணிமார்பா
செருக்கா லேமிகுந்த கடற்சூர் மாளவென்ற
திறற்சேர் வேல்கை கொண்ட முருகோனே
தினைக்கோர் காவல்கொண்ட குறத்தேன் மாதுபங்க
திருப்போரூரமர்ந்த பெருமாளே.

நிலையாத சமுத்திரமான
சமுசார துறைக்கணின் மூழ்கி
நிசமான தெனப் பல பேசி அதனூடே

நெடுநாளு மழைப்புள தாகிப்
பெரியோர்க ளிடைக் கரவாகி
நினைவால் நினடித் தொழில் பேணித் துதியாமல்

தலையான உடற்பிணி ஊறிப்
பவநோயின் அலைப்பல வேகிச்
சலமான பயித்தியமாகித் தடுமாறித்

தவியாது பிறப்பையு நாடி
அதன்வேரை அறுத்துனை ஓதித்
தலமீது பிழைத்திட வேநின் அருள்தாராய்

கலியாண சுபுத்திரனைக்
குறமாது தனக்கு
கவினுறு புயத்திலு லாவி விளையாடிக்

களிகூரு முனைத்துணை வேடு
மடியேனு னருட்பெற வேவை
கடனாக முனக் கருளான முருகோனே

பலகாலு முனைத் தொழுவோர்கள்
மறவாது திருப்புகழ் கூறிப்
படிமீது துதித்துடன் வாழ அருள்வேளே

பதியான திருத்தணி மேவு
சிவலோக மெனப் பரிவேறு
பவரோக வயித்திய நாதப் பெருமாளே

நினைத்த தெத்தனையில் தவறாமல்
நிலைத்த புத்திதனைப் பிரியாமல்
கனத்த தத்துவமுற் றழியாமல்
கதித்த நித்தியசித் தருள்வாயே
மனித்த பக்தர் தமக் கெளியோனே
மதித்த முத்தமிழிற் பெரியோனே
செனித்த புத்திரரிற் சிறியோனே
திருத்தணிப் பதியிற் பெருமாளே.

நீலங்கொள் மேகத்தின் சிகிமீதே
நீவந்த வாழ்வைக்கண் டதனாலே
மால்கொண்ட பேதைக் குன் கடிநாறும்
மார்தங்கு தாரைத்தந் தருள்வாயே
வேல்கொண்டு வேலைப் பண் டெறிவோனே
வீரங்கொள் சூரர்க் குங் குலகாலா
நாலங்க வேதத்தின் பொருளோனே
நானென்று மார்தட்டும் பெருமாளே.

## வள்ளிமலை

குடி வாழ்க்கை அன்னை மனை யாட்டிபிள்ளை
குயில்போற் ப்ரசன்ன மொழியார்கள்
குலம் வாய்த்த நல்ல தனம் வாய்த்த தென்ன
குருவார்த்தை தன்னை உணராதே
இடை நாட்கள் வெயய நமனீட்டி தொய்ய
இடர்கூட்ட இன்னல் கொடுபோகி
இடுகாட்டில் என்னை எரியூட்டு முன்னு
னிரு தாட்கள் தம்மை உணர்வேனோ
வடநாட்டில் வள்ளி மலைகாத்து புள்ளி
மயிலூர்க்க வல்ல குமரேசா
வடி வாட்டி வள்ளி அடிபோற்றி வள்ளி
மலை காத்த நல்ல மணவாளா
அடிநாட்கள் செய்த பிழை நீக்கி என்னை
அருள்போற்றும் வண்மை தருவாழ்வே
அடிபோற்றி அல்லி முடிசூட்ட வல்ல
அடியார்க்கு நல்ல பெருமாளே.

## போற்றி

சண்முகக் கடவுள் போற்றி சரவணத் துதித்தாய் போற்றி
கண்மணி முருகா போற்றி; கார்த்திகை பாலா போற்றி
தண்மலர்க் கடப்ப மாலை தாங்கிய தோளா போற்றி
விண்மதி வதன வள்ளி வேலவா போற்றி—போற்றி

## வாழ்த்து

தூய்ய தாமரைகளாலும் துதித்திட அரியதான
செய்ய பேரடிகள் வாழ்க சேவலும் மயிலும் வாழ்க
வெய்ய சூர் மார்பு கீண்ட வேற்படை வாழ்க—அன்ஞன்
பொய்யில் சீர் அடியார் வாழ்க; வாழ்க இப் புவனமெல்லா

## சரணம்

முருகா சரணம் முருகா சரணம்
முருகா சரணம் முருகா சரணம்
அன்பர்கள் நேயா அம்பிகை புதல்வா
துன்பமகற்றிடும் சீலா பாலா
சிவகுமரா முருகா வருகா

பரம புருஷா வரந்தர வருக
சலங்காதெனையே காத்திடு முருகா
மலந்தானணுகா வரந்தா முருகா
காவா முருகா கார்த்திகைக் குமரா
வாகா முருகா சாகா வரந்தா
வாவா முருகா வினை தீர்த்திடவே
யோகா முருகா பகை மாற்றிடவே

பொன்னடி போற்றிப் பணிந்திடவே
சென்னியிலுன்னடி ஓங்கிடவே
தேடிய நலங்கள் செறிந்திடவே
பாடிய புகழ்கள் மலிந்திடவே

கூடிடும் அன்பர் கும்பிடவே
அன்பாய் அவர்தாள் சூடிடவே
சூடிடவே யான் சூடிடவே
அன்பாய் அவர்தாள் சூடிடவே
முருகா சரணம் முருகா சரணம்
முருகா முருகா சரணம் சரணம்

வேலும் மயிலும் துணை.

